Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, வைகாசி 23-ஆம் நாள். (6-6-59) சனிக்கிழமை இதழ் 18.

# இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படுமாம்

## மந்திரிசபையில் பெரிய மாற்றங்கள்?
## விமலா, குருப்பு, ஜயசூரியா விலகக்கூடும்

— நமது அரசியல் நிருபர் —

இலங்கை மந்திரி சபையில் ஏற்படக்கூடிய மாற்றங்களைப்பற்றிப் பலவித வதந்திகள் உலவுகின்றன.

- சுகாதார மந்திரியாகவுள்ள விமலா விஜயவர்த்தனவும், ஸ்தலஸ்தாபன மந்திரி ஜெயவீர குருப்பும் உள்நாட்டு மந்திரி ஏ. பி. ஜயசூரியாவும் புதிய மந்திரி சபையில் இருக்கமாட்டார்கள். குருப்புவுக்கு உடல் நலம் சரியில்லாததாலும் விமலா சொந்தக் காரணங்களாலும் விலகுவதாகக் கூறப்படுகிறது.
- உள்நாட்டு மந்திரியாகவுள்ள ஏ. பி. ஜயசூரியா லண்டனில் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படலாமென்றும்,
- நாத்தாண்டியா பிரதிநிதியான ஹியூ பர்னாண்டோ உணவு மந்திரியாகலாமென்றும்,
- அரசாங்கக் கட்சியில் மீண்டும் சேர்ந்த நாவலப்பிட்டி பிரதிநிதியான ஆர். ஈ. ஜயதிலக்காவுக்கு தொழில், அல்லது வர்த்தக, கைத்தொழில் மந்திரி பதவிகிடைக்குமென்றும்,
- ஆர். ஜீ. சேனநாயக்கா, வர்த்தக கைத்தொழில் இலாகாக்களை விட்டு விட்டு, விவசாய மந்திரியாகலாமென்றும்,
- இலங்கரத்னவுக்கு தொழில் இலாகாவுக்குப் பதில் உள்நாட்டு; கலாச்சார மந்திரி பதவி கிடைக்கலாமென்றும்,
- சுகாதார உதவி மந்திரி கலுகல்லாவுக்கு சுகாதார மந்திரி பதவி கிடைக்கலாமென்றும் கூறப்படுகிறது. கடைசி நேரம் திடீரென வேறு மாறுதல்களும் ஏற்படலாம்.

### திங்களன்று வெளியாகும்

இதை நான் எழுதுகையில், முடிவான தீர்மானம் எதுவும் செய்யப்படவில்லை. பல மந்திரிகளும் 'குசு குசு' கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள். வருகிற திங்கட்கிழமையன்று திருத்தப்பட்ட புதிய மந்திரிசபை விபரங்கள் வெளியாகும்.

பிலிப்பும், வில்லியமும் விலகு முன் மொத்தம் 15 மந்திரிகள் இருந்தனர். இந்த எண்ணிக்கையை 13க்குக் குறைக்க வேண்டுமென்றும், சின்ன இலங்கைக்கு அதிக மந்திரிகள் தேவையில்லை என்றும் "டெயிலி நியூஸ்" பத்திரிகை கூறுகின்றது.

ஆனால் தமது கட்சிக்கு 'மெஜாரிட்டி' பலத்தைத் திரட்டுவதற்காகப் பிரதமர் சிலருக்கு மந்திரி பதவிகளை அளிக்க வேண்டியிருப்பதாயும் அதனால் மந்திரிகளின் எண்ணிக்கையைப் பிரதமர் குறைக்க முடியாதென்றும் மதிக்கப்படுகின்றது.

பண்டாரநாயக்காவுக்கு இப்போது 'மெஜாரிட்டி'பலம் மீண்டும் கிடைத்துவிட்டது. அவர் கட்சியில் 50 பேரும் எதிர்க் கட்சியில் 48 பேருமுள்ளனர். இன்னும் இருவர் அரசாங்கக் கட்சியில் சேர்ந்து விடலாம். ஆகவே பிரதமர் பண்டாரநாயக்கா நீடித்து ஆட்சி அதிகாரம் வகித்துவரலாமென்றும், எதிர்க்கட்சிகளெல்லாம் சேர்ந்தாலும் அரசாங்கக் கட்சியை இப்போது பார்லிமெண்டில் தோற்கடிக்க முடியாதென்றும் நம்பப்படுகின்றது.

இந்த அரசாங்கத்தை இச்சமயம் தோற்கடித்து, பொதுத் தேர்தல் நடத்தவேண்டுமென்ற ஆவல் எதிர்க்கட்சித் தலைவரான டாக்டர் என். எம் முக்கு இல்லை. பொதுத் தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர் உடனடியாகச் செய்ய முடியாதிருப்பதே இதற்குக் காரணமாம்.

### சமஷ்டிக்கட்சி

அதற்கு அடுத்தபடி எண்ணிக்கையுள்ள தமிழரசு அல்லது சமஷ்டிக் கட்சியினரும் பொதுத் தேர்தலை இப்போது விரும்பவில்லை. இந்நிலையில் பொதுத் தேர்தல் நடந்தால், வகுப்பு வெறிகள் மீண்டும் கிளம்பி, தமிழ் மக்களைப்பாதிக்கக்கூடும். இதே அரசியல் அமைப்பின்படி நடைபெறும் தேர்தல் முடிவுகள், இப்போதுள்ள நிலைமையைவிட மேலாக இருக்குமென்பது மிகவும் சந்தேகம்.

இதற்கு மாறாக "சிங்கள ஸ்ரீ" பஸ் பிரச்சனை விஷயமாக அக்கட்சியினர், பிரதமர் பண்டாரநாயக்காவுடன் நேரில் பேச விரும்பியதற்கு, பிரதமரும் உடன் சம்மதித்துள்ளார்.

சிங்கள ஸ்ரீ பஸ்ஸுகளெல்லாம் புதியவை. மற்ற பஸ்ஸுகள் பழைய பாடாவதிகளாகி வருகின்றன. சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு காரணமாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இப்போது பழைய லொட லொட்டை பஸ்ஸுகளை ஓடுவதால், பொது மக்கள் பெரிதும் சங்கடத்துக்கு உள்ளாகி வருகிறார்கள்.

[9ம்- பக்கம் பார்க்க]

## 'என் அலங்கோலத்தைப் பார்!'
### தொழில் நுட்பக் கல்லூரியின் சோகநிலை

யாழ்ப்பாணம், கொக்குவிலிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டுள்ளனர். எனவே விரைவில் அங்கு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சர் செய்துவருவதாகத் தெரிகிறது. ஆனல் இக்கட்டடம் என்ன நிலையில் இருக்கின்றதென்பதை நேரிற் கண்டவர்களால் தான் அறிய முடியும்.

இராணுவத்தினர் அங்கு செல்வதற்கு முன் அக் கட்டடம் இருந்த நிலையென்ன? இன்று அதன் கதி என்ன? ஒரு புதிய கட்டடம் என்று சொல்ல முடியாத முறையில் அதன் அறைகளும் சுற்றுடலும் காட்சியளிக்கின்றன. சுவர்கள் யாவும் அழுக்குப் படிந்து அருவருப்பான தோற்றத்தை அளிக்கின்றன. அறைகள் யாவும் குப்பை கூளங்களும் கழிவுப் பொருள்களும் நிறைந்த பெரிய தொட்டிகளைப்போலக் காட்சிதருகின்றன.

இம்மாடிக் கட்டடத்தை வெளியே நின்று பார்க்கும் போது எத்தகையவர்கள் அங்கு குடியிருந்திருப்பார்கள் என்பதை உள்ளே சென்று பார்க்காமலே அறிந்து கொள்ளலாம். 'என்னைப் பார் என் அலங்கோலத்தைப் பார்' என்று சொல்லி அழுவது போல் அக்கட்டடம் தோற்றமளிக்கின்றது.

## இந்தியக் குடியரசுத் தலைவர் 22-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்

இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் இம்மாதம் 16-ம் திகதி கொழும்பு வந்துசேருகின்றார். அவர்களுக்கு மகத்தான முறையில்வரவேற்பு அளிப்பதற்கான ஒழுங்குகளை அரசினர் சுறுசுறுப்புடன் கவனித்துவருகின்றனர். 17-ம் திகதி இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் வெள்ளவத்தையில் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண கலாசார இல்லத்தைத் திறந்து வைப்பார்கள் அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களுக்கு 18, 19--22-ம் திகதிகளிற் செல்வார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் 22-ம் திகதி விஜயமசெய்கின்றார்கள். சில மணித்தியாலங்கள் மட்டுமே அவர்கள் இங்கு தங்குவார்கள்.

## சேவை மனப்பான்மை மிகுந்த சுவாமி நிச்ரேயஸானந்தாஜிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தின் வளர்ச்சி தமக்குப் பெரு மகிழ்ச்சியூட்டுவதாகவும் அது பல்லாண்டு வாழ்ந்து நற்பணியாற்றவேண்டுமெனவும் சுவாமி நிச்ரேயஸானந்தாஜி வித்தியாலயத்திற் சென்ற வெள்ளிக்கிழமை மாலை அன்னருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது குறிப்பிட்டார்.

வித்தியாலயஅதிபர் திரு. ச. அம்பிகைபாகன் சுவாமிகளை வரவேற்றுப் பேசும் போது குறிப்பிட்டதாவது: நான் சென்னை செல்லும் காலங்களில் எல்லாம் சுவாமி அவர்கள் வித்தியாலயத்தைப்பற்றி ஆவலுடன் கேட்பதுண்டு. சேவை மனப்பான்மை மிகுந்த எங்கள் சுவாமி, மக்கள்பணியே இறை பணியெனக் கருதி அவ்வழி ஒழுகுபவர். அவருடைய தெளிந்த ஞானமும் சிந்தனை வளமும் அவருக்குப் பெரும் புகழ் ஈட்டிக் கொடுத்துள்ளன. இத்தகையஒரு பெரியாரை வரவேற்பதில் எங்கள் வித்தியாலயம் மாத்திரமன்றி இந்நாடும் பெருமையடைகின்றது.

சுவாமிகளை வரவேற்று உபசரிப்பதற்காகவித்தியாலயஅதிபரும் ஆசிரியர்களும் ஏற்படுத்திய சிற்றுண்டி விருந்து வைபவத்திற் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## 1961-இல் சிங்களத்தில் கடிதப் போக்குவரத்து அரசினர் செய்துள்ள தீர்மானம்
### புகையிரதப்பகுதிக்குச் சுற்றறிக்கை

இலங்கைப் புகையிரதப் பகுதி, அனுராதபுர மாவட்டத்தின் மேற்பார்வையாளர் பின்வரும் சுற்றறிக்கையைத் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ளவர்களுக்கு அனுப்பியுள்ளார். அது வருமாறு: 1961ம்ஆண்டிலிருந்து சகல கடிதப் போக்குவரத்துக்களும் சிங்களத்தில் நடைபெற வேண்டுமென அரசினர் தீர்மானித்துள்ளனர். சிங்களத்தைத் தவிர்ந்த பிறமொழிகளில் எழுதப்படும் கடிதங்கள் சட்டத்துக்குமுரண்பாடானதாகுமாம், எனவே. ஆரம்பத்தில் காரியாலய நிர்வாகம் சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்களைச் சிங்களத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்களத்தில் கடிதங்கள் எழுதக்கூடியவர்களும், ஒழுங்கு முறை, கட்டுப்பாடு சம்பந்தமான விசாரணைகளைச் சிங்களத்தில் நடத்தக்கூடியவர்களும் உடனடியாகவே அவ்வாறு செய்வார்களாயின் அது பெரிதும் விரும்பத்தக்கதாகும். தங்கள் பணியாளர்களுக்கு இதனை அறிவுறுத்தி வைப்பதுடன் இக்கடிதம் கிடைத்ததைப் பற்றியும் தெரிவிக்கவும்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

BRIDGESTONE TYRES

Distributors

TUCKERS AUTODROME

ஏகவினியோகஸ்தர்கள்

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 49 தந்தி: "ஓட்டோஸ்"

### தேவை

ஆசிரியர் ஒருவருக்கு உதவியாக இருப்பதற்கு ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. அறிவும், தமிழில் நல்ல ஆர்வமும் தேர்ச்சியுமுள்ள மாணுக்கன் தேவை. பத்திரிகைத் தொழிலில் ஊக்கமுள்ளவராயிருப்பின் அத்துறையில் அவர் பயிற்சி பெறச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு :

X, 2 c/o த. பெ. இல. 49,
யாழ்ப்பாணம்.


## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# யாழ்ப்பாணம் சினிமாத் தியேட்டர்களில் நாகரிகப்போலிகள்

யாழ்ப்பாணம் சினிமாத் தியேட்டர்களில் சில வாலிபர்களின் குறும்பு அதிகமாகிக் கொண்டுவருவது வருத்தத்துக்குரியது.

பெண்களுக்கெனப் பிரத்தியேகமான ஆசனங்களை ஒதுக்கியிருந்தபோதும், முதலாவது வகுப்புப்போன்ற இடங்களில் ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலாரும் கலந்து அமரலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பெண்களின் ஆசனங்களுக்கு நேர் பின்னுகவோ அன்றி அருகினிலோ அமருபவர் கால்களால் அந்திப் பெண்களின் ஆசனங்களைத் தள்ளுவதுடன் கடலை முதலிய சில்லறைப் பண்டங்களை இருட்டில் எறிந்தும் தொந்தரவு செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் பண்பாடு இருந்துவருவதாகப் பேசிக் கொள்ளப் படுகிறது. இத்தகைய அருவருப்பான செயல்களைச் சகித்துக் கொண்டேபோனுல் அநாகரிகமான செயல் வளர்வதற்கு இடம் கொடுத்ததுபோலாகும். எனவே, தியேட்டர் சொந்தக்காரர், அதனை மேற்பார்வை செய்வோர் ஆகியோர் இது விஷயத்தில் கவனம் செலுத்துவது நலம்.

தியேட்டர்க்காரரின் கவனம் முழுதும் கலரிவகுப்பிலிருக்கும் அப்பாவி ஏழைகளிடத்திற் சென்று சிலசமயங்களில் அத்துமீறி அவர்களைத் தொந்தரவு செய்யத் தூண்டுகிறதே தவிர, நாகரிகமாகவரும் போலிகளைக் கண்டுபிடிப்பதில் தவறு ஏற்படுகிறது. எனவே இது விஷயத்தில் அவர்கள் முற்றுமுழுதான கண்காணிப்பைத் தந்து இரசிகர்களுக்கு வசதியளிக்க வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணம், **விசிறி.**

## 'ஆளிருக்க நிழலை அடித்தல்'

சென்ற இதழில் 'ஆளிருக்க நிழலை அடித்தல் அர்த்தமற்ற செயல்' என்ற தலைப்பில் வெளியான செய்தி எனது கவனத்தை ஈர்த்தது.

வண. பிதா மதுரநாயகம் சுவாமிகள் குறிப்பிட்டிருப்பது போலச் சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம் உண்மையிலேயே அர்த்தமற்றதாகும் என்பது எனது கருத்து. சிங்கள 'ஸ்ரீ' பொறித்துள்ள கார்களிலும், டாக்ஸிகளிலும், வான்களிலும் அநேகர் உல்லாசப் பிரயாணம் செய்ய ஏனையோர் மட்டும் கால்கடுக்க பஸ் ஸ்டாண்டில் தவம் கிடக்கவேண்டிய நிலை ஏனே? இதுபற்றி நமது அரசியற் தலைவர்களும், பொதுமக்களும் சிந்தித்து இப்பிரச்சனைக்கு ஒரு முடிவு காணுதல் அவசியமென்றே எண்ணுகிறேன்.

வவனியா. **'சிறி'யேன்.**

# 'கார்டு'கள் வேலை நிறுத்தம் தொழிலாளரின் எச்சரிக்கை

அனுராதபுரம்

வடபகுதிப் புகையிரதப் பாதையில் கேந்திர ஸ்தானமாக விளங்கும் அனுராதபுரப புகையிரத நிலையம், யாழ்ப்பாணம் மன்னுர் போன்ற இடங்களிலிருந்து வரும் பிரயாணிகளின் இளைப்பாறும் நிலையமாகவும் இருந்து வருகிறது. ஆகவே இங்கு நடைபெறும் வேலை நிறுத்தம் பிரயாணிகள் பலரைப் பாதித்துவருகின்றது.

சென்ற மூன்று தினங்களாக புகையிரதப் போக்குவரத்து முற்ருக ஸ்தம்பிக்கப் பட்டுள்ளதால், யாழ்ப்பாணம் செல்லுவோரும், கொழும்பு செல்லுவோரும் இ. போ. ச. பஸ் நிலையத்தைப் படையெடுத்து வருகின்றனர்.

### தபால் விநியோகம்

இக்காரணங்களால் தபால் போக்குவரத்து சீர் குலைந்துள்ளது. பொதுமக்களது அதிருப்திக்கு ஏற்கனவே இலக்காயிருந்த தபாற்பகுதியினர் இப்போது சறுக்கியதுதான் சாட்டு என்ற ரீதியில் ஆனந்தமாக, ஆறுதலாகத் தபால் விநியோகம் செய்து வருகிருர்கள் என்ற புகாரும் எழுந்துள்ளது.

புகையிரத கார்டுகளின் வேலை நிறுத்தத்தை திருப்பிப் பெறும்படியும், வேலைக்கு உடனடியாகத் திரும்புமாறும் அனுராதபுரம் கனிஷ்ட தொழிலாளர் சங்கம் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்திற் கேட்டுள்ளது. ஆர்ப்பாட்டம், அமளிதுமளிகளை அடக்க போலீஸார் குறுக்கிட்ட அக் கூட்டத்தில் மறைந்து போகும் மொழி வெறியைத் தூண்டும் வகையில் பேச்சுகள் அமைந்திருந்தன.

### காரணம் என்ன

அனுராதபுரப் பகுதி ஸ்டேஷன் மாஸ்டர்கள் யூனியனைச் சேர்ந்தவர்கள்—தமிழ் நிர்வாகிகள்—கார்டுகளின் வேலை நிறுத்தத்தில் ஆதரவு காட்டுவதே அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. கனிஷ்ட தொழிலாளரை நசுக்கும் எண்ணத்தால்தான் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டப்பட்டது. வேலை நிறுத்தம் திருப்பிப் பெருவிட்டால் கார்டுகளைப் புனித நகரிலிருந்து விரட்டிவிடுவதாகவும் குறித்த தொழிலாளர்கள் எச்சரித்தனர்.

ஆனல் அதே நாளன்று நடைபெற்ற மற்ருெரு கூட்டத்தில் அனுராதபுர கார்டுகள் சங்கத் தலைவர் திரு. என். எல். ஜே. அப்தீண் அவர்கள் பேசுகையில் கனிஷ்ட தொழிலாளரை நசுக்கும் எண்ணம் தமக்கு இல்லை எனவும், இலஞ்ச ஊழல் காரணமாகப் படிப்பற்றவர்களை கார்டுகள் வேலைக்கு நியமிப்பதால் பொதுமக்கள் தான் கஷ்டப்படுவார்கள் என்றும் அதனுல் கார்டுகளின் வேலை நிறுத்தம் பொதுமக்களின் நலனுக்காகவே எனவும் குறிப்பிட்டார்.

# சிறப்புமிகு சிலப்பதிகாரம் கொழும்பில் இளங்கோ விழா

கொழும்பு ம. பொ. சி. மன்றத்தின் ஆதரவில் மேட்டுத் தெரு விவேகானந்தா சபை மண்டபத்தில் 11-5-59 திங்கட்கிழமை மாலை திருமதி பாலம் லக்ஷ்மணன் தலைமையில் இளங்கோஅடிகள் நினைவு விழா கொண்டாடப்பட்டது. தலைவர் தமதுபேச்சிற் கூறியதாவது:

உலகிலே பெண்களுக்கு ஓர் உன்னத ஸ்தானத்தை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின்மூலம் தந்துள்ளார். அதில் பெண்ணின் பெருமை மலையென உயர்ந்திருக்கிறது. அத்துடன் தியாக உணர்வையும், நீதிக்காகப் போராடும் வீர எழுச்சியையும் இளங்கோவடிகள் நமக்கு தந்துள்ளார். தமிழ்நாட்டின் சூழ்நிலைக்கேற்ற முறையில் இக் காப்பியத்தை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். காலப்போக்கில் சிலப்பதிகாரத்தின் பெருமை மறைந்துகொண்டிருந்த நிலையில் தமிழ்த் தலைவர் ம. பொ. சி. அவர்கள் இச் சிறப்புமிகும் காப்பியத்தை நம் முன் நடமாடச் செய்தார். அவர் பெயர் கொண்டுள்ள இம் மன்றமும் ஈழத்தில் நற்பணி செய்து வருவதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கொழும்பு தமிழ்மறைக் கழகத்தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையிற் குறிப்பிட்டதாவது: தாயகமாகிய தென்னகத்தில் தமிழ் மக்களின் சமய விழாக்கள் நடைபெறக்கூடிய இதேதினத்தில்தான் இங்கும் விசேஷ பௌத்தமத திருவிழா வைபவங்களும் நடைபெறுகின்றன. கண்டியிலுள்ள தலதா மாளிகாவிலும் பத்தினித் தெய்வமென்ற பெயரால் கண்ணகி வழிபாடு நடைபெறுகின்றது. சிங்களவர்களும் சிலப்பதிகாரத்தைப் போற்றி அதற்கு விழா எடுக்கக்கூடிய காலம் வெகு தூரத்தில் இல்லை.

அருள் ஒளிச் சபைத்தலைவர் திரு. கே. பி. அரன் பேசியதாவது: தெய்வ வழிபாடுகளை நாம் மறக்கலாகாது. ஒருசிலர் செய்யும் தவறுக்காக நாம் மத சம்பிரதாயங்களைப் புறக்கணித்துவிடக்கூடாது, சிலப்பதிகாரம் போன்ற பெரும் காப்பியங்களும் இலக்கியங்களும் நமக்கு இதனையே போதிக்கின்றன.

திருமதி கோகிலம் சுப்பையா தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது: தோட்டங்களிலுள்ள பெண் தொழிலாளர் ஒவ்வொருவரும் இன்று ஒவ்வொரு கண்ணகியாகவே வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தினமும் போராடி வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து மன்றத் தலைவர் திரு. கே. குமாரசாமியும், மன்ற துணைத்தலைவர் திரு. செ. முத்தரசுவும் "தீபம்" ஆசிரியர் திரு. இராமச்சந்திரன் ஆகியோரும் பேசினர். செயலாளர் திரு. த. மணி அனைவருக்கும் நன்றி கூறினர்.

## சைவத்தின் அழியாத் தன்மை

வவனியா தாண்டிக்குளம் இராமகிருஷ்ண சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையில் திருஞானசம்பந்தர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆதி அந்தமற்ற சைவ சமயம் அழியாத் தன்மை வாய்ந்ததென்பதைச் சமய குரவர்களின் அற்புதங்களுடன் ஒன்றுபடுத்தித் தலைமை ஆசிரியர் திரு. த. யோகநாதன் அரியதொரு விரிவுரையாற்றினர். செல்வியர் க. இராசலட்சுமியும் சு. தவமணியும் தேவாரப் பாடல்கள் பாடினர்.

## தோழர் கே. அப்பன்ராஜ் இலங்கை வருகை

தமிழ்நாடு சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரும்' 'மனிதகுலம்' பத்திரிகையின் ஆசிரியருமாகிய தோழர் கே. அப்பன்ராஜ் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருகின்ருர். லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் கூட்டங்களில் கலந்து சொற்பொழிவாற்றுமாறுகளனி வேலி ஜில்லாப் பிரதிநிதி தோழர் நா. பொ. தருமலிங்கத்தின் அழைப்பை சினிமா டைரக்டரான திரு. வி. ஸ்ரீனிவாசனும் ஏற்றுப் பார்வையாளராகக்கலந்துகொள்கிருர்கள் இவர்கள் யாழ்ப்பாணத்திலும் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்கள்.

# இந்தியத் தூதுவருக்கு நீர்வேலியில் வரவேற்பு

நீர்வேலிச் சமுதாய முன்னேற்றக்கழகத்தின் ஆதரவில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மேன்மை தங்கியவை. டீ. குந்தேவியா அவர்களுக்கு ஒரு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது.

மாதர் சங்கத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு குந்தேவியா தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது: விருந்தோம்பலை மேன்மையாய் மதித்துவரும் இலங்கை வாசிகள், இந்தியச் சகோதரர்களின் நல்லுறவை மதித்துக் கௌரவித்து வருகின்றனர் என்பதை நான் உணருகிறேன்.

உங்கள் பாலர் பகல்நேர விடுதி, சனசமூகநிலையம், மாதர் சங்கம் முதலிய செவ்வனே நடைபெற்று வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். பொருளாதார சுபிட்சம், சமூக முன்னேற்றம், கல்வி அபிவிருத்தி, சமயப்பற்று ஆகியவற்றில் மக்கள் அதிக கவனஞ் செலுத்தி வருவது மகிழ்ச்சிக்குரியது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா, உதவி அதிபர் திரு. கே. தெட்சணமூர்த்தி, காரியாதிகாரி திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை, கிராம முன்னேற்ற இயக்க மேற்பார்வையாளர் திரு. கே. எஸ். முத்துவேலு ஆகியோருடன் திரு. குந்தேவியா கோப்பாய் ஐக்கிய சுருட்டுத் தொழிற்சாலை, பன்னவேலைப் பயிற்சிநிலையம், நீர்வேலி நெசவுப் பயிற்சி நிலையம் என்பனவற்றைப் பார்வையிட்டார்.


## வரி விளம்பரம்

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

**கார்** ஒப்பல் கப்பித்தான் **(OPEL KAPITAN)** இலக்கம் **EL 9900** - மிக உயர்வான நிலைமையுள்ளது. 35,000 மைல் வேலைசெய்துள்ளது. விபரங்கட்கு, 41, கல்லூரி வீதி, வண்ணுர்பண்ணை.

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானுல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானுல் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள், சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

பட்டு, பருத்தி, புடைவைகள், தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.



'ஹென்றலி' உடை அலங்காரத்தின் உன்னத அடையாளமாகும்

# ஹென்றலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்

**ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,**
பழைய விமான நிலைய வீதி,
( Old Air Port Road )
இரத்மலானை.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏழாம் திகதிவரை அகில இலங்கைச் சுகாதார வாரம் நாடுமுழுவதிலும் கொண்டாடப்படுகின்றது.

'கல்வி பயிலும் பருவம் அடையாத சிறுவரின் சுகாதாரம்' என்பதே இவ்வாண்டுச் சுகாதார வாரத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. இத்துறையிற் பேராசிரியர் ஸி. ஸி. டி' சில்வா மேலான அறிவு படைத்தவர். இப்போது அவர் அமெரிக்காவிற் சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றார். அவர் எழுதியுள்ள இக்கட்டுரை அனைவருக்கும் உபயோகமானது.

# கல்விபயிலும் பருவம் அடையாத சிறுவரின் சுகாதாரம்

பேராசிரியர் ஸி. ஸி. டி' சில்வா
[மொழிபெயர்ப்பு: நந்தி]

மனிதனுடைய வாழ்க்கையில். பாடசாலைக்குப் போவதற்கு முன்னுள்ள பருவந்தான் மிகவும் கவனிக்கப்படாத காலம் என்பது மறுக்க முடியாத உண்மை. முதலாம் வருடத்திற்கும் ஐந்தாம் வருடத்திற்கும் இடையில் பிள்ளை பல விதமான நோய்களுக்கு இலக்காகின்றான். இந்த வயதினர் தான் இப்படியான நோய்களினால் இறப்பதற்கும் அதிக சந்தர்ப்பம் உண்டு.

தொண்டைக் கரப்பன், குக்கல் போன்ற தொற்று நோய்கள் நமது பிள்ளைகளை இன்னும் அடிக்கடி வருத்தி, சில வேளைகளில் கொன்றுவிடுகின்றன. மேல் நாடுகளில் இந்த நோய்கள் வைத்திய மாணவர்கள் பார்த்துப் படிப்பதற்குக் கூட அகப்படுவது அருமை.

குழந்தை வைத்தியசாலையில் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 2000 பிள்ளைகள் வயிற்றுப் போக்குக்காகவும் 3000 பிள்ளைகள் சுவாசக் குழாய்கள் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்காகவும் அனுமதிக்கப்படுகிறார்கள். எங்கள் குழந்தைகளின் உடல் வலிமை அதிகரித்தால் தான், அவர்கள் இத்தகைய நோய்களிலிருந்து தப்புவார்கள்.

எங்கள் சிகிச்சை நிலையங்களுக்கு வரும் குழந்தைகளில் 75 சத விகிதமானவர்கள் நிறை குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். அத்துடன் ஒவ்வொரு வருடமும் 200 — 400 பிள்ளைகள் 'குவாஷியோகோர்' என்ற நோயினால் வருந்துகிறார்கள். பிள்ளைகளின் உணவில் புரதச் சத்துமிகவும்குறைந்தாலேகுவாஷியோகோர்' உண்டாகிறது. போலி வைத்தியர்கள் போதிக்கும் ஒரு பொய்க்கதை எங்கள் நாட்டு மக்களிடம் வேரூன்றிவிட்டது. ' அதாவது பாலும் சோறும் சேர்ந்தால் புழுக்களை உற்பத்தியாக்கும் என்பது. இதனால் தாய்மார் குழந்தைக்கு சோறு தீத்தத் தொடங்கியதும் தாய்ப்பால், பசுப்பால், புட்டிப்பால் எல்லாவற்றையும் நிறுத்திவிடுகிறார்கள். வளரும் குழந்தைக்கு இதைப்போல் கேடுதரக்கூடிய கொடிய செய்கை வேறு இருக்க முடியுமா?

### பால் கொடுங்கள்

**'வளரும் பிள்ளைகளுக்கு, முக்கியமாக ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, அதிகம் பால் கொடுங்கள். முடியுமானால் ஐந்து வயதிற்குப் பின்பும் கொடுங்கள்'** என்ற மந்திரச் சுலோகத்தை இலங்கை வானொலி நிலையத்தார், சிங்கள — தமிழ் பத்திரிகை ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கோவில் பூசாரிகள், நாட்டுப்புற வைத்தியர்கள் தினமும் உச்சரிப்பார்களானால், எங்கள் குழந்தை நோய்களில் பெரும்பகுதி ஆதவன் முன் பனியென மறையும். நமது குழந்தைகளுக்குப் பால் கிடையாதிருப்பதற்கு அறியாமையுடன் வறுமையும் காரணமாகும். சில வேளைகளில் நல்ல பாலை வாங்குவதே சிரமமாகிவிடுகிறது. 'ஸ்கிம் மில்க்' எனப்படும் கொழுப்புக் குறைந்த பால்மா பெரிய பிள்ளைகளுக்கு நல்லது. அத்துடன் மீனெண்ணெய் கொடுப்பது, அல்லது நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் சேர்ந்த உணவு கொடுப்பது அவசியம்.

பாலுக்குப் பதிலாகக் கொடுக்கக்கூடிய உணவு உண்டா? ஆம், பால் வாங்க முடியாத தாய்மார்கள் பருப்பு, பயறு முதலியவற்றைக் கொடுக்கலாம். இவற்றில் ஏராளமான புரதம் உண்டு. பால் வாங்க பணம் இல்லாவிட்டால் முட்டையும் வாங்க முடியாது தானே. ஆனால் முட்டை கொடுக்கக்கூடிய வசதி இருந்தால் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும். முட்டையில் அருமையான புரதம், கொழுப்பு, இரும்புச் சத்து முதலியவை உண்டு. தயை செய்து கவனியுங்கள், முட்டையில் மஞ்சட்கருத்தான் முக்கியமானது, வெள்ளையல்ல. நெத்தலிக் கருவாடு ஏராளமான புரதச் சத்தைத் தரும் உணவு. ஆனால் மலிவானது. ஒரு அவுன்ஸ் மாட்டிறைச்சியில் 5 கிறும் புரதம் உண்டு. ஆனால் ஒரு அவுன்ஸ் நெத்தலிக் கருவாட்டிலோ 10—12 கிறும் புரதம் கிடைக்கும். இன்னும் **சொல்லவேண்டுமா? நெத்தலிக் கருவாட்டைப் பல தடவை சுடு**தண்ணீரில் கழுவி, காயவைத்து, இடித்துத் தூளாக்கி மரக்கறிச் சூப்புடன் ஏழுமாதக் குழந்தைப் பருவத்திலேயே கொடுக்கத் தொடங்கவேண்டும். பெரிய பிள்ளைகளுக்கு கறியாகவோ, பொரித்தோ கொடுக்கலாம்.

### சீவசத்து

'வைட்டமின்' எனப்படும் சீவசத்து 'ஏ' யும், ரைபோபிளேவினும் குறைவினால் ஏற்படும் நோய்களையும் அதிகமாக இந்த வயதினிடையே காண்கிறோம். வைட்டமின் 'ஏ' குறைவதனால் கண்ணில் வெள்ளை விழி உலர்ந்து அழுக்கு நிறமாகத் தோன்றும். அதில் வெள்ளை நிறப் புள்ளிகள் சிறு குவியல்களாகக் காணப்படும். வெண் விழி மென்மையாகி, சிவந்து கெரற்றோமலேசியா என்ற நோய் உண்டாகலாம். இதுவைட்டமின்'ஏ' 'பி' இரண்டும் உணவில் குறைவதால் உண்டாவது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். நமது நாட்டில் 4000 குழந்தைகள்வரை கண் ஒளி இழந்து வாழ்நாளைப் பயங்கர இருளில் கழிக்கிறார்கள். இவர்களில் கடைசி 2000 பிள்ளைகள் தவிர்க்கக்கூடிய காரணங்களால் குருடான பாவிகள். அதாவது குழந்தைப்பருவத்திலே சரியான உணவுவகைகளை உண்ணாததால் பார்வையை இழந்தவர்கள். இது பெற்றோருக்கும் மற்றோருக்கும் துக்கமும் வெட்கமும் தரும் செய்தியல்லவா?

### பழவகை

வைட்டமின்'ஏ'மீன்எண்ணெய், வெண்ணெய் முதலியவற்றில் அதிகமாகவும் முட்டை பால் இரண்டிலும் சொற்பமாகவும் கிடைக்கும். மஞ்சள்நிறமான பழங்களையும் காய்களையும் நாம் உண்ணும்போதும் வைட்டமின் 'ஏ'ஐப் பெறுகிறோம். நமது நாட்டில் எத்தனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பப்பாளிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் முதலிய பழங்களைக் கொடுக்கிறார்கள்? முதல் இரண்டு பழங்களும் வைட்டமின் 'ஏ' ஐத்தரவல்ல கரோட்டீனை உடையவை. வாழைப்பழத்தில் கரோட்டீன் குறைவானாலும் அது குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியதற்குப் பல காரணங்கள் உண்டு. உண்மையில் ஐந்தாவது மாதம் தொடக்கமேகுழந்தையின் உணவில் வாழைப்பழம் சேரவேண்டும். வாழைப்பழம் குளிர் என்றும் பூச்சியை உண்டுபண்ணுமென்றும் தாய்மார் தப்பாக எண்ணுவதாலேயே குழந்தையின் கண்ணில் ருசியான இப்பழம் படுவதில்லை. அதேபோல் பப்பாளிப்பழத்தையும் மாம்பழத்தையும் தாய்மார் குழந்தைகளுக்குக் கொடுப்பதில்லை. ஏன்? 'அவை இலகுவில் சீரணிப்பதில்லை, சூடு' என்றுதான் தோன்றி வைத்திய நிபுணர்களும், பழங்காலத்துப் பாட்டிகளும் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அதுதான் காரணம். உண்மையில் ஐந்து அல்லது ஆறு மாதக் குழந்தைக்குக்கூட இப் பழங்களை நன்றாகப் பிசைந்து கொடுக்கலாம். அவற்றில் வைட்டமின்'ஏ' மாத்திரமல்ல 'சீ' யும் உண்டு.

**வைட்டமின் 'பீ2' அல்லது ரைபோபிளேவின்** பால், இறைச்சி, மீன், முட்டை முதலிய உணவுகளில் உண்டு. ஓரளவு தீட்டப்படாத அரிசியிலும் கோதுமையிலும் உண்டு.

### பெற்றோர் அறிவீனம்

அறிவீனத்தால் குழந்தைகளுக்குப் பெற்றோர் செய்யும் துரோகம் இன்னும் ஒன்று உண்டு. அதாவது ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அவர்கள் பாலைத்தவிர வேறு ஓர் உணவும் கொடுப்பதில்லை. பால் தாய்ப்பால் கூட, நாலு அல்லது ஐந்து மாதங்களுக்குப் பின்பு குழந்தையின் வளர்ச்சிக்குப் போதாது. தாய்ப்பாலில் புரதம், இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, வைட்டமின்கள் முதலியவை குறைவு. ஆகவே மற்ற உணவுகளும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மூன்றாம் அல்லது நாலாம் மாதத்தில் தோடம்பழச் சாற்றுடன் அல்லது எலுமிச்சம் பழச் சாற்றுடன் மீன் எண்ணெய் கொடுக்கவேண்டும். சோற்றுக் கஞ்சி, வாழைப்பழம், பப்பாளிப்பழம், மாம்பழம் 4-ம்—5-ம் மாதத்தில் மரக்கறி அல்லதுமரக்கறியும் எலும்பும் சேர்ந்த சூப்பு 5-ம்—6-ம் மாதத்தில். 7-ம் மாதத்தில் இதற்குள் சோறு, பருப்பு, நெத்தலி மீன் போன்றவற்றைச் சேர்த்துக் கொடுக்கலாம். இதே நேரத்தில் முட்டை, மஞ்சட்கரு, விஸ்கோத்து, பாண் முதலியவற்றை ஆரம்பிக்கலாம். பாலைக் குறைக்கலாம், ஆனால் நிறுத்தக் கூடாது.

தாய் தனது குழந்தைக்கு பால் கொடுப்பதை எப்போது நிறுத்தவேண்டும்? இதற்கு விடை தாயின் பொருளாதார நிலையில் தங்கியுள்ளது. தாய் தன் குழந்தைக்குப் போதுமான அளவு செயற்கைப் பால் வாங்கும் நிலையில் இருந்தால் 8—9 மாதத்தில் தாய்ப்பாலை நிறுத்தலாம். அவள் வறியவளானால் தன்னால் இயன்றவரை தாய்ப்பால் கொடுக்கலாம். மோல்ரெட் மாவை ஒருபோதும் குழந்தைக்கு உணவாகக் கொடுக்கக்கூடாது.

பிள்ளைகளை நாம் வேறு எந்த வழிகளில் காப்பாற்றமுடியும்?

1. குடிதண்ணீரைக் கொதிக்க வைப்பது அவசியம்.
2. தரையில் விழுந்த உணவுப் பொருள்களை எடுத்து வாயில் வைக்காது சிறு பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.
3. கண்ட இடங்களில் எல்லாம் மலம் கழிக்காது பழக்கவேண்டும்.
4. உணவில் ஈக்கள் மொய்க்காது பாதுகாத்தல் அவசியம்.
5. குழந்தை தினமும் பல் துலக்கி குளிக்கப் பழக்க வேண்டும்.
6. உண்பதற்கு முன்பும் அடி கழுவினதற்குப் பின்பும் கைகளைச் சோப்புப் போட்டுக் கழுவி சுத்தமாக்க வேண்டும்.
7. இருமல், தடிமல், வயிற்றுப் போக்கு முதலியவற்றால் வருந்தும் குழந்தைகளுடன் சுகமான பிள்ளைகளை விளையாட அனுமதிக்கப்படாது.

எங்கள் வைத்திய சாலைகளில் காணப்படும் குழந்தை நோய்களில் 70 சத விகிதமானவை தவிர்க்கக்கூடிய நோய்கள். நண்பர்களே, நர்ஸ்மார்களே, தாய்மார்களே, டாக்டர்களே, கல்வி அறிவில்லாத தாய்மார்களுக்கு மேற்கூறிய **சுகாதார அறிவுரைகளைப் புகட்டிக் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்.**

**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**
தபால் பெட்டி இல. 743.
**கொழும்பு 8.**

கற்பனைச் சித்திரம்

# எழிலாடும் பொழில் மங்கை

எஸ். வி. எல். செல்வநாயகம்

எங்கு செல்கிறேன்? அறியேன்; ஏன்? அதுவும் அறியேன். ஏதோ பிடர்பிடித்து உந்துகிறது. அதைமட்டும் அறியமுடிகிறது.

என்முன் ஓர் உருவம்; எழிலாடும் உருவம். அவள் யார்? ஊர்வசியா? ரம்பையயா? திலோத்தமையா? இல்லை! இல்லை! அவர்கள் தேவகன்னிகையர்களாம்! அப்போ இவள்? அவர்களை விஞ்சிய எழிலல்லவா இவளிடம் தெரிகிறது.

அவள் கண்கள் என்னையே உற்றுநோக்குகின்றன. இமைவெட்டா அவள் விழியில் ஓர் சோகம்; இரக்கம்; கசிவு; பற்று; பாசம்; கூடிக் குழைந்தன. என் மனம் எதையெதையோ அவாவுகின்றது. நான் அறிகிறேன். அது எது?

ஒருநாளும் காணாதது அவள் உருவம்; உருவகப்படுத்தவே முடியாதது. அவள் கொஞ்சும் விழிகள், ஊசலாடும் உணர்ச்சியின் தன்மைகள் எது?

* * *

ஆம்! அவள் ஓர் பெண்! மலராத மொட்டு. ஓவியத்தில் எழுதவொண்ணா அழகி. இயற்கையின் பிரதிபிம்பம். பிரமன் படைத்த அனைத்திலும் உயர்ந்தது. இப்படியே அவள் எனக்குத் தோற்றினாள்.

அவளை எப்படிக் கருதுவது? அவள் பார்வையில் மின்சாரத்தின் கவர்ச்சி ஜாடைகாட்டி மெல்லென என்னை அழைப்பது போன்று தெரிந்தது.

அவளுடன் பேசுவதா? பேசவேமுடியவில்லை! கண்களும் கண்களும் எப்படி எப்படியோ பேசிக்கொண்டுதான் இருந்தன. என்றுமே அறிமுகமற்றவள் என்னுடன் கண்ஜாலம் காட்டித் தன் உணர்ச்சியெல்லாம் கொட்டிப் பேசினாள். எதையெதையோ எல்லாம் பேசினாள்.

மின்னற் புன்னகை என்னை வாட்டியது. எதுவுமே உணராத பெற்றியுற்றேன். அங்கமெலாம் புளகாங்கிதம் கொண்டேன். இன்ப உணர்ச்சிகள் பேரலைகளாகப் பர்ணமித்தன.

இப்பொழுது நான் அறிந்தது ஒன்றேயொன்றுதான். பருவ உணர்ச்சியின் பெருந்திறல் கண்டேன். இறைவியைக் கண்டேன். பேரெழில் கண்டேன். இயற்கையின் மாட்சியைக் கண்டேன்.

* * *

உலகம் சிறிது சிறிதாகக் கருகிக்கொண்டே வந்தது. இந்நாள் முடிவுறவே வேண்டாம்; முடிவிலாப் பெருநாளாகட்டும்! இப்படி என் எண்ண அலைகள் அடம்பிடித்தன.

ஆனால் இயற்கைமட்டும் என் ஆக்ஞைக்குச் செவிசாய்க்கவில்லை. வஞ்சகமாக ஓடி ஒளித்துக்கொள்ள முயன்றது. ஏமாற்ற வினையில் இயற்கையுமா? இப்படி என் மனம் கடிந்துகொண்டது.

சூரியன்எங்கேயோஓடிஒளித்துக் கொண்டான். காரிருள் எங்கணும் கவிந்தது. அவள் எங்கோ சென்றேவிட்டாள். என் மனம் ஒப்பவில்லை. கூவி அழைக்கலாம் என்ற முயற்சி வீணாயிற்று.

* * *

மறுநாள் எப்போது உதயமாகும் என்ற வாஞ்சைப் பெருக்கு! விடிந்ததோ விடியவில்லையோ? உணர்ச்சி உந்த உந்த கால்கள் கடுகி நடந்தன. அதே இடம்; அதே பெண்ணுருவம். அதே தென்றல். அதே உணர்ச்சிப் பெருக்கு!

ஆனால்...... பெரும் பாறாங்கல் இடிந்து தலைமேல் விழுந்த தொப்ப அதிர்ச்சி. உணர்ச்சியின் தளர்ச்சி. பெரும் ஏமாற்றம்!

அவளே அவள்தான். ஒரு புதிய மனிதனுடன் கைகோர்த்து நடந்தாள். வெகு இலாகவமாக ஆடிப்பாடி நடந்துகொண்டிருந்தாள்.

* * *

“அவன் யார்?” என்று கேட்டு இடித்து முழங்கியது. இரு எண்ண அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி வாட்டி வதைத்தது.

* * *

“அவன் யார்!” இவ்வஞ்சகி ஏன் என் மனதை அலட்டினாள்? மறக்கவொண்ணா உணர்ச்சி காட்டி, கண்ஜாடை காட்டி ஏன் வலைவீசினாள்? எதுவுமே அறியாத என்னை மயக்கி ஏன் வஞ்சனை புரிந்தாள்? அதே இடத்தில் மறுநாளும் சந்திக்க ஏன் வாக்களித்தாள்?

“அவன் யார்?” அவளின் வாழ்க்கையே இதுதானா? இப்படி வாணாளெல்லாம் எத்தனை புருஷர்களுடன் வாழ்ந்து பழகினாள்? மயக்கி, மயக்கி, மோகனப் புன்னகை காட்டி வஞ்சித்து வாழ்வதுதான் இவள் செயலா?

* * *

இப்படி இப்படியே எண்ண அலைகள் மோதிமோதி இடர் பல விளைத்தன. உண்மையை எப்படி அறிவது? உணர்ச்சி கொந்தளித்தது.

ஆம்! அவளையே கேட்க வேண்டும். கண்முன்னால் வைத்து உண்மையை அறிய வேண்டும். அதே இடத்தில் நாளையும் செல்வேன். இப்படி ஓர் எண்ணம் உந்திற்று.

மறுநாள்! அதே நேரம்! அதே பொழில். ஆனால்......... அவளைக் காணேன். மேலும் பெரும் ஏமாற்றம்!

இந்த அநியாயச் செயல். அவன் உன்பதியானால் என்னை மறந்து விடு! என்னையும் மறக்கச் செய்துவிடு. அதைச் சொல்! உன்னை மறக்க மார்க்கம் தேடுகிறேன்! சொல்! சொல்! சொல்லாமற் கொல்லாதே!”

இப்படி என் மனம் வீரிட்டு அலறியது. குமுறிக் கதறியது. ஆனால்......! இதற்கு விடை எங்கே? எப்போது? எவரிடம்? அதுமட்டும் என் வாழ்வு......?

நினைவோடு ஒன்றிவிட்ட அவள் — அவளது உண்மை உள்ளம் எது? எனக்கே தெரியவில்லை. அப்போ அவள் ஒரு கற்பனை. அந்த அவன்? அவனும் கற்பனையின் மறு உருவம்.

எல்லாமே கற்பனையானால் நான் மட்டும் நிதர்சனமான ஒன்றா? நானும் கற்பனை.

ஆம்!

மனிதன் உண்மையை விடக் கற்பனையைத்தான் நிதம் என்று நம்புகிறான். அப்பப்பா! அந்த நம்பிக்கையானால் துளி இலாபம்; ஆனால் அதனூடே பெருக்கல் மிக நினைவுகள் தாம் எத்தனை!

ஏன்! இந்த வாழ்க்கையில் எதுதான் சாசுவதம் பெற்றவை?


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள ‘நாஷனல்’ வங்கியிலும் ‘இம்பீரியல்’ வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.


## வழியறியேன்

— வளவன் —

எல்லோரும் பாட்டெழுத என்னிதயம் பொறுத்திடவோ
நல்லதொரு பாட்டெழுதி நாளேட்டில் ஏற்றிவிட்டால்!
எவ்விதத்தில் கவிதையினை யாக்குவேன் என்றெண்ணி
கவலையொடு காரிகையில் கண்வளர்ந்தே அயர்ந்திட்டேன்
அடகெடுவாய் காரிகையேன் புதுக்கவிகள் கண்டிலையோ
விடுமடமை உள்ளொளியை வரிந்துவிடு விருந்ததாகும்
அசைசீர் தளையெல்லாம் நாய்கட்கு வேண்டுமன்றோ
வசையேனும் இசையேனும் வரிமுறையில் எழுதிவிடு
அதிலுமோர் உத்தியுண்டு அழகுண்டு கேட்டிடுவாய்
முதலடியை இருசொல்லில் முடித்துவிட்டு அடுத்ததனை
நீட்டிவிடு இவ்வாறே நடையதனை மறித்தெழுது
பாட்டெழும்பும் புத்துலகச் சிற்பியெனப் பார்புகழும்
என்றேயொரு புதுவாணி என்னிதயங் கொட்டிவிட்டாள்
நின்றதா போராட்டம் நீள்நினைவில் ஆழ்ந்துவிட்டேன்

நூலறி புலவர்க்கு நுழைபுலம் அளித்துநீ
வாலறி தமிழகம் புகழ்வான் புகுத்தினை
பாவியல் விளக்கிய புலமருள் கிழத்தி
பாலியெம் பனிமொழி கூறுவம் கேளினி
கலியுருவின் பல்லியல்பும் கொளைதூக்கும் பண்ணிசைவும்
புவியனைத்தும் அளக்கின்ற பொருள்சேரும் திறமதுவும்
சுவையோடு புணர்த்துநல் அசைநீ தருவாயோ
வேதத்தின் விரிந்தவொரு பரஞான நுண்ணறிவும்
பூதத்தின் முட்டறுத்துக் கருவடக்கும் அறிவியலும்
காதலால் அளக்கின்ற கவின்சீர் தருவாயோ
களிதமிழ்ப் பாபடைத்து மண்ணுலக மருளகற்றும்
பனிவழி வாழ்வதற்கே பொழுதெல்லாம் தொழுதுநின்
தளிரடி பரலிநின்றேம் தளைநீ தருவாயோ

என்றாங்கு

செழுந்தமிழ் விழுப்புலர் சீரியோர் வாணிதாள்
வழுத்துதல் கண்டேன் சொன்மலர் சொரிந்தே
எழுந்தனன் முடிவுநான் கண்டிலேன் இன்றுமே
காரிகைக்கோ புதுக்கவிக்கோ காதலைநான் பறிகொடுப்பேன்
பொருளாழம் சொற்செறிவு பொருந்தாத பாவியெற்கு
பேரிகைதான் பண்பென்று பெரியோர்தாம் மொழிந்திட்டார்
நேரியதோ இக்கூற்று நினைக்கொணாதை தென்னிலையே.

# ஸ்ரீதனம் என்றால் என்ன?

— க. கணேசலிங்கம் —

ஊரிலிருக்கும் மனைவிமாருக்கு வெளியூரில் வேலை பார்க்கும் கணவன்மார் கந்தோரிலிருந்தே கடிதம் எழுதுவது வழக்கமல்லவா, இதில் ‘கந்தோரில் எனக்கும் சரியான வேலை அதனால் தான் கடிகம் எழுதவில்லை’ என்றும் எழுதுவதுண்டு.

மனைவி கடிதம் எழுதும் வேளைகளில் எல்லாம் அவர் பேர்சினுள் கைபோட வேண்டுமே, இதற்காகத்தான் அனுபவம் வாய்ந்த கணவன் கடிதம் எழுதக்கூடக் கந்தோரில் நேரமில்லை’ என்று எழுதிவிடுகின்றார்.

என் விஷயத்தில் நான் அப்படிச் செய்வதில்லை. ஏனெனில் என்மனைவி என்னுடனே தானே இந்த ஊரில் இருக்கின்றாள்.

சம்பள நாளன்று கந்தோர் மூடுமளவும் வீட்டில் காத்திருப்பாள். நேரம் தப்பி விட்டதோ அவள் வரும் ‘ராக்சி’க்கு நான் தான் பணம் கொடுக்க வேண்டி வந்துவிடும்.

இதற்குப் பயந்து நானே ‘ராக்சி’யில் நேரே வீடு செல்வது வழக்கம்.

பணம் கிடைத்த நாளன்று, என்மனைவி புதுக்கக் கல்யாணம் செய்து கொண்டவள் போல் நடந்து கொள்வாள். ஆகா; பாட்டுக்கூடப் பாடுவாள். சுடச் சுடக் கோப்பி, தன்கையாலேயே சுட்ட வடை, இப்படிச் சிற்றுண்டிவகை பரிமாறுவாள். ‘அணிலை ஓடவிட்ட நாய் போல்’ நானும் பார்த்துக் கொண்டிருப்பேன். பணம் அவள் கைக்குள் போய்விடும்.

பிறகு நான் கொண்டு வந்த பணத்தை நனே தேடினாலும் என் கைக்குக் கிட்டாது அது ‘அவள் படித்தவள் சிக்கனமாய் வாழ்வாள்’ என்று சொன்னார்கள். ‘அவள் படித்தவள், நீ சிக்கனமாகப் பழகிக் கொள்ள வேண்டும்’ என்ற உண்மையை யாரும் எனக்குச் சொல்லவில்லையே.

நான் வயிற்றைக் கட்டுகின்றேன். அவள் சேலையைக் கட்டுகின்றாள்.

வருத்தம் வந்தவர்கள் வைத்தியரிடம் அடிக்கடி போவதுபோல் இவளும் புடவைக் கடைக்காரனிடம் அடிக்கடி போகின்றாள். வரும்பொழுது எனக்கும் ‘சேட்’ வாங்கி வருவாள். யார் சொன்னது இந்தக் கட்டைக்குச் சட்டை இல்லையென்று. உங்களுக்கு ‘சேட்’ வாங்கினால் எனக்கு ஒன்றும் வாங்குவதில்லையா என்ற கேள்வி கேட்கத்தான் என்மேல் கருணை காட்டுகின்றாள்.

தன் மகள் ஒருத்தி இருக்கின்றாளே அவளுடைய ஸ்ரீதனத்துக்குப் பணம் சேர்க்க வேண்டுமே என்ற கவலைகூட இவளுக்குக் கிடையாது. ‘நான்தான் நல்ல சீதனம் கொண்டு வரவில்லை, அவளாவது கொஞ்சம் கூடக்கொண்டு போகட்டுமே’ என்று எண்ணியிருப்பாளானால் இப்படிச் செலவு செய்வாளா?

முப்பத்தொருநாளும் முழுப்பாடுபட்டு உழைத்துக் கொண்டு வருகின்றானே இந்தப் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்கவேணுமே, என்ற எண்ணமே கிடையாது.

(13-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில் தமிழ் நாடகக் கலையின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் கலையரசு சொர்ணலிங்கம் தமது அனுபவங்களை இக் கட்டுரையிற் கூறுகின்றார்.

# நாடகத்தில் ஒழுங்கும் ஒழுக்கமும்

கலையரசு கே. சொர்ணலிங்கம்

உலகத்திலே தோன்றிய ஆதி மனிதன் முதலில் தனது நடிப்பின் மூலமே தனது எண்ணக்கிடையை வெளியிட்டான். இது ஆராய்ச்சியாளர்களின் முடிபு. எனவே உலகத் தோற்றத்துடன் நாடகமும் ஆரம்பமாகிவிட்டதென்று கொள்ளின் அது தவருகாது.

ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், சீலம், ஆசாரம் இவற்றைப் பிரதிபலிப்பது நாடகம். மற்றைய எந்தக் கலைகளுக்குமில்லாத சக்தி நாடகக் கலைக்குமட்டும்-அதாவது நல்ல கொள்கைகளை வலியுறுத்துவதற்கு உண்டு. நாடகங்களில் இழைந்துகிடக்கும் கருத்துக்கள் இலகுவில் மக்கள் உள்ளங்களிற் படிந்துவிடும். நல்ல நாடகத்தின்மூலம் நல்ல பயனை அடையச் செய்யலாம். இது கண்டுதான் நமது முன்னேரும் தமிழை இயல், இசை, நாடகமெனப் பிரித்தனர்.

இயல் தனித்தது. இசை இயலுடன் இணைந்தது. ஆனல், நாடகம் இம் மூன்றையும் உள்ளடக்கியதாகும். இதனற்ருன் உலகின் ஏனைய நாடுகளிலும் நாடகம் மிகவும் உன்னதநிலையில் என்றுமே மதிக்கப்பட்டு வருகிறது.

இலக்கியம், சங்கீதம், சித்திரம், ஓவியம் ஆகிய நுண் கலைகள் அனைத்தும் சாதிக்க முடியாத ஒரு புதுமையை—மாற்றத்தை நாடகம் சாதிக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. கால மாற்றத்துடன் இந்த இடத்தை இன்று சினிமா எடுத்துக்கொண்டுவிட்டது. நாடகம் சாதிக்கமுடியாத புதுமைகளை சினிமா சாதித்துவிடலாம் என்பது உண்மையே. ஆனல் நாடகத்திலுள்ள உயிர்த்துவம் சினிமாவில் அதிகம் உண்டென்று கூறமுடியாது.

வளர்ந்து வந்த சினிமாவினுல் நாடகம் நமது நாட்டிலல்ல—உலகின் பல பகுதிகளிலும் ஸ்தம்பித்திருந்தது. ஆனல் மீண்டும் அதனுடைய மதிப்பு கிளை விடத் தொடங்கிவிட்டது. எனவே நாடகங்களை நடத்தி வருகின்ற நாம் அதனுடைய தன்மைகளை ஓரளவு அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

## பழைய நாடகங்கள்

முற்காலத்தில் நடாத்தப்பட்ட நாடகங்கள் புராணம், இதிகாசம் ஆகிய கருத்துக்களை வைத்துஎழுதப்பட்டவை. அதனூடே பரவாழ்வுக்கான ஆத்மீகத்துறைகள் மலிந்து கிடந்தன. புனிதமான, புண்ணிய கைங்கரியத்தை வலியுறுத்தும் சம்பவங்கள், இலட்சியம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கின. இந் நாடகங்களை அடியொற்றி அன்றைய மக்கள் தம்மை வழிநடத்தினர். ஏட்டில் படித்து எல்லோரும் பயனடைந்து விடமுடியாமையினுல் நாடகங்கள் அவர்களுக்குக் கைதந்து வந்தன. எனவே பாமரரும், கற்ரேரும், பாலரும் ஏககாலத்தில் ரசித்து இன்புற்று அதில் பரவியுள்ள கொள்கைகளைக் கடைப்பிடித்தற்கு பிரசங்கிகள், எழுத்தாளர்கள் முதலானவர்கள் சாதிக்கமுடியாத—நல்ல காரியத்தை நாடகக் கலைஞர்கள் சாதித்தனர். அவர்களது பொறுப்பு மிகமகத்தானது. அக்காலத்து நாடக நடிகர்கள் தாம் எந்தவிதத்தில் சமூகத்துக்கு முன்னேடிகள் என்பதை உணர்ந்து கடமையை மிகவும் கண்ணியமாகச் செய்து வந்தனர்.

## இன்றைய நாடகங்கள்

எங்கு பார்த்தாலும் இன்று சமூக நாடகங்களுக்கே வரவேற்பிருக்கிறது. சமூக நாடகங்கள் என்ருல் பொதுவாக சமூகத்திற்கு நன்மைபயப்பதாக விருக்கவேண்டும். புதுமை புரட்சியென்று கூவிக்கொண்டு நமது பண்பாடு—கலாச்சாரம் சமயக் கோட்பாடுகளை உதாசீனம் செய்துவிடுவதல்ல. இன்று அடுக்கடுக்காக வசனங்களைப் பேசி பழைமையை முற்றுமுழுதாகத் தாக்கி-கேலி செய்து—தாம்கண்ட வெறுப்பின் காரணமான பாத்திரங்களை வலிந்து புகுத்தி நையாண்டி செய்வதை அநேக நாடகங்களில் கவனித்திருக்கிறேன். வளர்ந்துவரும் கால மாற்றத்துக்கேற்ப கொள்கைகளை வலியுறுத்தி மக்கள் வாழ்வைச் சீர்செய்ய வேண்டுமேதவிர இவ்விதமான குயுத்தித் தனங்களை ஒழித்துவிட வேண்டும். கல்விகற்ற சில பெரியோர்களும் இப்படிப்பட்ட கொள்கைகளை வைத்திருப்பதை எண்ணும்போதுதான் வேதனை தரக்கூடியதாகவுள்ளது. ஒருமுறை ஓர் உயர்தர அரசியல்வாதி "40 வயதுக்கு மேற்பட்ட பெற்ரேர்களே உங்கள் பிள்ளைகளின் புத்திமதிகளைக் கேட்டு அதன்படி நடவுங்கள்" என்று பகிரங்க மேடையிற் கூறியதை என்காதாற் கேட்டிருக்கிறேன். இப்படி இளைஞர்களின் சிறுபிள்ளைத்தனமான செயல்களைத் தட்டிக் கொடுப்பதன் மூலம் அவர்களது ஒழுக்கத்துக்கு ஊறு செய்கிருேம் என்பதை உணர்தல் நலம்.

## நாடகம் எப்படி இருக்க வேண்டும்

நாடக அமைப்பே நன்ருகவிருக்க வேண்டும். கதை, ஒழுக்கத்தை பேணியதாகவும் சமூக முன்னேற்றத்துக்கு உதவக் கூடியதாகவுமிருக்க வேண்டும். நிதர்சனத்துக்குப் புறம்பான சம்பவங்களைப் புகுத்தாது சரளமான முறையில் முன்னுக்குப் பின் வருகின்ற காட்சிகள் அம்சத்தில் சிறந்தனவாக அமையவேண்டும். வேட்டை நாயின் ஓட்டம்போல் முன்பு விரைந்து பின்பு களைகுன்றிய அமைப்பாக இருக்கக்கூடாது. அத்தோடு புதுப்புதுக் கருத்துக்கள் கொண்டதான கதைகளைத் தெரிதல்வேண்டும். பணக்காரப் பெண்ணைக் காதலிப்பது, அதனைக் கண்டு தகப்பன் விரட்டுவதுபோன்ற கதைகளே இன்று மலிந்துள்ளன. அவற்றைப் பார்த்துப் பார்த்துச் சலிப்படைந்து விட்டார்கள் மக்கள். மக்களின் ரசனை புதுமையையே விழைகிறது என்ற எண்ணத்தைப் புரிந்து கவர்ச்சியான கதைகளை நாடகமாக்க வேண்டும்.

## நடிகர்கள் தரம்

தென்னிந்திய பத்திரிகைகளைப் படித்தும் சினிமாவை அடிக்கடி பார்த்தும் அடுக்கு வசனங்களை மனனஞ் செய்துவிடுவதினுல் நடிப்பு வந்துவிடுகிறது என்று சிலர் புறப்பட்டுவிடுகிருர்கள். நடிகனுக்கு மொழியறிவு, நாடகஞானம், மேடையனுபவம் இருத்தல் அவசியம். பாத்திரங்கள் எதனையும் நடிக்கக்கூடியவனுகவும் — உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கையில் தத்ரூபமான பாவம் ததும்பக் கூடிய வகையில் பயிற்சி பெற்றுமிருக்க வேண்டும். வெறும் வசனமுந் துள்ளலும் நடிப்பாகிவிடாது.

சேக்ஷ்பியர், மில்டன், லோங்பெல்லோ, பெர்னுட்ஷா ஆகிய ஆங்கில நாடக ஆசிரியர்களினுற்ருன் நாடகம் சிறப்புற்றது. ஆனல் இக் காலத்தில் சில அறிஞர்களால் ஆக்கப்படும் நாடகங்கள் மொழியைச் சிறப்பிக்கின்றதா, அதனை இம்சிக்கின்றதா என்பது படித்தாற் தெரிந்துவிடும். இதனை இளைஞர்கள் சிலர் ஊன்றிப் படித்து—குரைவைத்துப் பேசிவிட்டால் தாமும் அறிஞர்கள்—நடிகர்கள் ஆகிய இரண்டையும் ஏககாலத்தில் பெற்றுவிடலாமென்று கருதுகின்றனர். ஒரு நாடகம் வெறுமெனே கதையைக் காட்டுவதாக மட்டுமிருக்கக்கூடாது. கருத்தையும் மொழியையும் அது வளப்படுத்தவேண்டும்.

## சிறப்பான அம்சங்கள்

நாடகத்திற் கையாளப்படும் அத்தனையும் சிறப்பாக அமைந்துவிடலாமென்று எதிர்பார்க்க முடியாது. நாம் எவ்வளவுதான் திட்டமிட்டபோதிலும் குறைகள் ஏற்படவே செய்யும். ஆனல் கூடியவரையில் எம்மால் குறைகளைத் தவிர்க்கலாம். சினிமாவை அப்படியே 'கொப்பி'யடித்து விடுதலாகாது. சினிமாவில் கையாளப்படும் உத்திகள் — யந்திர சாதனங்களுக்குள்அமைந்தவை அதனை மேடையிற் கொண்டுவருவது கடினம். ஆனல் காலத்தோடு முன்னேறி வரும் நாடகங்கள் பல தத்ரூபமான காட்சிகளைக் கொண்டுவரவே செய்கின்றன. காட்சிஜோடனை, உருவ அமைப்பு, பாத்திரங்களின் தோற்றம் அனைத்தும் இதன் சிறப்புக்கு அத்தியாவசியமாகின்றன. அவ்வத் துறைகளில் தேர்ச்சியும் ஞானமும் கொண்டவர்களினுல் அவைகளை அமைத்தல் வேண்டும்.

## நோக்கம்

இக்காலத்தில் நிதியென்ற பெயரைச் சொல்லிக் கொண்டு நாடகங்கள் பல மேடையேறுவதைப் பார்க்கிருேம். நிதிக்காக நாடகம் நடத்துவது நல்லதுதான் ஆனல் அந்த நிதி துஷ்பிரயோகப்படப் படாதவகையிற் பார்த்துக்கொள்ள வேண்டியது நடத்துபவர்கள் கடனுகும். இதற்குச் சிறப்பாக இருக்கவேண்டியது ஒழுங்கும் ஒழுக்கமுமாகும். குறிப்பிட்ட நேரத்துக்கு நாடகத்தை ஆரம்பித்தல், கூடியவரை இடைவெளிநேரம் இன்றிய வகையில் காட்சிகள் மாறுதல் வேண்டும் என்பன முக்கியம். நாடகத்தைக் குறிப்பிட்ட நேரத்துக்குத் தொடங்காதிருத்தல், முதற்சீனுக்கும் மறுசீனுக்கும் இடையிலுள்ள நேரத்தில் நடிகர்களற்றவர்கள் மேடையில் குறுக்கு மறுக்காகத் திரிதல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

## ஒலிபரப்பி

இக்காலத்தில் ஒலிபெருக்கியை ஒவ்வொரு நாடகத்திலும் பிரயோகித்து வருகின்றனர். அக்காலத்தில் நீண்ட நாடகங்களை நாம் நடத்திய காலத்தில் இந்த ஒலிபெருக்கி கிடையாது. அவசியமுமிருக்கவில்லை. எந்த மண்டபத்திலேனும் எங்கு உட்கார்ந்திருப்பவரும் கேட்கக்கூடியவகையிற் பேசுவோம். இவ்வொலிபெருக்கியை மையமாகக் கொண்டு நடிகர்கள் வசனங்களைப் பேச முற்படுவதினுல் தங்களின் பாத்திரங்களுக்கு உரிய முகபாவத்தைப் பிரதிபலிப்பதில் தோல்வியடைந்துவிடுகின்றனர்.

டி. கே. எஸ். சகோதரர்கள் நமது நாடாகிய ஈழநாட்டுக்கு வந்தபோது ஒலிபெருக்கியைப் பயன்படுத்தினுர்கள். இரவற் குரல் கொடுத்தார்கள். நாம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று யாரும் கேட்கலாம். ஆனல் முன்கூட்டியே ஏற்படுத்திக்கொள்ளும் திட்டங்களும், கருவியைப் பயன்படுத்தும் அனுபவமும் கொண்டவர்கள் அவர்கள். அத்துடன் நாடகத்தின் வெற்றிக்கு அவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ளும் சிரமமும் கொஞ்சமல்ல. அவர்களது அனுயாசமான நடிப்பிலும் பேச்சிலும் ஒலிபெருக்கியைப் பற்றிய அக்கறை ஏற்படுவதில்லை. எனவே இதுவிஷயத்தில் நாமும் நல்ல அனுபவ ஞானமும் செயல்திறனும் பெறும் வரையும் எமது நாடகத்தின் வெற்றிக்கு ஒலிபரப்பியைப் பயன்படுத்தாது இருப்பது நலம்.

## நாடக ஒத்திகை

நாடகத்தின் வெற்றிக்கு அதன் ஒத்திகையும் மிக முக்கியமாகும். இது எனது ஆழ்ந்த அனுபவம். தற்காலத்தைய நடிகர்கள் ஒத்திகையைப்பற்றி அதிகம் சிரத்தை காட்டுவதில்லை.

"இலங்கா சுபோத விலாச சபா"வினர் அக்காலத்தில் நாடகத்தைச் சிறப்பாகச் செய்தார்கள் என்பதை நீங்கள் முதியோர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். இதற்குக் காரணம் அவர்கள் ஒத்திகைசெய்ய எடுத்துக்கொண்ட பிரயாசையாகும். குறிப்பிட்ட காலத்துக்குப் பள்ளிக்கூடம்போல் இடைவிடாது ஒத்திகை செய்வார்கள். சிறிய பாகமாக இருந்தாலும் பெரிய பாகமாக இருந்தாலும் நடிகர்கள் நேரத்துக்கு வந்து ஒத்திகையிற் பங்குகொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

## நல்ல விமர்சனம்

நாடகக்கலை வளர்வதற்கு உறுதுணையாக இருப்பது நல்ல விமர்சனமாகும். ஆனல் சிலர் நாடகத்தில் காணப்படும் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு அஞ்சுகிருர்கள். இது நடிகர்களை வீழ்ச்சிக்குக் கொண்டுபோய்விடும். நம் நாட்டிலுள்ள சில பெரியோர்கள் அதாவது—நாடகத்துக்குத் தலைமை வகிப்பவர்கள் நாடகம் மோசமானதாக இருந்தாலும் அதனை வானளாவப் புகழுகிருர்கள். தட்டிக்கொடுக்கவேண்டியது கலைஞனின் மனதுக்கு நலமேயானுலும், பிழைகளைச் சொல்வதன்மூலம் திருந்த வாய்ப்பேற்படுகிறதல்லவா.

'இப்படியெல்லாம் ஏன் குறைப்படுகிருர்?' என்று யாராவது மனஸ்தாபப் படுதல் கூடும். நான் எவரையும் நோகவைக்க விரும்பவில்லை. ஆனல் நாடகக்கலை வளர்ச்சிக்கு நான் கொண்டுள்ள துடிப்பில் ஒருசில அனுபவத்தைக் கூறியிருக்கிறேன். மிகத் திறமைவாய்ந்த நடிகர்கள் நம் நாட்டிலிருக்கிருர்கள். இவர்களை ஒன்றுகூட்டிச் சிறந்த ஒரு குழுவை அமைத்து நாடகக் கலையைச் சிறப்படையச் செய்யலாம். அதன் வெற்றிக்குரிய பயிற்சியும், ஒழுங்கும், ஒழுக்கமும் ஒன்றுசேர்ந்து இணையுமானுல் நாம் ஏன் வெற்றியடைய முடியாது?


—— இங்கே வெட்டவும் ——

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

**ஈழநாடு** வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

....................................
கையொப்பம்.

பெயர்: ....................................

விலாசம்: ....................................

இங்கே வெட்டவும்

செக்கோஸ்லோவேக்கியாவில் பத்திரிகையாளராகப் பணியாற்றும் இக் கட்டுரையாளர் குடியாட்சி நிலவும் அந்நாட்டிற் பிரயாணம் செய்தபோது தெரிந்து கொண்ட விபரங்களை இக்கட்டுரையில் எழுதியுள்ளார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இக்கட்டுரை 'ட்றிபியூன்' ஆங்கில வார இதழில் வெளியாகியுள்ளது.

# மலர்ச்சியுற்றுவரும் . . . .
# செக்கோஸ்லோவேக்கியா

அல்பேர்ட் கிராபோர்ட்

செக்கோஸ்லோவேக்கியாக் குடியரசின் பெரும்பகுதியை நான் மோட்டார்க் காரிலே தான் பிரயாணஞ்செய்தேன். கிழக்குப் பகுதிகளுக்கு நான் செய்த பிரயாணத்தையே இங்கு கூறவிரும்புகிறேன்.

அரசாங்க வீதிகளிலும், சிறு தெருக்களிலும் நான் பிரயாணம் செய்தேன். தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்கள் பட்டினங்கள், விவசாய சமாஜங்கள், கூட்டுறவுப் பண்ணைகள், மற்றும் குக்கிராமங்கள் எல்லாவற்றிற்கும் சென்றிருந்தேன்.

பழைமையின் சரித்திரத்தையும், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதுமையான ஆக்கவேலையையும் நான் கண்டேன். பல்வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள பலவித மனிதரை, நூற்றுக்கணக்கான மக்களை நான் கண்டு பேசி, செக்கோஸ்லோவேக்கியாவில் அவர்களது வாழ்க்கை தொழில் முதலியன கடந்த காலத்திலும், இபபொழுதும் நடந்துவரும் விதத்தைப்பற்றி விசாரித்தேன்.

எந்த ஒரு வழிகாட்டியோ அல்லது மொழிபெயர்ப்பாளரோ இன்றி, செக்கோஸ்லோவேக்கியக் குடியரசிலுள்ள பலபாகங்களிலும் உள்ள வெவ்வேறு மக்களிடையேயும் ஸோஷலிஸம் ஆக்கவேலையின் மூலம் அவர்களின் வாழ்க்கைக்கு என்ன அளித்தது என்பதை அறிய நான் புறப்பட்டேன். அப்போது கோடை விடுமுறைக்காலம். ஒரு மக்கள் ஜனநாயகத்தில் மக்கள் எவ்விதம் தங்கள் விடுமுறையைக் கழிக்கின்றுர்கள் என்பதுபற்றி என் மனதில் முழுமையான ஒரு படத்தை வரைய இயன்றளவு எனது பிரயாணத்தில் முயற்சித்தேன்.

## நான்கு வருடங்கள்

என்னுடைய பிரயாணத்தில் நீங்கள் பங்குபற்றமுன் என்னை உங்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்க விரும்புகிறேன். என் பிறப்பிடம் அமெரிக்காவாக இருந்தாலும், நான் இப்பொழுது செக்கோஸ்லோவேக்கியாவில் ஒரு பத்திரிகையாளனுக உழைத்து வாழ்கிறேன். நான் செக்கோஸ்லோவேக்கியாவில் ஏறத்தாழ நான்கு வருடங்களாக வாழ்ந்து வருகிறேன். செக்கோஸ்லோவேக்கிய வாழ்க்கை, இதற்குமுன்னர் நான் அறிந்திருந்ததொன்றல்ல. உண்மையைக் கூறின் நான் இங்குவந்து சேர்ந்த பொழுது, எனக்கு செக் மொழியில் ஒரு வார்த்தைதானும் தெரியாது. இங்கு, செக்கோஸ்லோவேக்கியாவில் எங்கு நான் சென்றவிடத்தும், எதைக் கண்டபொழுதும், எவருடன் பேசியபொழுதும், என்னுடைய நோக்கம், உலகின் முக்கிய தொழில்துறை நாடுகளுள் ஒன்ருக விளங்கும் செக்கோஸ்லோவேக்கிய நாட்டைப் பற்றிய உண்மையை அறிய, அதன் பிரதேசத்தைப் பற்றியும், மக்களின் தேசிய குணுதிசயங்களைப்பற்றியும் உணர ஆவல்கொண்ட ஒரு அமெரிக்கனின் நோக்கமாகவே அமைந்திருந்தது. அதே வேளையில், இன்று உலகின் பெரும்பகுதியிலும் வளர்ந்துவரும் சோஷலிஸத்தைப்பற்றிய, பல நாடுகளின் வாழ்க்கைகளில் ஏற்பட்டுள்ள பெரிய புரட்சியைப்பற்றிய உண்மையையும் அறிய நான் விரும்பினேன்.

செக்கோஸ்லோவேக்கியாவைப்பற்றி நான் படித்ததையும் கேள்விப்பட்டதையும் அப்படியே நான் நம்பியிருந்தால், நான் இப்பிரயாணத்தைப்பற்றிக் கனவிலும் எண்ணியிருக்க மாட்டேன். என்ன ஆச்சரியம், செக்கோஸ்லோவேக் கியாவில் நீர் ஒரு காருக்குள் ஏறி, நீர் நினைத்த இடமெல்லாம், எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் சுற்றித் திரியலாம்! ஆமாம், இதைத்தான், எவ்வித கஷ்டமுமின்றி, நானும், எனது அமெரிக்க மனைவியும் எனது அமெரிக்க மக்களும் செய்தோம்.

நாங்கள் உளம்நிறைந்த சுதந்திரத்துடன் திரிந்தோம். யாரைப் பார்க்க விரும்பினேமோ அவர்களைப் பார்த்தோம். எவருடன் பேசவிரும்பினேமோ அவர்களுடன் பேசினேம்; அதாவது, எங்கள் கையில் காருக்குப் பெற்ருேல் வாங்கவும், 'ஹோட்டல்' செலவுக்கும் பணம் இருந்தவரை இவற்றைச் செய்தோம்.

## ஆங்கிலம்

'இரும்புத்திரை'க்குள் வாழும் நாடுகளில் அமெரிக்காவுக்கும், மேனடுகளில் வாழும் மக்களுக்கும் மாருகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது என்ற சில பத்திரிகைகளின் குற்றச்சாட்டைச் சோதிக்க எங்களுக்குப் போதிய சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படிப் பிரசாரம் ஏதும் இருந்திருந்தால் அது எங்களுக்குத் தெரியாமலிருந்திருக்க முடியாது. ஆங்கிலந்தான் நாங்கள் எங்கள் குடும்பத்துள் பேசிக்கொள்ளும் மொழி. ஆதலால், நாங்கள் எங்கு சென்றபொழுதும், ஆங்கிலத்திலேயே எங்களிடையே பேசிக்கொண்டோம். ஆனல், ஒருவருமே இதற்காக எங்களை முறைத்துப்பார்க்கவுமில்லை; எதிர்ப்புக்காட்டவும் இல்லை.

இன்னுமொன்று நான் சொல்லிவிட விரும்புகிறேன். நாங்கள் எங்களுடைய காரில் ஒரு ரேடியோவை எப்பொழுதுமே எடுத்துச்சென்ருேம். உலகச் செய்திகள் கேட்பதற்கு இது உதவியாகவிருந்தது. எங்களுடைய பிரயாணத்தின் போது நாங்கள் இருபது ஹோட்டல்கள்வரையில் தங்கினேம். இந்த ஹோட்டல்களிலெல்லாம் நாங்கள் ஆங்கிலத்திலே அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருந்து செய்திகள் ஒலிபரப்பப்படுவதையும் கேட்டோம். இச்செய்திகள் வானெலிமூலம் ஒலிபரப்பப்படுவதை ஒருவரும் தடைசெய்யவில்லை. அத்துடன், எங்கள் கதவை வந்து தட்டி, வானெலியில் எதையும் கேட்கக்கூடிய எங்கள் உரிமையில் எவருமே சருவவில்லை.

செக்மொழியில் எனக்குள்ள பரிச்சயம் குறைவு. அத்துடன் அதை நான் இலக்கணப் பிழைகளுடனேயே பேச முடியும். மற்றும் பல வெளிநாட்டவரைப்போன்று, செக்மொழி எனக்கும் கஷ்டமாகவும், இலக்கணத்திற் சிக்கல் கூடியதாகவுமே தோன்றுகிறது. அதுவும் முக்கியமாக ஆங்கிலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, என்னுடைய பிழையான செக் வார்த்தைகளை வெளிவிட நான் வாயைத் திறந்ததும், என்னுடைய அமெரிக்கத் தொனிதான் அவைகளிற் பெரிதும் படிந்து, பளிச் சென்று விளங்கும். பொலிஸ்காரரிடமோ, வழிப்போக்கரிடமோ நான் பேசியபொழுது அவர்களிடமிருந்து எனக்குத் தேவையான விடைகளைப் பெற்றுக்கொள்ள, இந்த அமெரிக்கத் தொனி எனக்கு எவ்வித இடையூருகவும் அமையவில்லை.

செக்மொழியில் எனக்குள்ள அறிவுக் குறைக்கு ஈடுகொடுக்கும் விதத்தில், நாங்கள் செக்கோஸ்லோவேக்கியாவுக்கு வந்ததுமே இங்குள்ள பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து படித்த என் பெண்பிள்ளைகள் அம்மொழியை நன்கு பேசக் கற்றுவிட்டார்கள். இதனல், நாங்கள் செக்கோஸ்லோவேக்கிய மக்களிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது எவ்வித கஷ்டத்தையும் உணரவில்லை. நாங்கள் செக்கோஸ்லோவேக்கிய வாழ்க்கையைப் பற்றி அவர்களிடம் எவ்வளவு சுதந்திரத்துடன் கேட்டோமோ, அவ்வளவு சுதந்திரத்துடன் அவர்களும் அமெரிக்க வாழக்கையைபபற்றி எங்களிடம் கேள்விகள் கேட்டார்கள். தவிர, நாங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாமே இதமான பதில் கிடைக்கவில்லை. இங்குள்ள வாழ்க்கையிலுள்ள குறைகள் சிலவற்றை எடுத்துக் கூறிய மக்களையும் நாம் சந்தித்தோம். ஒரு அமெரிக்கனிடம் தங்கள் நாட்டைப் பற்றிக் குறை கூறுவதன் மூலம் தாங்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்ற பயம் அவர்களுக்குக் கிடையாது.

செக்கோஸ்லோவேக்கியா மக்கள் பேச்சுச் சுதந்திரத்தைப் போற்றுவதுடன் மாத்திரம் நின்றுவிடாது, நடைமுறையில் முழுக்க முழுக்க அதை உபயோகிக்கின்றனர் என நான் என் சொந்த அனுபவத்திலிருந்து கூறமுடியும். நான் கண்டு பேசியவர்களில் ஒருவருமே தங்கள் கருத்துக்களைக் கட்டாயத்துக்கடங்கி மறைக்க முயன்றதாகத் தெரியவில்லை. எல்லோருமே மனம் விட்டுப் பேசினர். ஆனல், அவர்களிடமிருந்து கிடைத்த பதில்கள் செக்கோஸ்லோவேக்கியாவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் மகத்துவத்தையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், இவை இரண்டினதும் சிறப்பையும் நிரூபித்தன.

## நாட்டின் அமைப்பு

எங்கள் பிரயாணத்தைத் தொடங்குமுன், செக்கோஸ்லோவேக்கிய நாட்டின் தேசப் படத்தைப் பார்த்து, ஒரு பிரயாணிக்கு அவசியமான சில முக்கியமான விபரங்களை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

செக்கோஸ்லோவேக்கியா, நிலப்பிரதேசங்களினல் சூழப்பட்டு, ஐரோப்பாவின் நடுவிலே ஓர் இலை போன்ற உருவத்தில் கிடக்கிறது. அதன் நீளத்தில் பெருமளவு மத்திய ஐரோப்பாவின் ஊடாக, அதன் வட-மேற்கிலிருந்து, தென்-கிழக்கு வரை செல்கிறது. அதனுடைய அமைப்பின் முக்கியத்வத்தின் காரணமாக, செக்கோஸ்லோவேக்கியா ஐரோப்பாவின் கிழக்குக்கும், மேற்குக்கும், வடக்குக்கும், தெற்குக்கும் இடையே நடைபெறும் வர்த்தகப் போக்குவரத்துகளில் ஒரு முக்கிய பாகத்தைச் சரித்திர முறையாக ஏற்று வந்துள்ளது. முதலாளிக் கட்சி நிலவும் நாடுகளினதும்தொழிலாளர்ஆட்சி நிலவும் நாடுகளினதும் எல்லைகளுடன், அதன் எல்லை இணைந்துள்ளது.

செக்கோஸ்லோவேக்கியாவின் தேசப் படத்தைச் சிறிது கூர்ந்து கவனிப்பதாலும்,அதன் சமீப சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பதாலும் (அது நாஜி ஆட்சியின் கீழிருந்த காலம்), வெவ்வேறு சமூக, அரசியல் அமைப்புள்ள நாடுகளின் கூட்டுறவிலும், ஐரோப்பாவின் கூட்டுப் பாதுகாப்பிலும் அதற்குள்ள இயற்கையான ஆர்வம் நன்கு புலப்படும். செக்கோஸ்லோவாக்கியாவின் மிக நீண்ட எல்லை (1,390 கிலோ மீட்டர் அல்லது 864 மைல்) போலந்தினுடன். அடுத்த நீண்ட எல்லை (905 கிலோ மீட்டர்) ஜேர்மனியுடன். அளவின் அடிப்படையில் அடுத்துவரும் எல்லை (678 கி. மீ.) ஹங்கேரியுடன்; அடுத்தது (570 கி. மீ.) அவுஸ்திரியாவுடன்; கடைசியாக, ஒரு சிறு எல்லைப்பரப்பு (98 கி. மீ.) சோவியத் யூனியனுடன்.

ஐரோப்பாவின் சோஷலிஸப் பகுதியில ஒரு நாடாக விளங்கும் செக்கோஸ்லோவேக்கியாவின் எல்லைகளிற் காற்பங்களவு, முதலாளித்வ நாடுகளின் எல்லைகளுடனேயே இணைகின்றது. அதன் எல்லைகளில் மூன்றில் ஒரு பங்கை, அது பக்கத்திலுள்ள ஜேர்மன் பேசும் அயலாருடன் பங்கு போட்டுக் கொள்கிறது.

## ஜேர்மனி

இந்த விபரங்களெல்லாம் பாட புத்தக முறையில் ஒரு கணிப்பாகவிருப்பினும், அவை முக்கியம் வாய்ந்தவை. அவுஸ்திரியாவுடனும், ஜேர்மனியுடனும் செக்கோஸ்லோவேக்கியா தனது எல்லைகளைப் பங்கு போட்டிருப்பது ஒரு சரித்திர, அரசியல் உண்மை மாத்திரமல்ல; அது செக்கோஸ்லோவேக்கிய மக்களின் அனுபவத்திலும், உள்ளங்களிலும் ஊறி உறைந்த உண்மையாகும். முதலாவதாக, முதல் மகா யுத்தத்திற்கு முன்னதான காலச்சரித்திர நினைவுகள் உள்ளன. அப்பொழுது, செக்கோஸ்லோவேக்கியா அவுஸ்திரியா—ஹங்கேரி சாம்ராச்சியத்தின் பிடிக்குள் அடங்கி, தன்னுடைய தேசிய வளர்ச்சி தடை செய்யப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தது. ஏகாதிபத்தியத்தின் விலங்குகளைத் தகர்த்தெறியவும், தன்னை முற்றிலும் ஜேர்மன் மயமாக்குவதற்குச் செய்யப்பட்ட பலாத்கார முயற்சிகளை முறியடிக்கவுமே இக்காலத்தில் செக்கோஸ்லோவேக்கியா போராடி வந்தது.

ஆனல் அவர்களுடைய நினைவில் புதிதாகவும், வருத்தம் தருவதாகவும் சில ஞாபகங்கள் உள. அவைதான் நாஜிகளின் ஆக்கிரமிப்பும், அவர்கள் செய்த அட்டூழியங்களும். நாஜிகளின் சிறைச்சாலைகளில் வதைக்கப்பட்டு, அதன் காரணமாக ஏற்பட்ட காயங்களையும், மறுக்களையும் தங்கள் உடல்களில் கொண்டு திரிபவர் இன்றும் உளர். அதைவிட, இரண்டாவது உலக யுத்தத்தின்போது இழந்த தாய் தந்தையர், கணவன் மனைவிமார், குழந்தைகள், சகோதர சகோதரிகள் இவர்களின் நினைவுகள் செக்கோஸ்லோவேக்கிய மக்களின் மனத்தை விட்டு அகலாதிருக்கின்றன.

செக்கோஸ்லோவேக்கியா தனது நாட்டின் பொருளாதாரத்துறையில் எல்லா அம்சங்களையும் விருத்தி செய்யவும், சமூக அமைப்பை மாற்றியமைத்து மறுமலர்ச்சி கொடுக்கவும் திட்டமிட்டிருக்கும் திட்டங்களை நடைமுறையிற் பூர்த்தி செய்யச் சமாதானமே முதல் முதல் தேவையாக இருக்கின்றது. ஜேர்மனியுடன் தன் எல்லைகளைப் பங்கு போடும் செக்கோஸ்லோவேக்கியா, ஜேர்மன் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு உருக்குலைந்த மற்றைய நாடுகளைப் போன்று, ஜேர்மன் பிரச்சினைக்குச் சமாதானமான ஒரு முடிவு காண்பதில் தீவிர ஆவலும், ஆர்வமும் கொண்டுள்ளது.

(தொடரும்)


உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ்வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன் : 697

வடபகுதியில் விவசாயம்: 2

புகையிலைச் செய்கையை எவ்வாறு வளம் செய்யலாம் என்பதுபற்றிக் கமக்காரன் இக்கட்டுரையில் கூறுகின்றார்

# புகையிலைச் செய்கை

வடபகுதி விவசாயச் செய்கைகளிற் புகையிலைச் செய்கை தலைசிறந்து விளங்குகின்றது என்று சொல்லின் அது மிகையாகாது. பெரும்பான்மையான விவசாயிகள் தங்கள் சீவியத்திற்கு வேண்டிய வருமானத்தைப் புகையிலைச் செய்கை மூலமும் அதனை வெளி இடங்களுக்கு அனுப்புவதன் மூலமுமேபெறுகிறார்கள்.

நாட்டுப் புகையிலையில் நரம்பன், கூரன், தட்டையன் எனப் பல இனங்கள் உண்டு. இந்த இனங்களின் வேறுபாட்டை அவற்றின் வெவ்வேறு தன்மை கொண்ட இலைகளின் மூலம் மக்கள் அறிந்து கொள்கிறார்கள். புகையிலையை நம் நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் முறை எவ்விதமெனில், தம்மிடம் உள்ள விதை அளவுக்கு ஏற்றவாறு மேடை செய்து, அதில் விதைகளைத் தூவிவிட்டுப் பின்னர் அவை வளர்ந்து ஐந்து இலைப் பருவச் செடியானதும் பிடுங்கி வேறு நிலத்தில் நாட்டுவர்.

புகையிலைப் பயிர்ச் செய்கை விவசாயிக்குச் செலவு வகைகளை உண்டாக்குகின்றது. புகையிலைத் தறையைக் கொத்திப் பண்படுத்துவதற்கு ஏற்படும் செலவு தவிர, வேறு பல செலவுகளும் உண்டு. சிறந்த முறையில் ஒரு விவசாயி புகையிலைப் பயிர் செய்வதானால், அவருக்குப் பசளையினால் உண்டாகும் செலவு பின்வருமாறு:

| | |
|---|---|
| 4 வண்டில் அல்லது ஒரு லொறிமாட்டெரு | ரூ.120-00 |
| 4 வண்டில் குழை | ரூ.160-00 |
| | ரூ.280-00 |

இதைவிட வேறு செலவுகளும் உண்டு.

### விலை மாற்றம்

நாட்டுப் புகையிலையின் விலை காலத்திற்கேற்ப மாறும் தன்மையுடையது. இவ்வருட முற்பகுதியில் சிறந்த நாட்டுப் புகையிலை இனம் ஒன்று 1 ரூ. 50 சதம் பெறுமதி உள்ளதாகவிருந்தது. ஆனால், சென்ற வருடமோ நாட்டுப் புகையிலைக்கு மதிப்பே கிடையாது. திறம் கன்று ஒன்று 60 சதமாகவே விற்கப்பட்டது. வருங் காலத்தில் நாட்டுப் புகையிலைக்கு அதிக மதிப்பு இருக்காதென்றே கூற வேண்டும். ஏனெனில், இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்கிடையிலே கைச்சாத்திடப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் இன்னும் சில வருடங்களில் செல்லாமற் போய்விடும்.

ஆதலின், நம் விவசாயிகள் நாட்டுப் புகையிலையை விட்டுவிட்டுச் சிகரெட் புகையிலையிலேயே நாட்டம் கொள்ளல் வேண்டும். ஆனாலும், சிகரெட் புகையிலை நாட்டுவதில் இங்குள்ள விவசாயிகள் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. இதற்குச் சில காரணங்களும் உண்டு. அவற்றுள் முக்கியமானதொன்றென்னவெனில், சிகரெட் புகையிலைக்கு இடப்படும் செயற்கைப் பசளை தறையை வெப்பமாக்கிவிடுவதனால், அத்தறையில் வேறு மாற்றுப் பயிர் செய்ய முடியாது போகின்றது. இத்தறையைச் சில காலம் பயிர் செய்யாது விட்டுவிட்டுப் பின்னர் ஏதாவது பயிர் உண்டாக்கினால், அதுபயனளிக்கக்கூடும். ஆனால், இவ்விதம் நிலத்தை வீணாக விட நம் நாட்டு விவசாயியினால் முடியாது. ஏனெனில், அவரிடம் போதிய நிலம் இல்லாமையே. இந்தப் பிரச்சினைக்கு வழி காணின், விவசாயிகள் குடியேற்ற நிலங்களுக்குச் சென்று குடியேற வேண்டும். கிளிநொச்சி, வட்டக்கச்சி, கல்மடு போன்ற இடங்களில் சிகரெட் புகையிலை மிகச் சிறந்த தரத்தில் உண்டாகின்றன.

### சிகரெட் புகையிலை

சிகரெட் புகையிலை செய்வதற்கு நமது விவசாயிகள் தயங்குவதற்கு இன்னுமோர் காரணமுமுண்டு. அதுதான், புகையிலைப் பயிரில் உண்டாகும் நோய்களைத் தீர்த்து வைக்கத் தகுந்த மருந்துகளைப் பெறுவதில் உள்ள கஷ்டம். இப்பிரச்சினைக்கு அரசாங்கம் சில வழிகளைக் கண்டுபிடித்துள்ளது. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மேற்பார்வையாளரை அனுப்பி வைத்துள்ளது. அவர் விவசாயிகள் புகையிலை நாற்றுவதற்கும், உணர்த்தலுக்கும் உதவி புரிகிறார். புகையிலை உணர்த்தும் போறணைகள் கூட அரசாங்கம் கட்டிக் கொடுத்துள்ளது. புகையிலைக்குப் பூச்சி முதலிய நாசினிகளினால் இடையூறு ஏற்படும் சமயத்தில் "என்றீன்" என்னும் மருந்தை நீருடன் கலந்து தெளிக்கிறார்கள், மேற்பார்வையாளர். கடும் மழையினால் ஏற்படும் அழுகல், தவளைவடு போன்ற நோய்களையும், இவர்கள் மருந்தின் உபயோகத்தினால் நீக்கிவிடுகிறார்கள்.

சிகரெட் புகையிலைக்குத் தேவையான பசளை செலவு குறைந்ததாகும். அப்பசளை பின்வரும் தாதுப் பொருள்களின் கலவையாகும்;

| | |
|---|---|
| சல்பேற் ஒவ் அமோனியா | -30ரூ. |
| சுப்பர் பொஸ்பேற் | -125ரூ. |
| சல்பேற் ஒவ் பொற்ருஷ் | -200ரூ. |
| பொறெக்ஸ் | - 6ரூ. |

5,000 கன்றுகள் கொண்ட ஒரு பரப்பு நிலத்திற்கு இக்கலவையில் 75 ருத்தல் தேவைப்படும். அதன் செலவு ஏறத்தாழ 20 ரூபாயாகும். ஆயிரங்கன்று உற்பத்தி செய்வதற்குப் பசளையாக இரண்டு வண்டில் குப்பையும் தேவை. அதன் செலவு 30 ரூபாயாகும். ஆகையினால், விவசாயிக்குச் சிகரெட் புகையிலை செய்வதின் மூலம் குறைந்த செலவுடன், அதிக லாபம் உண்டாகிறது. இக்காரணங்களை முன்னிட்டும், இன்றைய நாட்களில் சிகரெட்புகையிலைக்கே மதிப்பு உண்டு என்னும் காரணத்தினாலும் நமது விவசாயிகள் சிகரெட் புகையிலை உற்பத்தி செய்வதிலேயே அதிக நாட்டமும், ஊக்கமும் காட்டவேண்டும்.

# ஜெனிவா பேச்சுக்கள்

## ஜேர்மன் சிக்கலைத் தீர்க்குமா?

ஜெர்மனியின் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக நான்கு வல்லரசுகளின் வெளி நாட்டு மந்திரிகள் மகாநாடு நான்காவது வாரமாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. சென்ற வாரம் நான்கு வெளிநாட்டு மந்திரிகளும் திரு. டல்லஸின் மரணச் சடங்குகளுக்காக ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்ற போது சனாதிபதி ஐசன்ஹோவரைச் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினர். நால்வரும் ஒரே விமானத்தில் ஜெனீவாவுக்குத் திரும்பிய போதும் விமானத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

மேற்கு வல்லரசுகளின் வெளி நாட்டு மந்திரிகள் சமர்ப்பித்த திட்டத்தை ருஷ்யா நிராகரித்து விட்டது. ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை ருஷ்ய வெளி நாட்டுமந்திரியான திரு. கிரோமிக்கோ வற்புறுத்தியிருக்கிறார். அவர் இல்லத்தில் மந்திரிகள் பல தடவை கூடி ஆலோசனைகள் செய்திருக்கின்றனர்.

ஜெனீவா பேச்சுகள் முறிவடைந்தால் ருஷ்யா கிழக்கு ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளும் என அல்பேனியாவுக்கு விஜயம்செய்துள்ள ருஷ்யப் பிரதமர் திரு. குருஷேவ் கூறியிருக்கிறார்.

ஜெனீவா பேச்சுகள் பலனளிக்குமா? தொடர்ந்து உச்சி மகாநாடு நடைபெறுமா? ஆகிய கேள்விகளுக்கு இப்பொழுது விடையளிக்க முடியாமலிருக்கின்றது.

### சிங்கப்பூரில் புதியஅரசாங்கம்

சிங்கப்பூரில் 30 - 5 - 59 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி சட்டசபையின் 51 ஸ்தானங்களில் 43 ஸ்தானங்களைப் பெற்று மாபெரும் வெற்றியீட்டியிருக்கிறது. மக்கள் செயற் கட்சியின் தலைவராகிய திரு. லீகுவான்யூ உள்நாட்டு சுயாட்சியைப் பெறும் சிங்கப்பூரின் முதலாவது பிரதம மந்திரியாவார்.

### தூனிசியாவில் குடியரசு

அமெரிக்கக் குடியரசு போன்ற அரசியலமைப்பு தூனிசியாவில் 1-6-59 இல் பிரகடனம் செய்யப்பட்டது. வட ஆபிரிக்காவில் பிரான்சின் ஆட்சியிலிருந்த தூனிசியா 20-3-56 இல் சுதந்திரம்பெற்று 25-7-57 இல் குடியரசு நாடு ஆகியது. மொத்த நிலப்பரப்பு 48,253 சதுரமைல். சனத்தொகை 37,83,169. இப்போது கடமையாற்றும் சனாதிபதி திரு. ஹபீப் பொர்கீபா.

### மாலைதீவுச் சிக்கல்

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் மாலைதீவு அரசாங்கத்துக்கும் இடையே கான்தீவில் அமைக்கப்படும் இராணுவத்தளம் குறித்து எழுந்துள்ள சிக்கலுக்குத் தீர்வுகாணும் நோக்கமாக மாலைதீவுப் பிரதிநிதிகளுக்கும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இம்மாதத்தில் லண்டன்மாநகரில் நடைபெற இருக்கின்றன என்று மாலைதீவு அரசாங்கத்தின் சட்ட ஆலோசகரான திரு. கே. சி நடராசா கூறியிருக்கிறார்.

### ஊரடங்குச்சட்டம்

மத்திய அமெரிக்காவிலுள்ள குடியரசு நாடுகளில் ஒன்றாகிய நிக்கரகுவாவில் ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற் கெதிராகச் செய்யும் கிளர்ச்சிகளும் பொது வேலைநிறுத்த அபாயமுமே இப்பிரகடனத்துக்குரிய காரணங்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிலப்பரப்பு 51,660 சதுரமைல்; சனத்தொகை 12,45,000; இப்போது கடமையாற்றும் சனாதிபதி திரு. லூயி. ஏ. சொமோசா.

### உலக சனத்தொகை

உலகின் சனத்தொகை வருடமொன்றுக்கு நாலரைக் கோடி வீதம் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. அதாவது நிமிஷம் ஒன்றுக்கு 85 வீதம் சென்ற ஏழு வருடத்தில் சராசரியாக உலக சனத்தொகை கூடிக்கொண்டுவருகிறதாம். மொத்த சனத்தொகையில் 40 வீதத்தவர் இந்தியா, சீனம், ருஷியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளில் வசிக்கின்றனராம். இவ் விபரங்கள் ஐக்கியநாடுகள்தாபன அறிக்கையில் காணப்படுகின்றன.

# கேரளத்தில் கல்விச் சட்டம்

## முகாமைக்காரரின் எதிர்ப்பு

கேரள அரசாங்கத்தின் கல்விச் சட்டத்தை எதிர்த்து தனிப்பட்ட பாடசாலை முகாமைக்காரர் தமக்குரிய 3800 பாடசாலைகளை ஜூன் முதற் திகதியிலிருந்து மூடத் தீர்மானித்துள்ளனர். இதே திகதியில் கல்விச்சட்டத்தின் சில பிரிவுகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதைத் தொடர்ந்து கேரள அரசாங்கமும் கோடை விடுமுறைக்குப்பின் பாடசாலைகள் ஆரம்பமாகும் திகதியை 1-7-59 வரை தள்ளிப் போட்டிருக்கிறது.

இக்கல்விச் சட்டத்தின் பதினோராம் பிரிவையே முகாமைக்காரர் முழுமூச்சுடன் எதிர்க்கின்றனர். இப்பிரிவு ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொறுப்பை அரசாங்க சேவை அதிகாரசபையிடம் ஒப்படைக்கின்றது. எத்தகைய தகுதிகளையுடைய ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என நிபந்தனைகளை அரசாங்கம் விதிக்கலாமே தவிர இன்னார் நியமிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் கட்டளையிடுவது சர்வாதிகாரமும் அனாவசியமான தலையீடுமாகும் என முகாமைக்காரர் வாதிக்கின்றனர்.

அரசாங்க பாடசாலைகள் 15-6-59 இல் திறக்கப்படுவதற்கு முன் ஏதாவது சமரசம் ஏற்படுமா? அல்லது பலப்பரீட்சை நடைபெறுமா?

### நேபாளத்தின் புதிய அரசாங்கம்

பி. பி. கோயிராளா தலைமையில் புதிய மந்திரி சபை நேபாளத்தின் தலைநகரான காட்மாண்டுவில் 27-5-59 இல் பதவியேற்றது. நேபாளம் நடுநிலைமையான வெளிநாட்டுக்கொள்கையைப் பின்பற்றும் என அவர் அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

பாரதப் பிரதர் ஜவஹர்லால் நேரு ஜூன் மாத மத்தியில் நேபாளத்திற்கு விஜயம் செய்வார் எனத் தெரிகின்றது.

### லோக் சபை

லோக் சபையின் பருவப் பெயர்ச்சிக் காலக் கூட்டத்தொடர் 3-8-59 இல் தொடங்கும். கொம்பனிகள் சட்ட திருத்த மசோதாக்களின் பரிசீலனைக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### தென் உணவுப் பிராந்தியம்

ஆந்திரா, சென்னை, மைசூர், கேரளம் ஆகிய இராச்சியங்கள் இணைக்கப்பட்டு 1957 ஜூலையில் உருவாக்கப்பட்ட தென் உணவுப் பிராந்தியத்தை பிரிக்கவோ அல்லது சென்னையை ஒரு தனிப் பிராந்தியமாக்கவோ ஒரு நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை என இந்திய மத்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

### பாகிஸ்தான் சுட்டவிமான நஷ்டஈடு

ஏப்ரல் மாதத்தில் பாகிஸ்தான் சுட்டு விழுத்திய இந்திய விமானத்திற்காக நஷ்டஈடு வழங்கும்படி ஒரு கோரிக்கையை மீண்டும் இந்தியா பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு அனுப்பியிருக்கிறது.

### டால்மியா வழக்கு முடிவு

இந்திய அரசாங்கத்தின் இன்சூரன்ஸ் நிதியைத் தவறான வழிகளில் முடக்க முயன்ற திரு. இராமகிருஷ்ண டால்மியாவுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

### வானொலிப் போராட்டம்

இந்திய வானொலிகளில் "ஆகாசவாணி" என்ற பதம் உபயோகிக்கப்பட்டு வருவதை எதிர்த்து திருச்சியிலும் சென்னையிலும் ஆர்ப்பாட்டம் 19-6-59 இல் ஆரம்பமாகும். இந்த ஆர்ப்பாட்டங்களில் திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், நாம்—தமிழர் இயக்கம் போன்ற கட்சிகளும் பல தமிழ் அறிஞர்களும் கலந்து கொள்வார்கள்.

### டில்லி மேயர் இராஜினமா

புதுடில்லி மேயராகிய, திருமதி அருணாஅஷெட்அலி தமது பதவியை இராஜினமாச் செய்துவிட்டார். இராஜினமாச் செய்ததற்கு காங்கிரசின் ஆதரவு அவருக்கு இல்லாமற் போனது ஒரு காரணம் எனத்தெரியவருகிறது.


# யாழ் விநோதக் காணிவலும்

## கண்கவர் பொருட்காட்சியும்

யாழ் மத்திய நூல் நிலையக் கட்டிட நிதிக்காக

1959-ம் ஆண்டு ஜூன் மாதம்

12-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை

யாழ்ப்பாண மாநகரசபை மைதானத்தில் நடைபெறும்.

★ அரசாங்க இலாகாக்கள், தூதுவர் காரியாலயங்கள், தேயிலைப் பிரசாரப் பகுதிபோன்ற முக்கியமான ஸ்தாபனங்கள் பங்குகொள்ளும்.

★ மாட்டுவண்டிச் சவாரி, மல்யுத்தப் போட்டி, மின்சார ஒளியில் கைப்பந்தாட்டப் போட்டிகளும்; சுழல் ராட்டினம், குழந்தைகள் பூங்கா, பயங்கரக் கிணறு, கார் அதிர்ஷ்டச் சீட்டு, முதலியனவும் ஏற்பாடாகியுள்ளன.

★ சங்கீதம், நடனம், நாடகம், முதலிய கலை நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

இவற்றில் இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர்.

★ பேச்சு வன்மை, துப்பாக்கிச் சூடு, தேகாப்பியாசம், நீச்சல் முதலியவற்றில் பள்ளிக்கூட மாணவர்களிடையே போட்டிகள் நடைபெறும்.

★ பார், (Bar) சிற்றுண்டிச்சாலை, இந்திய கைத்தறி இலாகாவினால் அமைக்கப்பெறும் கைத்தறி உடை காட்சிகள் முக்கியாம்சகளாக இடம் பெறும்.

நூல் நிலையம் உங்கள் நிதியையும் நேரத்தையும் வேண்டுகிறது.

தயவு கூர்ந்து வாருங்கள்!

தாராளமாகச் செலவு செய்யுங்கள்!!

| | | |
|---|---|---|
| ஒரு கடை (10 x 15) | ரூபா 100/- | காணிவல் நடைபெறும் காலத்துக்கு மட்டும். |
| இரண்டு கடைகள் | ரூபா 150/- | |

கே. வி. மயில்வாகனம்
பொதுக் காரியதரிசி,
யாழ் விநோதக் காணிவல்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு வைகாசி மீ 23 உ (6-6-59)


## தொழில் நுட்பக் கல்லூரி

'கூறையான் புற்றெடுக்கப் பாம்பு குடியேறியதுபோல' என்று நாடோடியாகச் சொல்லுவார்கள். அதேமாதிரித் தொழில்நுட்பங்களை மாணவர்களுக்குப் பயிற்றுவதற்கென யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட கல்லூரியிற் சென்ற வருடம் இராணுவத்தினர் நுழைந்துகொண்டு தங்கள் கருமங்களைச் சாதித்துவந்தனர். தமிழ்பேசும் மாணவர்களின் எதிர்காலச் சிறப்பை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பெற்ற இக்கலைக்கோயில் இராணுவத்தினருக்குத் தஞ்சம் அளிக்க வேண்டியதாயிற்று! இன்று நிலைமை முற்றிலும்மாறி இராணுவத்தினரும் இக்கட்டடத்தைவிட்டு மூட்டை முடிச்சுக்களுடன் தென்திசையை நோக்கிக் கிளம்பிவிட்டனர். இந்தமட்டில் தமிழ்மக்கள் மகிழ்ச்சியடையலாம். ஆனால் இக்கல்லூரியில் மாணவர்கள் தொழில்நுட்பத் துறையிற் பயிற்சிபெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வரை அவர்கள் திருப்தியடையவே முடியாது.

தொழில்நுட்பக் கல்லூரியை விரைவில் ஆரம்பிக்கவேண்டுமெனத் தமிழரசுக் கட்சியினர் கல்வி அமைச்சர் தஹநாயக்காவைக் கண்டுபேசியதன் விளைவாகக் கல்லூரியை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சர் செய்துவருகின்றாரெனச் செய்திகள் கூறுகின்றன.

கொழும்பில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியிற் சிங்களமே போதனமொழியாக அமைய இருப்பதால் யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக் கல்லூரியை உடனடியாக அமைப்பது மிகவும் அவசியமாகின்றது. இக்கல்லூரிக்கு ஓர் அதிபரை நியமிப்பதுபற்றி இத்தருணத்தில் நாம் ஒன்றுகூற விரும்புகின்றோம். கொழும்பில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி அதிபரின் தரத்துக்கு எவ்வகையிலும் குறைந்த ஒருவரை யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு நியமிப்பது வரவேற்கக்கூடியதன்று. தகுந்த அதிபர் ஒருவரை நியமிப்பதைச் சாட்டாகக்கொண்டு கல்லூரியை ஆரம்பிப்பதிற் காலதாமதம் செய்யக்கூடாதென்றும் கல்வியமைச்சருக்குக் கூற விரும்புகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பிலும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை நிறுவுவதின் அவசியத்தை அரசினர் உணர்ந்து அத்துறையில் ஆர்வத்துடன் உழைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

படித்த வாலிபர்கள் வேலையின்றித் திண்டாடும் இந்நாட்களில் இக்கல்லூரிகள் தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்கு அவர்களுக்குப் பேருதவி புரிந்து, தொழில்துறைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதற்கு உதவிபுரியும் எனத் தீர்க்கமாக நம்பலாம்.

## வேலை நிறுத்தங்கள்

வேலைநிறுத்தங்கள் நமக்குப் புதியதல்ல. எம். ஈ. பி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் நாட்டில் மூலைக்கு மூலை வேலைநிறுத்தங்கள் கிளம்பின. இந்த வேலைநிறுத்தங்களால் தொழிலாளருக்குச் சில நன்மைகள் கிடைத்தனவெனினும், தொழில் அமைதியும், முதலாளி—தொழிலாளி நல்லுறவுகளும் வெகுவாகச் சீர்குலைந்தன. தொழில் அபிவிருத்திக்கோ, அல்லது மக்களின் வாழ்க்கைச்செலவுகள் குறைவதற்கோ இந்நிலை துணை செய்யவில்லை. தொழிலாளரின் சங்கடங்களைத் தீர்த்துக்கொள்ள வேலைநிறுத்தம் கடைசி ஆயுதமாகவே பயன்படுத்தப்படவேண்டும்.

அன்று அரசாங்கத்திலே புரட்சிவாத சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பிலிப் குணவர்த்தன அமைச்சராக இருந்ததால்தான், தொழிலாளர் புதிய தைரியத்துடன் வேலைநிறுத்தம் செய்ததாகக் கூறப்பட்டது. ஆனால் அவரும் அவரது கட்சியினரும் அரசாங்கத்திலிருந்து வெளியேறியும் நிலைமை மேம்படவில்லை. இதற்கு மாறாக இடதுசாரிக் கட்சிகளெல்லாம் சேர்ந்து, இனி அரசாங்கத்தை எதிர்க்கப் பொது வேலைநிறுத்தம் முதலிய நடவடிக்கைகளை எடுக்கலாமென்றும் கூறப்படுகின்றது. அவ்விதம் ஏற்படுமாயின், பொதுமக்கள் அதிக சங்கடங்களுக்கு உள்ளாக நேரிடலாம். பொதுமக்களின் நன்மையைக் கருதுபவர்கள் அரசியல் மாறுதல்களுக்காகத் தொழிலாளரைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது.

அரசியல் காரணங்களுக்காக வேலைநிறுத்தம் செய்வதாயின் அவற்றைச் சட்டவிரோதமாக்கி தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்குப் பாதுகாப்புச் சட்டம் அதிகாரமளிக்கின்றது. இதை மீறியும் வேலை நிறுத்தங்கள் கட்டுக்கடங்காமல், பிரதம மந்திரியாலும் சமாளிக்க முடியாமற்போகுமாயின், அரசாங்கமே ஸ்தம்பித்து, இங்கு பாகிஸ்தானைப் போல் இராணுவசர்வாதிகார ஆட்சி ஏற்பட்டுவிடக்கூடும். "நியூஸ் வீக்லி" என்னும் அமெரிக்க வார இதழ் இதற்கான எச்சரிக்கை செய்துள்ளது. அவ்வித ஆட்சி இங்கு ஏற்படுமாயின், தொழிற் சங்கங்களும், வேலைநிறுத்தங்களும், அரசியற் கட்சிகளும், பேச்சு, எழுத்து உரிமைகளும் இல்லாமற் போய்விடக்கூடும்.

## சுகாதாரம்

அடுத்த ஆண்டிலே சுகாதாரவாரம் கொண்டாடுகையில், ஆஸ்பத்திரிகளிலே நோயாளரின் எண்ணிக்கை வெகுவாகக் குறையக் கூடியதாக இருக்குமென்று சுகாதார மந்திரி திருமதி விமலா விஜயவர்த்தன சுகாதாரவிழாப்பற்றி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கின்றார். ஆனால் இன்றுள்ள நிலைமையைப் பார்க்கையில் இந்த நம்பிக்கை நிறைவேறுவது சுலபமென்று தோன்றவில்லை.

ஆஸ்பத்திரிகள் புதிதாக நிறுவப்படுகின்றன. அதே வேளையில் நோயாளர் எண்ணிக்கையும் போட்டி போட்டுக்கொண்டு அதிகரிக்கின்றது. புதிய புதிய நோய்கள் ஏற்படுகின்றன. நூற்றுக்கு 40 விகித நோய்கள் தடுக்கக் கூடியதே என்று கூறுகிறார் சுகாதார டைரக்டர் டாக்டர்கருணரத்ன. ஏழ்மையும், சுகாதாரமற்ற சூழ்நிலையுமே இதற்குக் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. சத்துணவு இல்லாமல் பல குழந்தைகள் நோய்வாய்ப்படுகின்றன. ஆரோக்கியமான குடியிருப்பு வசதிகள் இல்லாமல், காசநோய்கள் பரவுகின்றன. ஆனாலும் பொருள் வசதி இல்லாத நிலையில் வறிய குடும்பங்கள் அதிகம் அவதிப்படுகின்றன. சமதர்மக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் அரசாங்கம், வறுமை எனும் கொடிய நோயை ஓரளவாவது நீக்க முடியுமாயின், குழந்தைகளுக்கு உதவிப்பணம் கொடுப்பது போன்று சமூக நலதிட்டங்களைக் கொண்டுவருவதாயின், நிலைமை சற்றே திருந்தலாம். அதற்கான அறிகுறி ஒன்றுமே இல்லாத நிலையில் சுகாதார அமைச்சரின் நம்பிக்கை எப்படிக் கைகூட முடியும்?

ஆனால் இவ்விஷயத்தில் பொது மக்கள் தங்கள் சுயநலனைக் கருதியாவது, கூடுமானவரை சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்றும் 'கூழாயினும் குளித்துக் குடி' என்றும் மூதுரைகள் சுகாதாரத்தை வற்புறுத்துகின்றன. ஏழைகள் போதிய உணவில்லாமல் அவதிப்படும்போது, செல்வந்தர்கள் அதிகமாக உண்டு நோய்ப்படுகின்றார்கள். நெறிதவறிய வாழ்க்கையாலும் வியாதிகள் கண்டு அவதிப்படுகின்றார்கள். தங்கள் உணவை சுருக்கிக்கொண்டு, ஏழை எளியவர்களுக்குக் கூடுமான உதவி செய்வதாயின், உடலும் உள்ளமும் மேலான சுகாதாரத்துடன் இருக்க வழிபிறக்கும். இவ்விஷயத்தில் அரசாங்கத்தையே நம்பி இராமல், பொது மக்கள், தங்கள் சுகத்தைத் தாங்களே காத்துக் கொள்ள தங்களுக்கிடையே எவ்வளவோ உதவிகள் செய்து கொள்ள முடியும்.

## சிங்கப்பூர்

சிங்கப்பூர் தேர்தல் முடிவுகள், அங்கு பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குப் பொது மக்கள் அடித்துள்ள முதல் சாவு மணியாகும்.

இம்மாதம் முதல் அங்கு நடைமுறைக்கு வந்துள்ள புதிய அரசியல் திட்டப்படி, சிங்கப்பூரில் இராணுவ அதிகாரமும் வெளிநாட்டு உறவு பற்றிய அதிகாரமும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமே இருக்கும். ஆனால் தேர்தலில் வெற்றிபெற்ற "மக்கள் நடவடிக்கைக் கட்சி"யினரோ, சிங்கப்பூரிலிருந்து பிரிட்டனின் கடல், விமான இராணுவ தளங்களை அகற்ற வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்டவர்கள். உடனடியாக இல்லாவிடினும் படிப்படியாக இதைச் செய்யவேண்டுமென்று கேட்கின்றனர். சிங்கப்பூர், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய இராணுவ தளமாக இருப்பதை அங்குள்ள பொது மக்கள் விரும்பவில்லை என்பது புலனாகின்றது.

அண்மையிலுள்ள இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பர்மா, மலாயா முதலிய நாடுகளுக்கெல்லாம் அரசியல் சுதந்திரமளித்த பிரிட்டன், சிங்கப்பூருக்கு அரைகுறை உரிமைகளே அளித்துள்ளது. பூரண சுதந்திரத்துக்கு இது முதற்படியாக இருக்கலாம். உரிமைகளை இப்போது ஓரளவாவது விட்டுக்கொடுத்தது வரவேற்கத் தக்கதே என்றாலும் சிங்கப்பூர் தங்கள் ஏகாதிபத்தியக் கோட்டையாக, தங்கள் ஆதிக்கத்தில் நீண்டகாலம் இருக்குமென்று பிரிட்டிஷார் இனி நம்பியிருக்க முடியாது.

மலாயாவுடன் சிங்கப்பூரை இணைக்க வேண்டுமென்பது, வெற்றிபெற்ற மக்கள் நடவடிக்கைக் கட்சியின் மற்றொரு கொள்கை. ஆனால் மலாயாவிலுள்ள அரசாங்கமோ இதை விரும்பவில்லை. சிங்கப்பூரில் சீனர்களின் எண்ணிக்கை 9 லட்சத்துக்கு மேலுள்ளது. அவர்கள் மலாயாவுடன் சேருவதாயின் மலாய்க்காரர்களின் "மெஜாரிட்டி" பலம் குறைந்துவிடுமென்ற பீதியே இந்த எதிர்ப்புக்குக் காரணமாகும். தங்கள் கொள்கைக்கு மாறான கட்சி சிங்கப்பூரில் வெற்றிபெற்றுள்ளது, மலாயா அரசாங்கக் கட்சிக்கும் பிடிக்காது.

'பி. ஏ. பி' என்ற மக்கள் நடவடிக்கைக் கட்சியினர் தீவிர இடதுசாரிக் கொள்கையைக் கொண்டுள்ளதால், அவர்கள், கம்யூனிஸ்ட் சீனத்துடன் சேர்ந்து விடுவார்களோ என்ற பீதி சில வட்டாரங்களில் இருப்பது இயற்கை. இதை உணர்ந்தே தாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கைப் பொம்மைகளாக இருக்கப்போவதில்லை என்று அக்கட்சியினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். மேலும் சமீபத்தில் திபேத்திய சம்பவங்கள் மலாயா, சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகளுக்கு எச்சரிக்கையாகும்.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் நீண்ட காலமாக அதிக தொடர்புண்டு. அங்கு இலங்கையர் பலர் குடியேறி வசிப்பதுடன், இங்கும் பல மலாய்க்காரர்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றனர். சிங்கப்பூருக்குக் கிடைத்துள்ள இந்த அரைச் சுதந்திரம், நம் இரு தேச உறவுகளையும் மேலும் பலப்படுத்த உதவ வேண்டும். அங்கு அதிகாரத்துக்கு வந்துள்ள பி. ஏ. பி. கட்சியிலே இலங்கையரும் சேர்ந்து இருப்பதால், இரு நாடுகளுக்கிடையிலும் இனி அதிக ஒத்துழைப்பு நிலவ அவர்கள் கூடுமானதைச் செய்வரென்றே நம்புகிறோம்.

## இந்தோனேஷியா

இந்தோனேஷியாவிலும் இராணுவ ஆட்சி ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே, பாகிஸ்தான், பர்மா, தாய்லந்து இம்மூன்றிலும் ஜனநாயக அரசியல்முறை மாறி இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளதையும், இப்போது இந்தோனேஷியாவும் அவ்வழியே சென்றுள்ளதையும் பார்க்கையில், புதிதாக விடுதலைபெற்ற ஆசிய நாடுகளில் ஜனநாயக முறை சரிவர நடைபெற முடியாதோ என்ற ஐயம் ஏற்படுகின்றது.

தலைவர் டாக்டர் சுகார்னோ இந்தோனேஷியாவில் சில முக்கிய அரசியல் மாறுதல்களைப் பற்றிய யோசனை கூறினார். 1945 இல் இருந்த புரட்சி அரசியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்போதுதான் நாடு அமைதியாக முன்னேறும் என்றும் ஒரு பிரேரணை கொணர்ந்தார். இது நிறைவேறப் பார்லிமென்டில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவு வேண்டும். மூன்று முறை பிரேரணை கொண்டுவந்தும் அது தோற்றது. முஸ்லீம் கட்சிகள் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடாக எதிர்த்தன. இந்தோனேஷியாவை இஸ்லாமிய குடியரசாக்க வேண்டும் என்று அவர்கள் கூறிய யோசனையைத் தலைவர் சுகார்னோ ஒப்பவில்லை. முடிவில் அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டு, நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளது.

## துறவியின் சேவை

ஒரு துறவி 24 பேர்களுக்குச் சமம் என்று இலங்கை வந்துள்ள சுவாமி நிச்ரேயஸானந்தா ஒரு புதிய கணக்குச் சொன்னார்.

எப்படித் தெரியுமா? ஒரு துறவி 24 மணி நேரமும் பிறருக்காகச் சேவை செய்து வாழவேண்டுமென்பது நியதி. (இன்று துறவிகள் அவ்விதம் இருக்கிறார்களா? என்பது வேறுவிஷயம். மஞ்சள் உடை தரித்த சிலர் சென்ற ஆண்டில் தார்ச்சட்டி இயக்கத்துக்குத் தலைமை வகித்து நடந்ததை நினைக்கையில், இப்போதும் நம்மில் பலருக்கும் அவர்களில் யாரைக் கண்டாலும் பயமாக இருக்கிறதல்லவா?)

குடும்பஸ்தர்களாகவுள்ளவர்கள், தங்கள் நேரத்தில் பெரும்பகுதியையும் குடும்பத்தைக் காக்கச் செலவிடவேண்டியவர்கள். என்றாலும் ஒருவர் நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரத்தைப் பொதுஜன சேவைக்கு உழைக்க 'சிரமதான'மாக அளிக்கலாம். இதில் அதிக கஷ்டமிராது. ஒரு நாளுக்கு 24 மணிநேரமானதால், 24 பேர், ஒருநாளில் ஒரு உண்மைத் துறவி செய்யக் கூடிய சேவையைச் செய்யலாமென்றும், அவ்விதம் செய்ய முன்வந்தால், சமூகக் குறைகள் பலவும் நீங்கவும், மக்கள் முன்னேறவும் வழிபிறக்குமென்றும் சுவாமி சொன்னார்.

ஆனால் நம்மில் எத்தனை பேர் ஒரு நாளைக்கு ஒருமணி நேரம் தியாகசேவை செய்யத் தயார்? அப்படித் தயாராக இருப்பினும், எந்த ஸ்தாபனத்தின் மூலம், எவ்விதம் சேவை செய்வது?

* * *

ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலே நான்கு பையன்களிருந்தால், அதில் ஒருவரைத்தங்கள் சமய சேவைக்காக திருச்சபைக்குச் சந்தோஷமாக அனுப்பிவைப்பதுண்டு. இது குறித்து அக் குடும்பம் பெருமையுமடையும். ஆனால் ஒரு இந்துக் குடும்பத்தில் பல பையன்களிருப்பினும் அதில் ஒருவன் துறவுபூண்டால், 'ஐயோ சாமியாராகிவிட்டானே!' என்று அழுகிறார்கள்! என்று இடித்துச் சொன்னார் ஒரு பெரியவர்.

ஒரு நரேந்திரன் படித்துப் பட்டம்பெற்றபின் துறவியானார். அமெரிக்கா செல்வதற்கு பாஸ்போட் எடுக்கவேண்டியிருந்தது. ஒரு பெயர் கொடுக்கவேண்டும். அப்போதுதான் "விவேகானந்தா" என்ற பெயர் அளிக்கப்பட்டதாம். 39 வயதுக்குள்ளாக அந்த இளம் துறவி அமெரிக்கா முதலிய நாடுகளிலெல்லாம் திக்விஜயம்செய்து ஆற்றியுள்ள தொண்டுகளை நினைக்க யாருக்கும் வியப்பளிக்கும். நாடு அடிமைப்பட்ட காலத்தில், பல வெள்ளைக்காரர்களையும் தமக்கு அன்பால் "அடிமை"ப்படுத்திக்கொண்டு வந்தார். பல சமூகசேவைகளுக்கு அடிகோலினார்.

குருமணி சங்கரர் 33 வயதுக்குள்ளாக, கன்யாகுமரி முதல் காஷ்மீர்வரை கால்நடையாகச் சென்று பலரை வாதில் வென்று இந்துசமயத்துக்குப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு லட்ச ரூபாய் முதல் உள்ள கடைகள்

## இரு இந்தியரை நியமிக்க அனுமதி

இலங்கையிலே ஒருலட்சம் ரூபாய்க்குமேல் முதல் போட்டு வியாபாரம் செய்யும் இந்திய வர்த்தக ஸ்தாபனங்களில், பொறுப்பான பதவிகளுக்கு இரு இந்திய சிப்பந்திகளை நியமித்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படலாமென்றும் தெரிகிறது.

லேவாதேவித் தொழில் நடத்தும் நகரத்தார் சங்கப் பிரதிநிதிகளும், குடியேற்ற அதிகாரிகளும் கலந்து பேசியதில் அதிகாரிகள், அனுதாபத்துடன் கவனித்து மேற்குறித்த முறையைச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதைத்தவிர சில வர்த்தகர்கள் கட்டுப்பாடுகளைத் தளர்த்த அரசாங்கம் உத்தேசித்திருப்பதற்கு, உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பது முக்கியகாரணமாகக் கூறப்படுகிறதென்ருலும், பொதுத் தேர்தல் நெருங்கிவருவதால், தேர்தல் நிதிக்கு வர்த்தகரின் ஆதரவைப் பெறுவதும் காரணமென்றும், அரசாங்கக்கட்சியினர், தேர்தல் நிதி திரட்ட ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டதாகவும் தெரிகிறது.

# 'நியூஸ் வீக்' கூறும் சோதிடம்

[1ம்- பக்கத் தொடர்ச்சி]

1 ஸ்ரீ, 2 ஸ்ரீ, 3 ஸ்ரீ என்று சிங்கள ஸ்ரீயை விடாப் பிடியாக போக்குவரத்து மந்திரி கைக்கொண்டு வருவதால், தமிழ்ப் பகுதிகளுக்குப் புதிய பஸ்ஸுகளே இனிக் கிடைக்காதா? பழைய பாடாவதிகளெல்லாம் அவ்விரு மாகாணங்களுக்கும் தள்ளப்படுமா? இதுபற்றி தமிழ்ப் பகுதிகளில் பொதுமக்களிடையே அதிக அதிருப்தி நிலவுகின்றது.

தமிழ்ப் பகுதிகளுக்குப் புதிய பஸ்ஸுகளை அனுப்பத்தக்க வழிவகைகளைச் செய்வது பற்றியே தமிழரசுக் கட்சிக்காரரும் பிரதமரும் கூடிப் பேசுகின்ருர்கள்.

இச்சமயம் தமிழரைத்திருப்தி செய்யப் பிரதமர் தாராள மனப்பான்மையுடன் விட்டுக்கொடுக்கலாமென்று ஓரளவு நம்பிக்கை நிலவுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை நீக்கியது இந்த நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றது. பிரதமர் அவ்விதம் செல்வதாயின், அதனல் சமஷ்டிக் கட்சியின் மனப்பான்மையும் மாறக்கூடும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதுவும் கொண்டு வரப்பட்டால், இங்நிலையில் சமஷ்டிக் கட்சி அவசரப்பட்டு அதைக் கண்மூடித் தனமாக ஆதரிக்காமல், அதிக நிதானமாக அது நடந்துகொள்ளலாம்.

சமஷ்டிக் கட்சியின் ஆதரவு இப்போது பிரதமருக்கு அவ்வளவு அவசியமில்லாவிடினும், தமிழ்ப் பிரதிநிதிகளின் இந்த மந்திரி சபையின் செல்வாக்கை உயர்த்துவதுடன், நாட்டில் சமூக அமைதியை ஏற்படுத்தவும் அதிக உதவியாக இருக்கும்.

பிரதமரின் உத்தேசப்படி பிரதேச சபைகள் ஏற்படுமாயின், மோட்டார் பதிவு உள்ளிட்டுப் பல அதிகாரங்கள் மண்டல சபைகளுக்கு இருக்கக் கூடும். தமிழ்ப் பகுதிகளில் இஷ்டமான எழுத்துக்களை பயன்படுத்தும் உரிமை அப்பகுதி ஆட்சி சபைகளுக்கு இருக்குமென்றுகூறப்படுகிறது. எப்படியும் இந்தச் சிக்கலான பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வழியில்லாமலில்லை.

### யு. என். பி.

இதற்கிடையே யு. என். பி. கட்சியினர், இந்த அரசாங்கம் இன்னும் சில மாதங்கள் கூடி நீடித்திராதென்றும், பொதுத் தேர்தல் வரப்போவதாகவும், தாங்களே அதில் ஜெயிக்கப் போவதாகவும் கோட்டை கட்டித் தீவிர பிரசாரம்செய்துவருகிருர்கள். ஆனல் பார்லிமெண்டிலே அக்கட்சியில் ஜெயித்த பிரதிநிதிகள் கூட இல்லை. ஆகவே பிரதமருக்குஇப்போது இக்கட்சியைப் பற்றிய விசேஷ கவலை இருக்கக்காரணமில்லை.

### வி. எல். எஸ். எஸ். பி.

பிலிப்பின் புரட்சிவாத சமசமாஜக்கட்சியில் ஐந்து பேர்கள்தான் உள்ளனர். பிலிப்பை ராஜினமாச் செய்ய வேண்டாமென்று விசேஷ தூதர் மூலம் பிரதமர் கேட்டுக் கொண்டாராம். பிலிப்புக்கும் மந்திரி பதவியைவிட மனமில்லை என்றும், ஆனல் அவர் தோழர் வில்லியம் ஸில்வாதான் பிடிவாதமாக இருந்ததாயும் அதனலேயே பிலிப்பும் ராஜினமாச் செய்ய நேரிட்டதாகவும் அறிகிறேன்.

சென்ற ஞாயிறன்று பிலிப் கோஷ்டியினர் வாழைத்தோட்டத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினர்: பிரதம மந்திரி பண்டாரநாயக்கா "முதலாளிகளின் கையாட்களின் தலைவர்" என்றும் அவர் உடன் ராஜினமாச் செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

ஆர். ஜியையும், "அந்தப் பெண்ணை"யும் மந்திரி சபையில் சேர்க்கவேண்டாம்என்று தாம் எச்சரிக்கைசெய்ததாயும், அதைப் பிரதமர் கேட்கவில்லையென்றும், இப்போது அவர் பிற்போக்காக நடப்பதாயும், யு. என். பிக்கும் அவர் கட்சிக்கும் வேற்றுமை இல்லை என்றும் கூறினர். எதிர்க்கட்சிகளெல்லாம் சேர்ந்து அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்று கேட்டார். ஆனல் எதிர்க்கட்சிகள் இந்த யோசனைக்கு செவிசாய்ப்பதாய்க் காணேம்.

### வெளியேறினர்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய நிமல் கருணதிலக்காவும் மற்றும் ஏழு பேரும் தம்மை ஆதரிப்பரென்று பிலிப் நம்பினர். ஆனல் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்காததால் பிலிப்புக்கு ஏமாற்றம். வெளிவந்த ஏழுபேரில் மூவர் மீண்டும் அரசாங்கக் கட்சியில் சேருகின்ருர்கள்!

பிரதமரிடம் விசுவாசம் தெரிவித்து அவசர உறுதியாக ஆதரிப்பதாகக் கையொப்பங்கள் வாங்கிய நிமல் கருணதிலக்கா, பிரதமரின் தூண்டுதல் மீதே தாம் அதையும் செய்ததாக, அதேகூட்டத்தில்தெரிவித்தார். ஆனல் அவருடன் ராஜினமாச் செய்தவர்களில் 4 பேர் அக்கூட்டத்துக்குச் செல்லாதது குறிப்பிடத்தக்கது. அதிகாரம் எந்தப்பக்கம் இருக்கிறதோ அங்குஆட்கள் சேருகின்ருர்கள்.

### கம்யூனிஸ்ட்

கம்யூனிஸத்தைப் பிரதமர்பண்டாரநாயக்கா, குருநாகல் மகாநாட்டில் கண்டித்தது, கம்யூனிஸ்ட் கட்சிக்குப்பிடிக்கவில்லை. இனி இந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முடியாதென்றும், ஆனலும் எதிர்க்கட்சி கொரடாவுக்கு உட்படாமல் சுதந்திரமாகப் பார்லிமென்டில் இருக்கப்போவதாகவும் அக்கட்சி வெளியிட்டுள்ள தீர்மானம் கூறுகிறது. இந்தத்தீர்மானம் அர்த்தமற்றதென்று டக்டர் என்.எம். தெரிவித்தார்.

மற்றும்படி சுதந்திரப் பிரதிநிதிகளில் சிலர் பதவிகிடைத்தால், அரசாங்கக் கட்சியிலே சேர ஆவலுடன் முன்வரலாம்.

### சேர் ஒலிவர்

"நியூஸ் வீக்" என்ற அமெரிக்க பத்திரிகை, பாகிஸ்தானைப்பின் பற்றி இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படலாமென்று அரசியல் சோதிடம் கூறுகிறது.

இன்றுள்ள அரசாங்கக் கட்சிக்குப் போதிய பலமில்லை என்றும், பிலிப் தொந்தரவு கொடுத்தால் மிதவாதிகள் சேர் ஒலிவரை எதிர்நோக்கலாமென்றும், அவர்தான் இராணுவ தளபதி என்றும், நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அவர் அயூப்கான் போல் ஏற்கலாமென்றும், இப்போதுள்ள அரசாங்கம் அடுத்த கோடைவரை தள்ளாடி நடந்தாலும் நாட்டின் பொருளாதாரம் சீர்கெடுமாயின், மாறுதலை நீண்டகாலம் தவிர்க்க முடியாதென்றும் கூறுகின்றது.

இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்பட வேண்டுமென்பது சில வல்லரசுகளின் ஆசை. அதற்கான சூழ்நிலைகளை அவை மறைமுகமாக ஏற்படுத்த முயலலாமென்றும்கருதப்படுகிறது.

ஆனல் சேர் ஒலிவர், பார்லிமென்ட் முறையைத் தீவிரமாக ஆதரிப்பராதலால் கூடுமானவரை அவ்விதம் ஏற்படுவதைத் தவிர்க்க அவர் எல்லா முயற்சிகளையும் செய்யலாமென்றும், ஆனல் அவசியமேற்படின் அவர் எப்பொறுப்பையும் ஏற்கத் தயங்க மாட்டாரென்றும் கருதப்படுகின்றது.

## துறவியின் சேவை

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புத்துயிர் அளித்தார். அவர்களில் ஒருவர் செய்த பணியை ஆயிரம்பேர்களாலும் செய்ய முடியுமா?

*   *   *

நம்மிடையே விவாகமாகாத பெண்களும், புருஷனை இழந்த பெண்களும் வாழ்க்கையை ஒரு பாரமாகக் கருதி, நாட்களை வீணுக்குகின்ருர்கள். அவர்களைச் சேர்த்து, அவர்களது நேரத்தையும் சக்தியையும் நல்லதுறைகளில் பயன்படுத்தக்கூடிய ஸ்தாபனம் எதுவும் இல்லை. அபாரமான இச் சக்திகளை எல்லாம் நாம் வீணுக்குகின்ருேம்.

கல்கத்தாவிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் பெண்களுக்காக ஒரு தனிப்பகுதி மூன்ருண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறதாம். மலையாளத்தில் ஒன்றுள்ளதாம். இலங்கையிலே அவ்விஸ்தாபனம் ஒன்றுகூட இல்லாதது ஒரு பெரிய குறையாகும். இக் குறை இங்கு ஓரளவாவது தீருமாயின், நமது சமூகமும் தலைதூக்கி முன்னேற வழி பிறக்கும். —ஐயாறன்

## பூஜ்யம் தபால்

ஒன்பது மந்திரிகள்
C/o. கனம்
விமலா விஜயவர்த்தன
கொழும்பு.

நவக்கிரகங்களே!

இப்படி நான் உங்களை அழைப்பதற்காக மன்னிக்க வேண்டும். என்ருலும் இதற்குக் காரணமுண்டு.

நவ என்ருல் ஒன்பது. சூரியன், சந்திரன், செவ்வாய்...... சனி,......ராகு கேது முதலான ஒன்பது கிரகங்கள்தான் உலக மக்களை ஆட்டி வைப்பதாகக் கருதப்படுகின்றது. அதே போல நீங்கள் ஒன்பதுபேரும் இப்போது, பிரதம மந்திரியையும், இலங்கை அரசியலையும் உங்கள் இஷ்டம்போல் பம்பரமாக ஆட்டி வைக்கின்றீர்கள்.

இரண்டுவார காலமாக மந்திரிசபைக் கூட்டத்துக்கு வரமாட்டோம் என்று "ஸ்டிரைக்" செய்து, பிரதமரைப் பணிய வைத்து, பிலிப்பை விரட்டி, அரசியலில் அபாரமான வெற்றியைப் பெற்றீர்கள்.

இப்போதும், இரு அரை மந்திரிகளையும் முழு மந்திரிகளாக்க வேண்டுமென்று உங்களுக்குள் ரகசியமாகக் கூடிப் பேசித் தீர்மானித்து, மந்திரி சபையில் எவ்வித மாற்றம் செய்யவேண்டுமென்பது குறித்து பிரதமமந்திரிக்கு "சிபார்சு" செய்திருப்பதாக ஒரு செய்தியைப் படித்தேன்.

உங்கள் 'சிபார்சை' ஏற்காமல், வேறு முடிவு செய்தால், நீங்கள் மீண்டும் "ஸ்டிரைக்" செய்வீர்களா? எப்படியும் இந்தப்பீதி பிரதமருக்கு இருக்கும் ஆதலால் அவர் உங்களது 'கட்டளை'யை அப்படியே நிறைவேற்றி வைப்பாரென்றே கொள்ளலாம்.

இப்படிக்கு
**பூஜ்யம்.**

**குறிப்பு :**

வானத்திலுள்ள நவக்கிரகங்கள் தங்களைப்போல் இப்படி ஒன்று சேருவதில்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு திசை பார்க்கும். ஆனல் நீங்களோ ஒன்றுபட்டுக்கட்டுப்பாடாக ஒத்துழைத்து வானத்து நவக்கிரகங்களையும் மிஞ்சிவிட்டீர்கள். உங்களுக்கு 'திருஷ்டி' தோஷம் விழுந்துவிடுமோ என்றுதான் தோன்றுகின்றது. யு. என். பி. காரர்கள் உங்கள்மீது கண் போட்டு, உங்களைக் கலைத்துவிட்டதையும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். பிலிப்பும் சும்மா இருக்கமாட்டார். அதனல் உஷார்!

"பூ"

ஸ்ரீ டட்லி சேனநாயக்கா,
யு. என். பி. கட்சித்தலைவர்,
கொழும்பு.

தலைவரே!

இன்னும் சில மாதங்களில் யு.என்.பி. அரசாங்கம் அமைக்கப்படுமென்று அரசியல்சோதிடம் கூறுகிறீர்கள்.

சில மாதங்களில் அரசாங்கம் குலைந்து பொதுத்தேர்தல் நடைபெறுமென்றும் தங்கள் 'தீர்க்க தரிசனம்' மெய்யாகும் என்றும், முடிவான போருக்குத் தயாராக இருப்பதாயும் ஒரு கூட்டத்தில் தெரிவித்தீர்கள்.

சென்ற வருஷம் மே மாதக் கலவரங்களுக்கு முன்பு பல பொதுக்கூட்டங்களில் தாங்கள் கூறிய சோதிடம் எனக்கு ஞாபகம் வருகிறது. பொதுத் தேர்தல் நடைபெறப்போவதாகவும், அதற்கு எல்லோரும் தயாராக இருக்கும்படியும் கேட்டீர்கள். ஞாபகம் இருக்கிறதா?

ஆனல் பொதுத்தேர்தல் வரவில்லை. நாட்டில் என்றுமே இல்லாத முறையில் பெரிய கலவரங்கள் ஏற்பட்டன. தங்களது "ஸியரட்ட" பத்திரிகையில் "தமிழரைக் கொல்லுங்கள்" என்ற பாடல் வெளியாயிற்று. (இவ்விஷயமாக வழக்கும் நடந்து வருகிறது) அந்தப் பாடல் வெளியான சில நாட்களிற் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். மீண்டும் அவ்வித நிலை ஏற்படக்கூடாதென்பதே என் கவலை.

இப்படிக்கு,
**பூஜ்யம்.**

## கந்தசுவாமி நினைவு

வங்கி ஊழியர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் அங்கத்தினர் வெள்ளிக்கிழமை (5-6-59) காலை 11 மணியளவில், காலஞ்சென்ற தொழிற்சங்க ஊழியர் கந்தசுவாமிக்கு அஞ்சலி செய்யும் முகமாக 2 நிமிடங்கள் மௌனம் அனுஷ்டித்தனர். நாடு முழுவதிலும் உள்ள தொழில் ஸ்தாபனங்கள் எல்லாமே இந்த 2 நிமிட நேர மௌனத்தை அரசாங்கத்தின் ஆதரவுபெற்று அனுஷ்டித்தனர்.

## அரசினர் இசையாசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம். யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. கே. வேலாயுதபிள்ளை, உப-தலைவர்: திரு. எம். முத்துக்குமாரு, காரியதரிசி: திரு. ஏ. நமசிவாயம், உதவிக் காரியதரிசி: திருமதி ஸ்ரீதேவி பத்மநாதன், தனதிகாரி: திரு. ஏ. சோமசுந்தரம், உப-தனதிகாரி: திரு.கே. குமாரசுவாமி. நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**குறிப்பு :-**

சென்ற பொதுத்தேர்தலில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்கள் கட்சி ஒரு அபேட்சகரையும் நியமிக்க முடியவில்லை. தனிச் சிங்களக் கொள்கைதான் இதற்குக் காரணமாகும். அத்தீர்மானத்தை நிறைவேற்றியபின், யு. என். பியில் இருந்து தமிழர் வெளியேறினர். இப்போது தங்கள் கட்சியில் ஒரு தமிழரும் உள்ளனரோ என்பது தெரியவில்லை. அத்தீர்மானம் களனி மகாநாட்டில் நிறைவேறிய போது தாங்கள் அக்கட்சியிலிருந்து விலகியிருந்தால், அதற்குத் தாங்கள் பொறுப்பல்ல என்று கூறலாம்.

ஆனல் தங்கள் புகழ்பெற்ற தந்தையார் சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்க ஏற்பாடு செய்து, சமூக ஒற்றுமைக்கு அடிகோலினர். அவரைப்பின்பற்றி, தாங்கள் களனியிற் செய்யப்பட்ட மொழிப் பாதகத்தை மாற்றி, தமிழரின் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெறும் உத்தேசம் தங்களுக்கு உண்டா? குறுகிய வகுப்புவாத அரசியல்வாதியாக இல்லாமல், விரிந்த அரசியல் ஞானியாகத் தாங்கள் விளங்கவேண்டுமென்ற ஆவலிலேயே இதைத் தங்களுக்கு எழுதலானேன். "பூ"

## சேவை மனப்பான்மை.......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகித்தார். 'இந்து சமயத்தின் மூலாதாரங்கள்' என்னும் பொருள்பற்றி சுவாமி அவர்கள் அரியதொரு விரிவுரையாற்றினர்கள்.

சனிக்கிழமை 6-6-59 மாலை 6 மணிக்கு கொழும்புத் திட்டச் செய்தி அதிகாரி திரு. இராமகிருஷ்ண சட்டர்ஜி 'கீழைத் தேசங்களிற் புதுமலர்ச்சி' என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சுவாமி நிச்ரேயஸானந்தாஜி 'இந்து சமயமும் இக்காலச் சிந்தனை இயக்கமும்' எனும் பொருள் பற்றி விரிவுரை ஆற்றுவார். இக் கூட்டங்கள் வித்தியாலயத்தில் நடைபெறும்.


**ஆவணி G. C. E. பரீட்சை எடுப்போர்க்கு**

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

**சுகாதாரமும் சரீர சாஸ்திரமும்**

**வினு விடைகள்**

**(5 வருடத்துக்குரிய வினுக்களும் விடைகளும்)**

கடந்த இருபரீட்சைகளில் இப்புத்தகத்திலிருந்து பல கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தமாதிரிவிடைகளை ஒரு முறை பார்த்தாலே பரீட்சையில் தவருது தேறலாம்.

**விலை ரூபா 1-60** — தபாற்கூலி 15 சதம்

**அர்ச். பிலோமினு அச்சகம்,** யாழ்ப்பாணம்.

மாதர் பகுதி

# மாதரும் கிராம முன்னேற்றமும்

— திருமதி ச. கந்தவனம் —

ஒரு கிராமத்தின் முன்னேற்றத்தை அதன் பொருளாதார நிலையைக் கொண்டே அறியலாம். பலகுடும்பங்கள் சேர்ந்தது ஒரு கிராமம். ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தது அக் கிராமத்தின் பொருளாதார நிலை. குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் பெண்ணின் முக்கிய பொறுப்பு. எனவே கிராம முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருப்பவர் பெண்கள் என்ருல் மிகையாகாது. பெண்கள் இந்தப் பொறுப்பைச் சரிவர நடாத்தக் கட்டாயக் கல்வி அவசியம். ஆண்கள் மாத்திரம் கல்வி கற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது. கிராமமுன்னேற்றத்திற்கு ஆண்களிலும் பார்க்கப் பெண்களே கூடிய பொறுப்புடையர். ஏனெனின் பெண்களே குடும்பத்தின் விளக்குகள். குடும்பமே தேச முன்னேற்றத்தின் இருப்பிடம். குடும்பத்தின் ஒளி பெண். அவளே பிள்ளைகளையும் கல்வித் துறையிலும் ஒளிபெறச் செய்கிருள். கிராம முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அவளே தூண்டுகோல். குடும்பத்தின் விளக்கு ஒளிபெற்று விளங்க நாட்டின் முழுத் தேசத்தின் விளக்குகளும் தாமாகவே ஒளி பெற்று விளங்கும்.

### கல்வி அறிவு

அறிவின் மிக்க ஒரு பெண், சமூகத்திற்குப் பல துறைகளிலும் உதவுகின்ருள். இதற்கு பெண்கள் கல்வித்திட்டம் சரிவர அமைய வேண்டும். கல்வி யென்பது வெறும் ஏட்டுப் படிப்பு மட்டுமல்ல. பட்டம்பதவிகளைக் குறிக்கொண்டு படித்தலும் கல்வியாகாது. கல்வியென்பது அறியாமையை நீக்கி அறிவை விளங்கச் செய்வது. வாழ்க்கைக்குத் தேவையான கல்வியில் பள்ளிக்கூடங்கள் பயிற்சி அளித்தல் வேண்டும். மனித வாழ்வு முன்னேற அறிவு அவசியம். இந்த நாட்டின் வருங்காலம் உயர்வதும் தாழ்வதும், வாழ்வதும், வீழ்வதும் வருங்காலப் பெண்களைப் பொறுத்தது. வருங்காலத்தை வாழ்விக்கப்போகும் இன்றைய இளம் பெண்கள், இன்று பெறும் அறிவுப் போதனையைப் பொறுத்தே வருங்காலம் அமையும்.

### எதிர்கால வளர்ச்சி

எதிர்கால ஏற்றத்தின் உயர்வு இன்றைய பெண்கள் முன்னேற்றம். பெண்கள் முன்னேற்றமடைவதற்கு வாழ்க்கைக்கு வழிவகுக்கும் கல்வியறிவே அவசியம். கல்வியறிவைப் பெறுவதோடு கல்வியறிவை நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள மக்களுக்கும் பரப்பவேண்டும். அவர்களின் குறைகளை நீக்குவதற்கு முடிந்த உதவிகளை முயற்சிகளைச் செய்யமுன் வரவேண்டும். நாம் முன்னேற வேண்டுமானுல் மனித சமூகம் முன்னேறவேண்டும். நாம் வாழும் சமுதாயத்தை உயர்த்தாமல் நாங்கள் மட்டும் உயர முடியுமா?

பெண்மணிகளே! உங்கள் அறிவை நாட்டின் நன்மைக்காகப் பயன் படுத்துவீர்களாயின் உங்கள் அறிவு நாகரிகத்தை வளர்க்கவும் சுதந்திரத்தை நிலை நாட்டவும் உபயோகமாகிறது.

### வாழ்வு மலரல்

நாட்டின் பெரும்பாலான பெண்கள் வாழ்வில், சுவையின்றி, சத்தற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். கண்மூடி வழக்கங்களைக் கையாண்டுகொண்டு வாழ்க்கையில் முன்னேற்றமடையாமல் தவிக்கிருர்கள். தம்மையும், தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தையும் கூர்ந்து நோக்கினுல் சிந்தனசக்தி தோன்றும். வாழ்வு மலர வாய்ப்பும் வசதியும் கிடைக்கும்.

நாட்டு மக்களுடன் ஒற்றுமையுடன் வாழ்வதற்குரிய முறைகளைக் கையாளுங்கள். உங்கள் சகோதரிகளின் உள்ளத்தை விரிவாக்குங்கள். அறிவை விருத்தியடையச் செய்யுங்கள். அன்பும் பணிவும் அணிகலன்களாகப் பூண்டு விளங்குங்கள். உங்களைச் சுற்றியுள்ள பெண்கள் உங்களைப் பார்த்துத் திருந்தும்படியான வாழ்க்கை நடாத்துங்கள். நம் சிறு குடும்பங்கள் பரந்த உலகக் குடும்பத்தின் உறுப்புக்கள். கூடிப் பேசும்போது தேவையற்ற பேச்சுக்களை விட்டு அறிவு வளர்ச்சிக்குரிய பேச்சைப் பேசுங்கள். பலரைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். சிலரோடு மட்டும் பழகுங்கள். ஆடம்பர மோகத்தை அகற்றுங்கள். பாரதியாரின் பாடல் ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன்.

"ஏட்டையும் பெண்கள்
தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து
விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்
தார்."

வீட்டுப் பொறுப்புகளில் கணவனும் மனைவியும் ஒத்துழைப்பதுபோல் நாட்டுப் பொறுப்புகளிலும் அவரவர்பங்கைச் சரிவர நடாத்தவேண்டும். பொருள் வரும் வழிகளைப் பெருக்கிவந்த வருவாயைத் திரட்டிச் சேர்க்கப்பழக வேண்டும். செலவை, வகுத்துச் செலவு செய்யவேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் வல்லவராய் விளங்க வேண்டும்.

### வீட்டுப்பணி

எமது வாழ்வு மலரவேண்டுமாயின் குடும்பப்பெண் அதற்கேற்றபடி பயிற்சி அடைந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் அவசியம் வீட்டுப் பணியில் பயிர்சி பெறல்வேண்டும். ஓய்வு நேரங்களை வீணுக்காமல் தையல் வேலை, பன்ன வேலை, நெசவுத் தொழில் போன்ற கைத்தொழில்களில் ஈடுபடவேண்டும். இதனுல் கிராமத்தின் பொருளாதாரம் விருத்தியுற இடமுண்டு. பெண்கள் தமக்கு இயற்கையாயுள்ள அறிவோடு கிராம முன்னேற்ற போதனுப் பயிற்சிப் பாடசாலையில் பெறும் பல பயிற்சிகளிலும் பக்குவம் பெற்ருல் குடும்ப வாழ்வு சலனமற்றுக் காணப்படும். பிள்ளைகள் சுகமாய் பிரகாசமாய் விளங்குவார்கள். குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் பெருகும். அக்கிராமத்தின் சமுதாய கலாச்சாரப் பண்பாடுகளையும் உயர்த்தமுடியும். கிராமங்கள் முன்னேற்றமடையும். தேசம் செழித்து ஓங்கும். எல்லோரும் இன்புற்று வாழ்வார்கள்.

★ நகைகளுக்கும்
★ வைரங்களுக்கும்

நகைமாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்
65, கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்.

# தமிழ் நூற்காட்சி

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முயற்சி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூற்காட்சி அமைப்பாளர் எழுதுவதாவது:

உலகெங்கும் 1958 இல் வெளியிடப்பட்ட பயனுள்ள சிறந்த தமிழ் நூல்களையும் மற்றும் சிறந்த தமிழ் நூல்கள் அனைத்தையும் திரட்டி ஒரு சிறந்த நூற்காட்சி ஒன்றை மிக விரைவில் நடத்துவதென்று கொழும்புத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு தீர்மானித்துள்ளது. இதையொட்டி, சிறந்த நல்ல நூல்களைத் தந்துதவும் படி உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ள அனைவரையும் மிகத் தயவாகக் கேட்டுக் கொள்கிருேம்.

சிறப்பாக, நூல்களை வெளியிடும் சிறந்த பணியைச் செய்யும் வெளியீட்டாளர்களும், நூலாசிரியர்களும் மிகுதியாக உதவி செய்யலாம் சிறந்த நூல்களை வாங்கி விற்கும் நூல் விற்பனையாளர்களும், அரிய அறிவுச் செல்வங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் நூலகங்களும் கூட மேற்கொண்ட இந்தக் காட்சி சிறக்க உதவலாம். தமிழகத்தில் உள்ள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பாரி நிலையம், ஸ்டார் பிரசுரம், சக்தி வெளியீடு, பழனியப்பா சகோதரர்கள் முதலான பல சிறந்த வெளியீட்டாளர்களும், மற்றும் நூலாசிரியர்களும், இலங்கையில் ஸ்ரீ லங்கா பிரசுரத்தார், கலைவாணி பிரசுரத்தார் முதலியோரும், மற்றும் நூலாசிரியர்களும் பெரும் உதவி செய்து நம்மை ஆதரிக்கலாம் என்பதைத் தயவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிருேம். யாழ்ப்பாணம் மத்திய நூலகத்தார், யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தார் முதலியோரும், கொழும்பில் உள்ள ஏராளமான நூல் விற்பனையாளரும் காட்சிக்கு வைப்பதற்கு அரிய நூல்களைத் தந்துதவலாம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் கொழும்பில் உள்ள தமிழர்களைப் பலவகையிலும் திருப்தி செய்யக்கூடிய ஒரு அரிய சிறந்த நூலகத்தை நிறுவப் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. இந்த நிலையில்வெளியீட்டாளர், நூலாசிரியர், நூல் விற்பனையாளர் முதலியோர் காட்சிக்காகத்தரும்நூல்களைக் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாகவும் தந்துதவலாம். அப்படி அன்பளிப்பாகத் தரப்படாதவை பொறுப்போடு திருப்பி அனுப்பி வைக்கப்படும் என்ற உறுதியை அளிக்கிருேம். சம்பந்தப்பட்ட செலவுகள் எம்மைச் சார்ந்தவையே.

தமிழில் அரிதென்றும், புதிதென்றும் கருதப்படும் அறிவியல் (விஞ்ஞானம்) பொருளாதாரம், அரசியல், மொழி பெயர்ப்பு முதலிய துறைகளில் எடுக்க முடிந்த நூல்களை எல்லாம் எடுக்க முயல்கிருேம். பழைய அகராதிகள் எல்லாம், பழைய இலக்கண நூல்கள் நிகண்டுகள்: தமிழில் வெளிவந்த முதல் நூல்கள், திருக்குறள் உரைகள், தமிழ் இலங்கை சம்பந்தமான அத்தனை நூல்கள், அச்சிழந்த அரிய நூல்கள் முதலியனவற்றையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிருேம். முக்கியமாக இந்தத் துறைகளில் இயன்ற உதவியை அன்பர்கள் அனைவரும் செய்ய வேண்டுகிருேம். மேற்கொண்ட பணி சிறந்தது. சிறப்பாகவேஅது சித்திபெறத் தமிழன்பர்கள் அனைவரின் உதவியும் வேண்டும்.

நூற்காட்சி சம்பந்தமான கருத்துகளையோ, அல்லது நூற்காட்சிக்கான நூல்களையோ அனுப்புவோர்:— "நூற்காட்சி அமைப்பாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம், இ: 7, 57 ஆம் ஒழுங்கை கொழும்பு—6" என்ற முகவரிக்கு அனுப்புக.

# சைவ மங்கையர் கழகத்தின் ஆதரவில்

## சித்திவிநாயகர் வித்தியாசாலை

மன்னர் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் கொழும்பு சைவமங்கையர் கழகத்தாரின் ஆதரவில் நிறுவப்பட்டுள்ள சித்திவிநாயகர் வித்தியாசாலையை மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சீ. லுடிக்கின்ஸ் சமீபத்தில் திறந்துவைத்தார். முதல் வகுப்பை உயர்திரு. சேர் கந்தையா வைத்தியநாதன் ஆரம்பித்து வைத்தார். மன்னர்க் கிளை சைவமங்கையர் கழகத்தின் நிர்வாகசபைக்கூட்டத்தில் 14 அங்கத்தவர்களைச் சேர்ந்த ஒரு தற்காலிக நிர்வாகசபை தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு. வி. எஸ். துரையப்பா தலைவராகவும், திரு. க. இரகுநாதன் காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். மன்னர் மாவட்டத்தில் முதன்முதல் நிறுவப்பட்ட சைவ வித்தியாசாலை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வித்தியாசாலையில் நாள்தோறும் இந்து சமயப் பிள்ளைகள் வந்து சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர். இதுவரை 150 பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். பிள்ளைகளின் தொகை வருஷ முடிவில் இருமடங்காக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.



லண்டன் மாநகரம்

200 ஆண்டுகளுக்கு முன் லண்டன் மாநகரின் தோற்றம்.

# சிறுவர் பகுதி

## சுகவழி

சுகவழியில் நின்று
தொல்லை யின்றிவாழ
அகமுடன் புறத்தை
அசுத்தமின்றி வைப்போம்.

வீடுவாசல் கூட்டி
வீதி சுத்தமாக்கி
நாடுநகர் எங்கும்
நன்மைசெய்து நிற்போம்.

நல்ல உடல்பெற்று
நாளும் திடமாக
செல்ல வழிகாட்டும்
தேக சுகாதாரம்.

சின்னஞ் சிறுபாலர்
தேக சுகம்காண
சொன்ன நெறிதன்னை
தொல்லையின்றிக் காப்போம்.

நாட்டின் சுகாதார
நாளில் நாமும் எங்கள்
வீட்டொடு அயலை
மேனிலைசெய் வோமே.

## இராமுவின் அதிட்டம்

ச. யோகரத்தினம் (ப. எ. 151)

இராமு ஒரு ஏழைச் சிறுவன். அவனுக்குப் பத்து வயது இருக்கும். ஒரு சிறு குடிசையில் இராமுவும், அவனது தங்கையும், தாயாரும் வசித்து வந்தார்கள்.

ஒருநாள் இராமுவைத் தாயார் வீட்டிற்குச் சமீபமாகவுள்ள காட்டிற்குச் சென்று விறகு பொறுக்கிவருமாறு கூறினாள். இராமு கயிறும், நாலு அப்பமும் கொண்டு புறப்பட்டான்.

நண்பகல்நேரம். இராமு காட்டை யடைந்தான். அவனுக்குக் களைப்பாக இருந்தது. ஓர் அரசமரத்தின் கீழிருந்து பொட்டலத்தைப் பிரித்தான். அவன் இருந்த மரத்தின்மேல் நான்கு பிசாசுகள் இருந்தன. இராமுஅவற்றைக்காணவில்லை. அவைகள் அவனைப் பிடிக்க நினைத்தன.ஆனால் அவை நினைத்தது நடக்கவில்லை. காரணம்? இராமு அப் பொட்டலத்தைப் பார்த்து "நான்கிலும் இரண்டை இப்பொழுது தின்போம், மிகுதி இரண்டையும் பின்பு தின்போம்" என மனதுக்குள் முணுமுணுத்தான். இதைக் கேட்ட பிசாசுகள் தங்களைத்தான் அவன் சாப்பிடப்போகிறான் என நினைத்தன. அப்பொழுது அவற்றுள் பெரிய பிசாசு கீழே இறங்கிவந்து இராமுவின் கால்களில் விழுந்து வணங்கியது. "எங்களைக் கொல்ல வேண்டாம். நாங்கள் நால்வரும் ஒவ்வொரு பொருள் தருகிறோம்" என்றன. இராமுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பயமின்றி நின்றான். உடனே ராமு "நீங்கள் பிழைக்க வேண்டுமானால் பொருள்களைக் கொண்டுவாருங்கள்'' எனக் கூறினான். அப்பொழுது நான்கு பிசாசுகளும் ஒவ்வொரு விசேடமான பொருளை ராமுவிடம் கொடுத்தன. அவற்றில் ஒன்று ஒரு தங்கப்பெட்டி. அப்பெட்டியில் எதை நினைத்துக்கொண்டு கைவைத்தாலும் அது உடனே கிடைக்கும். இராமு அப் பொருள்களை எடுத்துக்கொண்டு மகிழ்வுடன் வீடு சென்றான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

253. எஸ். யோகரெத்தினம், 165, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
254. சூ. சூரியகுமாரேஸ்வரன், த. க. பாடசாலை, பணியப்பின்னக்கட்டை, இடல்காசின்னை.
255. கு. சித்தார்த்தன், மே/பா கே. ரி. எஸ். சம்பந்தன், 115, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
256. சி. பியசேன, 78, மெயின் வீதி, எட்டியாந்தோட்டை.
257. சி. சிவலோகநாதன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
258. பொ. சிவதாசன், தம்பளை, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
259. மணிசேகரன், 'பாரதி அகம்' சரவணை, வேலணை.
260. பே. ஞானவல்லி, மே/பா எஸ்.ஏச். பேரின்பநாயகம், கொக்குவில்.
261. வ. யோ. யேசுதாஸன், மே/பா வ. நல்லையா, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
262. ஆர். சரோஜா, 32, உக்கவத்தை வீதி, றக்குவானை.
263. யூ. எல். எம். அபூவக்கர், அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு.
264. க. கருணாநிதி, பெரியகல்லாறு, கல்லாறு.
265. ர. நந்தசேன, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.
265. ஆ. மு. ஹுசைன், அரியார்வீதி, கல்முனைக்குடி, கல்முனை-7.
267. வை. சச்சிதானந்த சர்மா, சிவன்கோவிலடி, காரைநகர்.
268. க. செல்லத்துரை, 6-ம் வட்டாரம், புங்குடு தீவு.
269. சோ. மகிந்தா, 3, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
270. ச. சிவகுமாரன், 7, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
271. ச. இராசரெத்தினம், 152, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
272. ஏ. அப்துல் றகீம், 37, வரக்கமுரா, உக்குவலா.
273. சு. ஸ்ரீதர சர்மா, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
274. பி. அம்புறோஸ், 'பஸ்தியன் வில்லா' கரவெட்டி.
275. இ. வரதலெட்சுமி, 24/1, றெயில் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
276. இ. நா. சிவராசா, 'நாகேசுவரி'வித்தியாசாலைவீதி, சரவணை வீதி, வேலணை.
277. செ. ஜெயரட்ணம், மே/பா செனகரட்னம், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
278. சி. பாலகிருஷ்ணன், புனித கபீரியல் கல்லூரி, எட்டியாந்தோட்டை.
279. கு. சிவகுமாரன், நல்லூர், யாழ்ப்பாணம்.
280. சி. ஜெயரும், மே/பா வி. சின்னத்தம்பி, தொல்புரம்.
281. ஆ. தங்கராசா, ஆரையம்பதி 1-ம்குறிச்சி, காத்தான்குடி P. O.
282. ச. கமலரஞ்சிதம், 2, லேக் வீதி, மட்டக்களப்பு.
283. ஞா. அ. அம்புறோஸ், 21, வவுண்டறி வீதி வடக்கு, மட்டக்களப்பு.
284. இரா. அறிவழகு, 10/10 மாச்சம்பாளையம், சுந்தராபுரம் P. O. போத்தனூர் வழி, கோவை மாவட்டம், தமிழ்நாடு.

செல்வச் சிறுவர்களே,

எப்படி, நல்ல சுகமாக இருக்கின்றீர்கள் தானே! இவ்வாரம் இலங்கை முழுவதிலும் சுகாதார வாரம் கொண்டாடப்படுகின்றது. சிறுவர்களாகிய நீங்கள் சக்தி நிறைந்த உணவைச் சாப்பிடவேண்டும். அப்போதுதான் நோய் இல்லாமல் வாழ முடியும். 'சுகமே செல்வம்' என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

சின்ன மாமா

## உலக மக்கள் தொகை

இப்போது உலகமக்கள் தொகை ஏறத்தாழ 280கோடி என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை ஒன்று கூறுகிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன் உலகமக்கள் தொகை 250 கோடிதான்.


ருஷியர் நீங்கலாக ஆசியாவின் மக்கள் தொகை 156 கோடி. அதாவது உலகமக்கள் தொகையில் 56 சத விகிதம். ஐரோப்பாவின் மக்கள் தொகை 14 கோடியேயாகும்.


## 'ஈழநாடு' சிறுவர் பகுதி


- **ஈழநாடு சிறுவா பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 13-6-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

## அறிஞர்கள் வரலாறு : V அணுச்சக்தியின் சிற்பி







**அணுயுகம்:** 1942ஆம் ஆண்டு உலகத்தை அணுயுகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தது. வல்லரசுகளின் போட்டி அணுசக்தியைப் போருக்குப் பயன்படுத்தினலும், ஆக்க வேலைகளும் நடந்து வருகின்றன. உதாரணமாக, அமெரிக்காவில் நீர்மூழ்கிக் கப்பல் அணுசக்தியினலே இயங்குகிறது. இதே முறையில் போக்குவரத்துச் சாதனங்களும் இயங்க முடியும்.

**அணுசக்தியின் ஆக்க உபயோகங்கள்:** உலகத்தின் மற்றைய நாடுகளுடன் அமெரிக்கா சமாதானத்திற்கு உதவக்கூடிய முறையில் அணுசக்தியின் உபயோகங்களைப் பகிர்ந்துள்ளது. தொழில்துறை, வைத்தியம், விவசாயம் போன்ற பல்துறைகளிலும் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது அணுசக்தி.

**டக்டர் பேர்மியின் சாதனை:** விஞ்ஞானத் துறையில் துரிதமாக முன்னேறி வந்த டக்டர் பேர்மியின் வாழ்க்கை சாவினல் துண்டிக்கப்பட்டது ஆனல், அவரினது கண்டுபிடிப்புகள் உலகத்துக்கு என்றும் நன்மை பயப்பனவாக இருக்கின்றன.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(6-6-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்........................................................

விலாசம்...................................................

..................................................

.................................... ....................................
கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

6

# தேடி வந்த செல்வம்

— கசின் —

**கமக்காரனின் காதல் தூய்மையானது; வீரம் நிறைந்தது. உத்தியோகத்தனின் காதல் சுயநலம் கொண்டது.**

பண்டைப் பெருமை பொருந்திய தமிழ் நாகரிகம் எத்தனையோ அரசியல் பொருளாதார மாற்றங்களினின்றும் தப்பிப் பிழைத்து இன்றும் தன் சொந்தச்சாயலுடன் விளங்குகின்றது. இதைத்தான் அந்தக் கிழத் தம்பதிகளோடு உரையாடியபொழுது நான் உணர்ந்தேன்.

கிழவர் தனது கதையைச் சொன்னார். 'அப்பொழுது எனக்குப் பதினெட்டு வயது. நல்ல தடியனாயிருந்தேன். ஒரு மரவள்ளியில் பிடுங்கிய கிழங்கு முழுவதும், ஒரு பெரிய நீக்கற் பெட்டியில் அவித்த குரக்கன் பிட்டு முழுவதும் ஒரு மூச்சில் சாப்பிட்டுவிட்டு ஒரு பானை பழந் தண்ணீரும் குடித்துவிட்டுப் போவேன்.

இவளுக்கு அப்ப பன்னிரண்டு வயதிருக்கும். நல்ல சிவப்பி. சிவப்பி என்றுதான் இவளை எல்லாரும் கூப்பிடுவார்கள். எங்கடை தோட்டத்திற்கு அடுத்த தோட்டந்தான் இவையின்ரை தோட்டமும். இவள் தோட்டத்திற்கு இடையிடையில் வருவாள். ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிறதேயன்றி நாங்கள் கதைக்கிறதில்லை. ஒருவரை யொருவர் பார்க்கிறதிலே எங்கள் ஆசை இருந்தது. இத் தருணத்தில் கிழவர் கிழவியைப்பார்க்கக் கிழவி தனது வெட்கத்தை வெளிப்படுத்தினாள்.

'ஒரு முறையிலே இவள் எனக்கு மச்சாள்தான். முதலிலே இவளுக்கும் எனக்கும் கலியாணப்பேச்சு நடந்தது. இருபது தங்கப்பவுணிலே தாலிக்கொடி கட்டவேண்டும்; என்று இவளின்ரை தகப்பன் கேட்டார். நாங்கள் எத்தனை பவுணிலும் கட்டுவம். நாங்கள் ஏதோ பொருள்பண்டம் இல்லாதவர்கள்மாதிரி இப்படிக் கேட்கலாமா? என்று என்னுடைய அப்புவுக்குக் கோபம் வந்துவிட்டது. எங்களுடைய கலியாணமும் குழம்பிப்போச்சு. நாங்கள் ஒரேமாதிரி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு திரிந்தோம். மேலும் ஒரு வருஷம் போட்டுது.

இவளுக்கு வேறு வேறு இடங்களில் கலியாணப் பேச்சு நடக்குது என்றும் கேள்விப்பட்டேன். அப்படியிருந்தாலும் நான் விதியின்படி நடக்கட்டும் என்று பேசாமல் இருந்திடுவேன். இதை நல்லாய்க் கேள் தம்பி.

'உந்தக் கருங்காலிக் கறுவலுக்கு நான் என்ரை பெண்ணைக் கொடுப்பேனே' என்று இவளின்ரை தகப்பன்—அம்மான்—இரண்டொருவர்கிட்டக் கதைத்திருக்கிறார். இதை நான் கேள்விப்பட்டதும் எனக்குப் பெரிய ஆத்திரமாய் இருந்தது.

'இஞ்சாருங்கோ, உப்படி ஒருபக்கத்துக் கதையை மாத்திரம் சொல்லாதேயுங்கோ. உங்கடை கொப்பர் கதைச்ச கதையையும் சொல்லுங்கோ', என்று கிழவி ஒரு ஆட்சேபனையைக் கிளப்பினாள்.

'என்ரை அப்பு என்ன கதைச்சவர்;' உந்தப்பெண் மூச்சுப் பட்டிக்குள்ளே நான் என்ரை பெடியனை விடமாட்டேன்' என்று, 'சரிதானேயடி,' என்று கிழவியைக் கேட்டுவிட்டுக் கதையைத் தொடங்கினார்.

'ஒரு வைகாசிப் பறுவம்; எங்கடை அம்மன்கோவிற் பொங்கல். அன்றைக்கு எங்கடை ஊரவை .யெல்லாரும் கோயிலிலேதான் நிற்பினம். இராப் பத்துமணியிருக்கும். நிலவு காலிச்சு ஒரு பனை உயரத்துக்கு மேலேவந்திட்டுது.அப்ப என்னட்டை ஓறணைச்சிவலை நாம்பன்கள் நிண்டது. [விரலைக் காட்டி] இந்த இந்த அளவு கொம்பு. கைகீழுவித் தொடவேண்டும். நல்ல மினுமினுப்பான நாம்பன்கள். பாயத்தொடங்குங்கள் என்றால் உங்கடை கார் எல்லாம் பின்னுக்குத்தான்.

என்னோடே தோட்டஞ் செய்கிறவன்; முருகன் என்று ஒரு பெடியன். அவனிட்டைச் சொன்னேன் 'முருகா, ஒரு சாக்கு இராசவள்ளிக் கிழங்கும் கட்டிவைத்துக் கூடார வண்டிலைப் பூட்டடா' என்று.

'பொங்கலுக்குப் போறதில்லையோ என்று அவன் கேட்டான். பூட்டடா சொல்லிறேன் என்றேன். ஒரு நொடியில் அவன் எல்லாம் ஆயத்தப் படுத்திவிட்டான்.

வண்டிலைக் கொண்டுபோய் இவளின்ரை வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளி மறிச்சுப்போட்டு நான் தனியப் போனேன், இவளின்ரை வீட்டை. பொன்னி என்று ஒரு கிழவியை இவளுக்குத் துணைக்கு விட்டிட்டு மற்ற எல்லாரும் பொங்கலுக்குப் போட்டினம்.

பொன்னி வீட்டுத் திண்ணையில் கிடந்து நித்திரையாய்விட்டாள். இவள் பசுமாட்டுக்குப் புல்லு உதறிப் போட்டுக் கொண்டு நின்றாள்.

நான் விடுவிடென்று போய் இவளின் கையைப் பிடித்தேன். இவள் உதறினாள். சத்தம் போடாமல் வா, சொல்லுறேன்; என்று கையைப் பற்றியவண்ணம் சொன்னேன். இவள் ஒன்றும் பேசாமல் வந்தாள்.'

'ஆளைப் பார்க்கவே பயமாயிருந்தது. சத்தம் போட்டால் என்னசெய்வாரோ, என்று நான்பயந்துபோனேன்' என்று கிழவி தனது பெண்மையைப் பரிசுத்தப்படுத்தினாள்.

'இத்தனை வருஷத்திற்குப் பிறகும் தானும் விருப்பப்பட்டுத்தான் என்னோடுவந்தேன்; என்று சொல்லாமல் மழுப்புவதைப்பார் தம்பி; இது பெண்களின் பிறவிக்குணம்.' என்று கிழவர் கதையை மேலே தொடர்ந்தார். கிழவியோ, நல்ல சிவப்புக்கிழவி, வெட்கத்தினால் கிழவியின் முகம் மேலுஞ் சிவந்தது. என் அருகில் இருந்த தேவிக்கோ இந்தக் கட்டம் பெரிய வேடிக்கையாயிருந்தது.

'வண்டியிலே ஏறமாட்டேன், என்று முரண்டுபண்ணினாள். கட்டிப்பிடித்துத் தூக்கி வண்டிலுக்குள் போட்டு முருகா வண்டிலை விடு என்றேன். முருகன் தட்டிவிட்டான் சிவலை நாம்பன்களை. நாலுகாற் பாய்ச்சலிலே புழுதிபறக்கப் பாய்ந்ததுகள்.

'உனக்குத் தெரியுமோ என்னவோ, தெரியாது தம்பி. மந்துவில் என்று ஒரு பெரிய ஊர். அங்கே நாங்கள் அதிகமாகப் புகையிலைக் கன்றுக்குக் குழைக்கு அதிகமாகப் போறனான்கள். அங்கே 'மாப்பாண முதலி' என்று எனக்கு ஒரு சினேகிதன் இருந்தான். நாவசைய நாடசையக்கூடியமுறையிலே அவன் இருந்தான். இப்ப கிட்டடியிலே அவன் காலஞ் சென்றான்.

'ஓ, எனக்கு நல்லாய்த் தெரியும்' என்று நான் கதையைக் குழப்பாமல் சொன்னேன்.

அவற்றை வீட்டை வண்டிலை விடடா என்று முருகனுக்குச் சொன்னேன். விடியற்புறம் முதற் கோழி கூவ வண்டில் போய் அவற்றை வீட்டுப் படலையிலே நின்றது. நாம்பன்கள் சுர்ர், சுர்ர், என்று வெண்ணுரை தள்ளிக்கொண்டு நின்றன.

முதலியைக் கூப்பிட்டுச் சங்கதியைச் சொன்னேன். 'சரி, ஒன்றுக்கும் பயப்படாதே; இஞ்சை வாறவன் வரட்டும்.' என்று எனக்குச் சொல்லிவிட்டுத் தன்ரை பெண்சாதியை எழுப்பினார். முருகன் இராசவள்ளிக்கிழங்கைக் கொண்டு வந்து திண்ணையில் வைத்தான். அதைக் கண்டதும் மாப்பாண முதலியும் மனைவியும் அடைந்த சந்தோஷம்கொஞ்சநஞ்சமல்ல.' மாப்பாண முதலியின் பெண்சாதி வந்து இவளையும் கூட்டிக்கொண்டுபோய் எங்களுக்குத் தண்ணிவைத்துத் தந்து எங்களைப் படுக்கவிட்டினம்.

நான் ஏதோ நினைப்பில் 'ஓகோ' என்றேன். 'நீங்கள் வயது போனவர்களுடன் உப்படிப் பகிடி விடலாமா' என்ற அர்த்தத்தில் தேவி என்னைப் பார்த்தாள்.

'இதுதான் எங்கடை கலியாணவீடு தம்பி' என்று கிழவர் அதை உணர்ந்தவர்போல் கதையை முடித்தார். கிழவரின் பாஷையிலேயே சொல்ல வேண்டும் என்பதற்காக இப்படி எழுதினேன்.

'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்' என்று தேவி கேட்டாள்.

'எனக்கு ஒரு ஆம்பிளையும், ஒரு பொம்பிள்ளையும் இருக்கிறார்கள். மகனின் மகன் ஒருவன். வவனியாவில் பெரிய சாய்ப்புக் கடை வைத்திருக்கிறான். அவன்ரை பிள்ளை யொன்றுக்குப் பால் பருக்கென்று போட்டுவாறம்' என்று தேவையான வரலாற்றைச் சுருக்கமாகக் கிழவி சொன்னாள். அத் தருணத்தில் யாழ்தேவியும் கிளிநொச்சி நிலையத்தில் போய் நின்றது.

கிளிநொச்சி ஸ்ரேசன் சமீபிக்கிற தென்பதைக் கிழவரின் கதையில் மறந்த இருந்துவிட்டேன். கிளிநொச்சியில் வண்டி நின்றதும் எனது சூழல், சுற்றுடல், நடந்தவை எல்லாவற்றையும் மறந்து, பரபரப்புடன் இறங்குவதற்காக எனது கைப்பெட்டியைத் தூக்கினேன்.

இப்படியான சந்தர்ப்பங்கள் தான் ஒருவனின் சுயரூபத்தைக் காட்டக்கூடியன. பஸ் வண்டிக்காக ஒரு இடத்தில் பலபேர் காத்திருக்கிறோம். அச் சில நிமிஷங்கள் நாங்கள் ஒருவரோடொருவர் சினேகிதமாகி எங்கள் இன்ப துன்பங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்கிறோம். ஏதோ நெடுநாட்பட்ட சினேகிதர்கள் போல் ஆகிவிடுகிறோம். இத் தருணத்தில் பஸ்வண்டி வருகிறது. உடனே நாங்கள் ஒருபோதும் அறியாத அந்நியர் போல ஒருவரையொருவர் நெருக்கித் துன்பப்படுகிறோம். கணநேரத்தில் சற்று முன் நிகழ்ந்த நட்புறவெல்லாம் பறந்துவிடுகின்றன.

இது பல ஆண்டுகளாக அடிமைகளாகச் சீவித்து, அடிமை இரத்தம் ஓடுகின்ற ஒரு இனத்தின் செயலல்லவா? ஏதோ அகப்பட்டது மிச்சம் என்ற மனப்பான்மை வேறு யாருடையது? சந்தர்ப்பத்தை நழுவவிடாதே; அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்; மானம் மரியாதை, நேர்மை, நியாயம் என்று யோசித்தால் நீ பின் தங்கிவிடுவாய்.

'யாருடைய பங்கென்று யோசியாதே; கிடைக்கக்கூடிய பங்கெல்லாவற்றையும் அள்ளிக்கொள்' இது அடிமைகள் மந்திரமல்லவா?

இவ்வளவு நேரமும் என்னுடன் எத்தனை உறவாடி வந்தாள். அம்மட்டோ, அந்த வயோதிகத் தம்பதிகள் எங்களைத் தம்பதிகள் என்று நினைக்கச் செய்ததுமன்றி, அவர்கள் நினைப்பை மாற்றாது வந்திருக்கிறேன். இதெல்லாவற்றையும் மறந்து கிளிநொச்சி என்றதும் விழுந்தடித்துக் கொண்டு இறங்க முற்பட்டேன். எனக்குப்பின்னால் எனது தேவியும் என்னோடு இறங்க எழும்புவதைக் கண்டேன். ஒரு கணம் எனது இதயத் துடிப்புக்கூட நின்றுவிட்டது.

(தொடரும்)


**பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்**

**சுத்த சைவ போசனத்திற்கும்**


**சிறந்த இடம்!**

விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957

**மலாயா கபே**

உரிமையாளர்: M. K. கதிரவேலு

36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

பிரிட்டனின் மிக உயர்ந்த கட்டடம்

பிரிட்டனில் 5 கோடி பவுண் செலவில் நிறுவப்பட விருக்கும் கட்டடத்தின் மாதிரி அமைப்பு.

அருள்வழி

# "இலங்கைத் தமிழர் அல்லல் தீர பிரார்த்தனைதான் வழி"

## ரிஷிகேசமுனிவர் உபதேசம்

"இலங்கையிலே தமிழர்களாகிய எங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களும் சங்கடங்களும் கொஞ்சமல்ல. இதிலிருந்து மீளும்வழி தெரியவில்லை. நாங்கள் என்ன செய்யவேண்டும்? எங்களுக்கு ஒருவழி சொல்லுங்கள்" என்று முன்னுள் பார்லிமெண்ட் பிரதிநிதியும் கண்டி திவ்ய ஜீவன சங்கத் தலைவருமான திரு. எஸ். பி. வைத்திலிங்கம், சமீபத்தில் ரிஷிகேசம் சென்றிருக்கையில் சுவாமி சிவானந்த முனிவரைத் தரிசித்தபோது அவரிடம் கேட்டாராம்.

**"திக்கற்றவருக்குத் தெய்வம் துணை. தெய்வத்திடம் பிரார்த்தனையைச் செய்வது ஒன்றுதான் இதற்குச் சரியான வழி"** என்று சுவாமியவர்கள் தெரிவித்ததாக, கண்டி தபோவன மூன்றுவது ஆண்டுவிழாவின் போது, திரு. எஸ். பி. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

அவருக்கு சுவாமிஜி எழுதியுள்ள ஒரு கடிதத்தில் அமைதிக்கும், இன்பத்துக்குமான மார்க்கத்தைத் தெரிவித்திருக்கின்றார். பலருக்கும் பயன்படுமாதலால் அக்கடிதத்தின் மொழிபெயர்ப்பை இங்கு தருகின்றோம் :-

**மகத்தான அமர ஆத்மாவே,**

வணக்கம். இமயமலையில் உள்ள ரிஷிகேசம் தங்களுக்கு மனச்சாந்தியை அளித்தது போல, உண்மையான ரிஷிகேசம் (ஆண்டவன்) நமது இதய மத்தியிலே வீற்றிருக்கின்றார். காலையிலும், மாலையிலும், அமைதியான நேரத்திலே அவரது பாதத்தாமரையை தியானிக்க. சாந்தி, இன்பம் இவற்றின் ஊற்றுக்கண்ணே நமக்குச் சொந்தமாகிவிடும்.

சாந்தி என்பது ஆசையற்றவர்களுக்கே போதுமென்ற மனமுள்ளவர்களுக்கே இன்பம். தர்மகுணம் உள்ளவர்களுக்கே சுபீட்சம். நல்ல உழைப்பு உள்ளவர்களுக்கே வெற்றி. சிந்தனையாளருக்கே ஞானம். தியானம் செய்பவர்களுக்கே அவர் தலம்.

ஆண்டவனின் அருள் ஆசி உங்கள் அனைவருக்கும் என்றென்றும் இருக்குமாக!"

### வாழ்க்கையின் லட்சியம்

"வாழ்க்கையின் லட்சியம் ஈடேற உடலும் மனமும் கருவிகளாகவுள்ளன. இவற்றைக் கட்டுப்பாட்டிற் கொண்டுவர ஆத்மசாதனை செய்யவேண்டிய தவசியம். பூர்வஜன்மத்தில் விட்ட குறைகளைப் பூரணப்படுத்தவே இறைவன் எங்களுக்கு மானிடப்பிறவி அளித்துள்ளார். குளிக்கவந்த நாம் சேற்றைப் பூசிக்கொள்ளக் கூடாது. மனதில் அழுக்கு ஏற்படாவண்ணம் அகத் தூய்மை அடைந்துவிட்டால், மீண்டும் பிறவித் துன்பம் அடைய நேரிடாது."

உள்முகப்பட்ட வாழ்க்கை என்பதே அந்த யோகம். சாதாரணமாக மனம் விஷய சுகங்களில் ஈடுபட்டு, சக்தி இழந்து அல்லற்படுகின்றது. வருடத்தில் ஓரிரண்டு தினங்களேனும் மனதைக் கட்டுப் படுத்திப் புலன்களைச் சிதற விடாமற் பாதுகாத்தால், அது தூய வாழ்க்கைக்கு அடிகோலும். வாழ்க்கையின் லட்சியம் ஆத்மலாபமடைவதே. இந்த லட்சிய ஈடேற்றத்துக்கு உள்ளத்தூய்மையும் மனக் கட்டுப்பாடும் அவசியம்.

என்றிவ்வாறு யோகிராஜ் சச்சிதானந்தர் கண்டி தென்னங் கும்பராவில் மகாவலி கங்கையின் கரையிலே இயற்கையழகு கொஞ்சும் சூழ்நிலையில் அமைந்துள்ள தபோவனத்தில், சென்ற வியாழனன்று அந்தர் யோகமெனும் தவப்பயிற்சியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

கூட்டுப்பிரார்த்தனை, ஆலய வழிபாடு, யோகாசனப்பயிற்சி, நதியில் நீராடல், பிராணயாமம், ஜபம், தியானம்; மௌனம், வாசித்தல் எனப் பலவும் சாதனையில் இடம் பெற்றிருந்தன. நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் ஆண் பெண்கள் பலர்வந்து இதில் ஈடுபட்டனர்.

### மாமரமும், சிட்டுக்குருவியும்

"அதோ அந்த மாமரத்தை நான் தினமும்தான் பார்த்து வருகிறேன். நூற்றுக்கணக்கில் அது பழங்களைத் தருகிறது. ஆனால் ஒன்றையாவது அது தானே ருசிபார்த்தது கிடையாது. அதன் தியாக உணர்வு அவ்விதம் இருக்கிறது. ஆனால் மனிதனோ!"

"சின்னஞ்சிறு குருவிகளைப் பாருங்கள். எவ்வளவு சந்தோஷமாகத் திரிகின்றன. வருங்காலத்தைப்பற்றிய கவலை அவற்றுக்குக் கிடையாது. காலம் முடிந்து அவை சாகலாம். அல்லது மனிதனின் கல்லடிபட்டுச் சாகலாம். ஆனால் பட்டினியால் அவை சாவதில்லை. ஆனால் நாம் வருங்காலத்தையிட்டுப் படும் ஏக்கமோ?

"யோகம் ஒவ்வொருவருக்கும் அவசியம். ஆனால் யோக சாதனைமூலமோ, உடலை வெகுகாலம் வைத்திருப்பதின் மூலமோ ஒருவன் உயர்ந்தவனாகான். தியாகபுத்தி வேண்டும். பிறருக்குப் பயன்பட வாழவேண்டும்" என்பது போன்ற பல கருத்துக்களைச் சுவாமி வெளியிட்டார்.

### வாழமுடியாத இளம்பெண்கள்

"தமிழ்ச் சமூகத்தில் பிறந்ததற்காக, இந்துமதத்தினராய்ப் பிறந்ததற்காக எத்தனை இளம்பெண்கள் இன்று வாழமுடியாதவர்களாக இருக்கிறார்கள்! இந்தச் சீதனமுறை ஒழியாதா? இளைஞர்களுக்குத் துணிவு சிறிதேனும் ஏற்படாதா!" என்றும் இடித்துக் காட்டினார். "நமது சகோதரிகள் தெருவில் திக்கற்று நின்றால் நாம் சகிப்போமா? ஆனால் நமது சகோதரிகளிற் பலர் புகலிடம் இன்றி, வாழ்க்கையின்றித் தவிக்கின்றார்கள். அவர்களுக்காக ஒரு ஸ்தாபனம் அமைக்கவேண்டிய பொறுப்பு சமூகத்துக்குண்டு. இதற்காகக் கூட்டம் அமைத்து அவர்களைப் பாதுகாத்து, அவர்களது தியாக சேவைகளைச் சமூகத்துக்குப் பயன்படும்படி செய்யும்போதுதான் நம் சமூகம் தலைதூக்கி முன்னேற முடியும்" என்றார்.

ஆசனப்பயிற்சியால் பலர் தீராத வியாதிகளின்றிக் குணமடைந்ததைப்பற்றிப் பலர் தங்கள் அனுபவங்களை வெளியிட்டனர்.

### கைலாச தரிசனம்

சுவாமிகளது கைலாச யாத்திரையின்போது எடுக்கப்பட்ட பல அரிய புகைப்படக் காட்சிகளைக் காட்டியதுடன் ஹாங்காங்கில் நடத்திய ஆத்மீகப் பேச்சுகளையும் "டேப் ரிகார்டரி"லிருந்து ஒலிபரப்பினர்.

சென்ற ஞாயிறு நான்காம் நாளன்று, திவ்ய ஜீவன சங்கத்தின் வருடவிழாவில், யோகாசனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. திருக்கோணமலை ஆசிரியை செல்வி ராஜலட்சுமி, பி. கே. பி. ஹரன், தலைவர் திரு. எஸ். பி. வைத்திலிங்கம் இவர்கள் பேசியபின் சுவாமிகளின் முடிவுரையுடன், நன்றிகூற விழா இனிது முடிந்தது.

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | சூ. பு. | |
| | இவ்வாரக் கிரகநிலை 8உ மிது-புத | | செ. வெ. |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(6-6-59 — 12-6-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) சிநேகிதர்வழியால உதவிப்பேறுகள் கிடைக்கும். இடமாற்றங்கள் ஏற்படக்கூடும். பெண்களின் உறவால் சில தொல்லைகள் நீங்கப்பெறும். தொழிற் பேறுகள் மகிழ்ச்சிதரும்.

**இடபம்:** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம். ரோகினி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) வியாபாரத்துறையில் மிகுந்த பிரயாசைகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வாகனங்களினால் கஷ்டங்கள் உண்டாகும். வியாபாரக்குறைவும், இனப்பகையும் சஞ்சலத்தைத் தரும்; அரசசேவைகளில் கஷ்டங்கள் தோன்றும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம் திருவாதிரை. புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) பண விருத்தி உண்டாகும். களியாட்டங்களில் மனம் அதிகமாக ஈடுபடும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் நிகழும். சத்துருக்களால் தீங்குண்டானாலும் அது பின்னர் நன்மையையே தரும். புதிய கருமங்களில் மனம் சதா நாடிக்கொண்டிருக்கும்.

**கடகம்:** (புனர்பூசம் 4-ம் பாதம். பூசம் ஆயிலியம்) எதிர்பார்க்காத முறையில் சில கஷ்டங்கள் தோன்றும். நடந்த கருமங்களில் நன்மையே உண்டாகும். அரசகருமங்களிற் சில மாற்றங்கள் ஏற்படும். குடும்பக் கருமங்கள் குழப்பமாயிருக்கும், பணத்துறையில் இது நல்லதொரு வாரம்.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தாரம் 1-ம்பாதம்) குடும்பத்தில் மனக்கவலை நிலவும், எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். பெண்களின் உறவினால் சில தொல்லைகள் நீங்கும். அனேக நாட்களாக மனதிற் குடிகொண்டிருந்த எண்ணம் இவ்வாரத்தில் நிறைவேறும். நண்பர்களுடன் விபரீத விளக்கங்கள் உண்டாகும்.

**கன்னி:** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம். அத்தம். சித்திரை 1-ம் 2-ம் பாதம்) இவ் வாரம் இடஞ்சல்களிலிருந்து நீங்குவதில் சிறிது வருத்தம்அடைவீர். மேல் அதிகாரிகளின் உதவி அதிகரிக்கும். மாதாவழி உறவினர்கள் மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு. இரகசியப் பகைவர்களின் தொந்தரவுகளைச் சாமர்த்தியத்துடன் தவிர்த்துக்கொள்வீர்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) இனத்தவர்களுடன் சண்டை சச்சரவுகளை விலக்கிக்கொள்ளவும், மாதா வழியுறவினர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. மேலதிகாரிகள் அதிக உதவியாயிருப்பர். தேகசுகம் குறைவடையும். வார இறுதியில் மகிழ்ச்சிகரமான செய்திகள் ஏற்படும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம் கேட்டை) நண்பர்களும் இனத்தவர்களும் உதவியாய் இருப்பார்கள். செலவுகள் அதிகரிக்கும். இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகள் உண்டாகலாம். புதுமுயற்சிகள் கவனமாய்க் கையாளப்பட வேண்டும். உம்முடைய கருமங்களிற் சில மாற்றங்கள் ஏற்படும்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்ரமடம் 1-ம் பாதம்) பணத்துறையில் இது நல்ல வாரம். நண்பர்கள் அதிக உதவியாயிருப்பர். சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் நிலையான இடம்பெறும். நீர் முயன்று உழைப்பதோடு புதுப் பொறுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டிவரும்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம். திருவோணம் அவிட்டம் 1, 2-ம் பாதம்) பிரயாணத்திற் சில கஷ்டங்கள் உண்டாகி நீங்கும். சமயக் கோட்பாடுகளில் வெறுப்பு அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின்பேரில் நிறைவேறும். நடந்த கருமங்களினால் வியாச்சியத் தொல்லைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சுதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதம்) உத்தியோக உயர்வினால் பெருமக்களின் நட்பு அதிகரிக்கும். வியாபாரத் துறையில் வருமானம் அதிகரிக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்கள் இவ்வாரம் மகிழ்ச்சியூட்டும். தடைபட்டு இருந்த சில கருமங்கள் சடுதியாய் நிறைவேறும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) வார இறுதியில் தேகசுகம் சிறிது குறைவடையும். பிரயாண அலைச்சலுடன் பழிச் சொற்களும் கேட்கவேண்டி நேரிடும். புத்திரர்மீது மன வெறுப்புத் தோன்றும். வார இறுதியில் மனக்குழப்பங்கள் தோன்றி விரைவில் நீங்கும்.

# ஸ்ரீதனம் என்றால் என்ன?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடகட என்று கை கூசாமல் செலவழிக்கின்றாள். 'ஏனப்பா இப்படிச் செலவழிக்கின்றீர்' என்றால், "அப்பாவுடன் நான் இருக்கும் பொழுதெல்லாம் எந்த நேரத்தில் என்ன வேண்டுமென்றாலும் உடனே வாங்கித்தருவார். இப்பொழுது தான் இப்படிக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்று அப்பொழுதுதானிருந்த அருமையைப் பற்றிக் கூறி அழுவாள். (இதை அறிந்து தானே அவள் அப்பா என்னுடனே விட்டிருக்கின்றார்.)

நான் சில வேளைகளில் சரி, அப்பாவுடனேயே போயிருந்து விடுமப்பா என்று என் மாமனார் வீட்டிற் கொண்டுபோய் விட்டாலும், "பார்க்கி"றவங்கள் என்ன சொல்லுவார்கள், நீ உன் புருஷனோடு போயிரம்மா என்று வீடுதேடிக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போகின்றார் தம் மகளை என் மாமனார்.

கலியாணம் செய்த நாட்களில் ஏதோ அவள் இஷ்டத்திற்கு நடந்து கொண்டதற்காக இப்பொழுதும் அப்படி நடந்துகொள்ள முடியுமா? அப்பொழுது வாங்கிய கடன் இன்னும் கொடுத்து முடியவில்லையே! மீண்டும் வாங்குவதென்றால்......

இதற்குள் என் உத்தியோகமும் போவதென்ற நினைப்பும் அவளை இப்பொழுது வாட்டி வருகின்றது. "கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்" இது சும்மா சொல்லுக்குச் சொல்வது தானே. நானிப்பொழுது அவள் கண்முன் ஒரு புல்!

அவள் கொஞ்சம் படித்தவள் என்று சொன்னேன் அல்லவா, தானும் ஏதாவது பாடசாலையில் படிப்பித்துத் தன் கையில் கொஞ்சம் பணம் வைத்திருக்கப் போகின்றாளாம். அவள் உழைத்தால் அந்தப்பணம் அவளுக்குச்சொந்தம். நான் பாடுபட்டுஉழைத்தால்அது எனக்குச் சொந்தமில்லை. என்ன நீதி? பெண்ணுக்குக் கொரு நீதி ஆணுக் கொரு நீதி!

மணம் செய்ததன் பின் தான் பணத்தின் அருமை தெரிய வந்தது எனக்கு. அப்பொழுதெல்லாம் சீதனம் வாங்காமல் கலியாணம் செய்தாலென்ன என்று சில இளைஞரைப் போல் நானும் சிந்தித்ததுண்டு. ஆனால் அந்தச் சீதனத்துக்கு இப்படி வட்டியை என் மனைவி வாங்குவாள் என்பது எனக்குத் தெரியுமா? உண்மையில் சீதனம் என்றால் ஒவ்வொரு மாமனும் கொடுக்கும் 'முதல்', இதை வட்டியோடு சேர்த்து வாங்கவே தன் மகளையும் அனுப்புகின்றார் அந்த மாமனார். அவ்வளவே தான்.

விளையாட்டுப் பகுதி

# சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டும் நிறவேற்றுமையும்

தென் ஆபிரிக்க விளையாட்டு வீரரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, நிறவேற்றுமைகள் கருதப்படமாட்டாதென்று சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவினர் செய்துள்ள தீர்மானத்தை, தென் ஆபிரிக்காவிலுள்ள நிறவேற்றுமையற்ற விளையாட்டுச் சங்கத்தின் தலைவரான திரு. கே. அரங்கசாமி வரவேற்றுள்ளார். தென் ஆபிரிக்காவில் நிறவேற்றுமையில்லாத விளையாட்டுகளை வளர்க்க நடாத்தப்படும் போராட்டத்திற்கு இத்தீர்மானம் முக்கியமானவொரு வெற்றியை ஈட்டித் தந்துள்ளதென்று அவர் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவின் தீர்மானத்தைப் பாராட்டிக் கூறினர்.

## அமெரிக்க ஓட்டப் பந்தயச் சாதனைகள்

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் சென்ற சனிக்கிழமை ஓட்டப் பந்தயங்கள் நடைபெற்றன. இப்பந்தயங்கள் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக நடைபெற்று வருபனவாகும். இந்த வருடாந்த ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்க ஓட்டம், பாய்ச்சல் முதலிய விளையாட்டுகளில் திறமை பெற்றவீரர் புதிய சாதனைகளை ஈட்டியுள்ளனர். கைக்குக்கை கம்பிமாறிக் கொடுக்கும் 4×100 யார் ஓட்டத்தில் (Relay) அவர்கள் உலக சாதனைக்கு ஈடாகச் செய்துள்ளனர். இந்த ஓட்டம் 39. 6.விநாடிகளில் ஓடப்பட்டது. கொஸ்கோகுக் என்னும் மாணவன், தன்னுடைய முதலாவது பல்கலைக்கழக ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு, 100யார்ஓட்டப் பந்தயத்தில் முதல் இடம் எடுத்ததுடன், அதிலே ஈட்டப்பட்டுள்ள உலக சாதனையான 9·3 விநாடி நேரத்திலேயே ஓடியுள்ளான்.

துள்ளிக் குதித்துப் பாயும் பாய்ச்சலில் (Hop Step and Jump) அமெரிக்காவில் இதுவரை இருந்து வந்த சாதனையான 52 அடி 1 அங்குலம் முறியடிக்கப்பட்டது. இப் பந்தயத்தில் கலந்து கொண்ட அல் அன்ரூஸ் 52 அடி 5 1/4 அங்குலம் தாண்டிப் பாய்ந்தார்.

### ஐரோப்பா வெற்றிப்பந்தயம்

ஐரோப்பா வெற்றிப் பந்தயம் உதைபந்தாட்ட விளையாட்டுக்காக நடை பெற்றது. அப் பந்தயத்தில், யூகோஸ்லேவியா புல்கேரியாவை 2—0 கோல்களால் தோற்கடித்தது. ஒரு கோல் இடைவேளைக்கு முன்னரும், ஒரு கோல் அதற்குப் பின்னருமாக அடிக்கப்பட்டன.

## பிரெஞ்சு டென்னிஸ் பந்தயம்

பிரிட்டனின் 18 வயது யுவதியான குமாரி கிறிஸ்றீன் ரூமனும், இத்தாலியின் 25 வயது நிக்கோலாமையற்ராஞ்செலியும் பிரெஞ்சு டென்னிஸ் பந்தயத்தில் தனி நபர்களின் போட்டியில் முதற் பரிசுகளைப் பெற்றனர். குமாரி கிறிஸ்றீன்ரூமன் பெண்களின் போட்டியில் முதல் ஸ்தானத்தைப் பெற்ருர். நிக்கோலாபையஸ்ராஞ்செலி ஆண்கள் போட்டியில் முதல் இடத்தை எடுத்துக் கொண்டார்.

சினிமா உலகம்

# குவாய் ஆற்றின் மேல் பாலம்

## [ The Bridge on the River Kwai ]

பச்சைப்பசேலென்று பரந்த பூமியின் எழிலை வார்த்தைகளாற் சொல்லிவிட முடியாது. உயர்ந்த மலைகளும், அவற்றினின்றும் ஊற்றெடுத்துப் பாயும் நீர்வீழ்ச்சிகளும் கண்களுக்குக் குளிர்ச்சியை அளிக்கின்றன. ஈழவள நாட்டின் அழகை இவ்வளவு சிறந்த முறையிற் படம்பிடித்து உலகுக்குக் காட்ட நம்மவரில் எவரும் இன்றி, வெளிநாட்டார் இங்கு வந்து அப்பணியைச் செய்யவேண்டி இருக்கிறதே என்று எண்ணும்பொழுது எமது நிலையை நினைந்து வெட்கப்படவேண்டியிருக்கிறது.

ஒரு தீவு. அங்கே மிக்க நலமுடைய மரங்களும், விந்தைச் சுவையுடைய கனிகளும், எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகளும், அவற்றுக்கிடையே நகர்ந்துவரும் நதிகளும் காட்சி தருகின்றன. நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்களும் இலைக்கடல்களும் அக்காட்டில் ஒன்றுகூடி, பாரதியாரின் தீஞ்சுவைக் கவிதையையே நினைவூட்டுகின்றது. இதன் மத்தியில் கைதி முகாம் ஒன்று. யப்பானியரின் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் பிரிட்டிஷ் இராணுவ வீரர். இக்கைதிகளின் மேற்பார்வையாளனுகவிருக்கும் யப்பானிய இராணுவ அதிகாரி அத் தீவிலே ஒரு பாலம் அமைக்க வேண்டி இருந்தது. இப் பாலத்தை அவன் கைதிகளைக் கொண்டே கட்டிமுடித்துவிடப் பார்க்கிருன். ஆனல், கைதிகளுள் சிலர் பிரிட்டிஷ் இராணுவ உத்தியோகஸ்தர்கள். சர்வதேசச் சட்டப்படி இராணுவ உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கூலிவேலை செய்வித்தல் தவறு. இந்த உண்மையை பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி யப்பானிய தளபதிக்கு விளக்கியும், அவன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனல் கடைசியில் அவன் அப்பாலத்தைக் கட்டிமுடிக்கப் பிரிட்டிஷ் அதிகாரியின் உதவியையே நாட வேண்டி வந்தது. எனவே, பாலம் அமைக்கும் பொறுப்பை பிரிட்டிஷ் அதிகாரியே ஏற்றுக் கொள்கிருன். பிரிட்டிஷ் இராணுவம் சிறைவாசத்திலும் தன் மனம் சோராது, ஒரு பாலத்தைச் சிறந்தமுறையிற் கட்டி முடித்தது என்று சரித்திரத்திரத்தில் பெருமைபெறவேண்டும் என்று கட்டிமுடிக்கப் பட்ட பாலம், கடைசியில் உடைத்து நொருக்கப்படுகிறது.

பாலம் ஒன்றைச் சுற்றிக் கதை வளைந்தபோதிலும் அது நமக்கும் படத்திற்குமிடையே தகர்க்கமுடியாத பாலம் ஒன்றை அமைத்துவிடுகிறது.

தோல்வியிலும் தன்மானத்தைத் தளரவிடாது பாதுகாக்கும் பிரிட்டிஷ் இராணுவத் தலைவனுக நடித்து, தமது சிறந்த நடிப்பின்மூலம் நம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிடுகிருர் **அலெக் கினிஸ்**. இப்படத்தில் அவருடைய நடிப்புத் திறமை மிகச் சிறப்பாக அமைந்திருந்ததால், அவருக்கு ஹாலிவூட்டின் முதற் பரிசான 'ஒஸ்கார்' பரிசு கிடைத்தது.

யப்பானியக் கைதி முகாமில் இருந்து தப்பியோடும் இராணுவ வீரனுக **வில்லியம் ஹோல்டனும்**, அவன்மூலம் பாலம் அமைக்கப்படும் இடம், அதுசம்பந்தமான குறிப்புகள் முதலியவற்றை அறிந்துகொள்ளும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியாக **ஜாக் ஹோக்கின்ஸ்** என்பவரும் வழக்கம்போலத் திறமையுடன் நடித்துள்ளனர்.

யப்பானியத் தளபதியாக நடிக்கும் யப்பானிய நடிகர் தமது அமெரிக்க, பிரிட்டிஷ் சகாக்களுடைய நடிப்புக்கு ஈடு கொடுக்கும் முறையிற் திறம்பட நடித்துள்ளார்.

நம் மனதைவிட்டு அகலமுடியாத சில சம்பவங்கள் இப் படத்தில் நடைபெறுகின்றன. ஆனலும், நாம் எதை மறந்தாலும், உடைந்துகிடந்த பாலத்தருகில் நின்றுகொண்டு, தன்னைச் சுற்றிலும் கிடந்த பிணங்களைப் பார்த்தவண்ணம், இராணுவ டாக்டர்யுத்தத்தின் தத்துவத்தை இரண்டே இரண்டு வார்த்தைகளில் "பைத்தியம்! பைத்தியம்!" என்று விரக்தியுடன் கூறும் காட்சியை மறக்க முடியுமா?

—மின்மினி

## பன்மொழி பேசும் திரைப்படம்

நான்கு மொழிகள் பேசும் படத்தைத் திரையிடும் சாதனம் (புரஜக்டர்) ஒரு பிரிட்டிஷ் ஸ்தாபனம் தயாரித்திருக்கிறது. முதியோர் கல்வித்துறையிலும் காட்சி மூலம் கல்விப் போதனைப் பிரிவிலும் பயன் படக்கூடிய இந்தச் சாதனம் அண்மையில் லண்டன் ஒலிம்பியாவில் நடந்த சர்வ தேசப் புகைப்படச் சாதனங்கள் சந்தையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பெற்றிருந்தது.

படத்தைப் பார்க்கிறவர்கள், ஹெட்போனை அணிந்து கொண்டு கேட்க விரும்பும் மொழியின் ஸ்விட்சைத் திருப்பினல் ஒலியைக்கேட்க முடியும். லண்டன் காட்சியில் 'அணுப் பிளப்புக் கொள்கை' என்ற படத்தைத் திரையிட்டுக் காட்டினர்கள். ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ஆங்கில மொழிகளில் விளக்கவுரை பதிவு செய்யப்பட்டுள்ள இந்தப் படத்தை ஒரே சமயத்தில் நான்கு மொழி பேசுவோரும் பார்த்து (கேட்டு) மகிழ்ந்தார்கள்.


தாய்ப்பாலுக்கு நிகரான
சிறந்த மாற்றுப்பால்—

மில்க்கோஸ்




தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவே விரும்புவார்கள். உங்களால் அது முடியாது போனல், குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலான சிறந்த மாற்றுப்பாலைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முனைவீர்கள். சிசு உணவுகளில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரி நீரகைகள், கொழுப்புச் சத்துகள் மட்டும் இருந்தால் போதாது, அதில் தொற்று நோய்களை எதிர்ப்பதற்கும், சோகை மந்தம், எலும்பு உருகுதல் போன்ற வியாதிகள் பீடிக்காது தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கு முகந்த இரும்புச் சத்துகளும் விட்டமின் சத்துகளும் கொண்டதாகவிருக்க வேண்டும்.

மில்க்கோஸ் பத்திரமான, முழுச்சத்துள்ள சிசு—உணவாகும். இது சுத்தமான முழுப்பாலாடை நிறைந்த பசுப்பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்களை இது பூர்த்தி செய்கிறது.

மில்க்கோஸ், நன்கு பத்திரமாக குழந்தைகளின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகிறது. மில்க்கோஸ் நவீன ரீதியாகப் பொதியப்பட்டு, உங்களுக்கு பத்திரமாகவும், பரிசுத்தமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் ஊட்ட ஆரம்பியுங்கள்.

மில்க்கோஸ்

இன்றியமையாத சிசு—உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால்
தயாரிக்கப்படுகிறது

HLM 3486

# ஈழத் தமிழினம்
## நம்பிக்கை இழக்கலாகாது

இந்நாட்டுத் தமிழ்மக்கள் தங்கள் எதிர்காலநலனில் நம்பிக்கை யிழந்துவிடக்கூடாது. எப்படியும் நிலை சுமுகமடைந்து தக்க அந்தஸ்துடன் வாழக்கூடியகாலம் ஏற்படவே செய்யும். அதற்குமுன் எம்மைச் சிறுமையடையச்செய்த தீண்டாமை முதலிய தீய வழக்கங்களை நீக்குதல் வேண்டும். இவ்வாறு 31-5-59 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கொக்குவில் இளைஞர் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமைதாங்கிய திரு. எஸ். எச். பேரின்பநாயகம் குறிப்பிட்டார்கள். இவ் விழாவில் பங்குபற்றிய வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. சரவணமுத்து கம்பனின் ஒருசில கதைகளைக்கொண்டு கம்பரின் வாழ்க்கைநெறியை விளக்கினர். "வள்ளுவன் கண்ட சமுதாயம்" என்னும் விரிவுரை நிகழ்த்தவிருந்த மட்டக்களப்பு எம். பி. திரு. இராஜதுரை வராத காரணத்தால் அவருக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பில் திரு. சின்னத்தம்பி குறள் பாக்கள் சிலவற்றை விளக்கி அதனூடே வள்ளுவனின் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டினர்.

"பாரதியின் கண்ணோட்டம்" என்னும் பொருள்பற்றி திரு. இளங்கீரன் பேசுகையிற் பாரதியாரின் தமிழ் வாழ்த்து எப்படி இந்திய வாழ்த்தாக மாறி—அகில உலகையும் ஒன்ருக இணைக்கும் பொதுவுடைமைச் சமுதாயத்துக்கேற்றதாக விரிந்தது என்பதுபற்றி விளக்கினர்.

## சிலப்பதிகாரம்: மக்கள் இலக்கியம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு, கண்ணகியம்மன் தேவாலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவொன்றில், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை பேசும்போது குறிப்பிட்டதாவது;

"சிலப்பதிகாரம் சாதாரண மக்களின் இன்பதுன்பங்களைச் சித்திரிக்கும் ஒரு மக்கள் இலக்கியம். கண்ணகி வாழ்வுடன் தமிழர் கலந்து, அநீதியை எதிர்த்துப் போராடத் துணிய வேண்டும்."

### விடுதலைத் தினங்கள்

மட்டக்களப்பு எம். பி. திரு. இராஜதுரை சென்றவாரக் கடைசியில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மே 27 முதல் ஜூன் 5 ம் திகதிவரையுள்ள 10 தினங்களையும் தமிழ் பேசும் மக்கள் ஈழத் தமிழகத்தின் விடுதலைத் தினங்களாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும், அத்தினங்களில் தமிழினத்தின் சுதந்திரப் பாதையில் உயிர் நீத்த தியாகிகளை நினைவுகூர்ந்து பொதுக் கூட்டங்கள் நடாத்த வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

## சிகிச்சை நிலையத்தின் சகிக்கமுடியாத நிலைமை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஆலோசனைச் சபையின் கூட்டமொன்று டாக்டர் வி. ரி. பசுபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் டக்டர் ரி. கே. ஷேக்ஸ்பியர் சிகிச்சை நிலையத்தின் நிலைமை சகிக்க முடியாதிருக்கிறதெனவும், இதன் விளைவால் ஆஸ்பத்திரி ஊழியர்க்கும், அங்குள்ள நோயாளிகளுக்கும் அதிக கஷ்டம் ஏற்படுகிறதெனவும் கூறினர். இந்த நிலை மாறவேண்டுமென்று அக் கூட்டத்தில் பங்குபற்றிய டக்டர் தங்கள் ஏகோபித்த கருத்தைத் தெரிவித்தனர்.

## தமிழ்ப்பல்கலைக்கழகத்துக்கு நிதி திரட்டி உதவுக

யாழ்ப்பாணம்

திருக்கோணமலையில் நிறுவப்படவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஒவ்வொரு தமிழ் மகனும் பொருளுதவி புரிய வேண்டும். அதேவேளையில் சனசமூகநிலையங்கள், வாசிக சாலைகள் போன்ற பொது நிலையங்கள்யாவும் தமது சுற்று வட்டாரங்களில் நிதி திரட்டித் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினருக்கு உதவுமாறு இந்நிலையம் ஏனைய நிலையங்களை வேண்டிக்கொள்கின்றது, என்ற இத் தீர்மானம் ஓட்டுமடம் கலைவாணிசனசமூகநிலைய நிர்வாகசபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ந. நி)

# பால்பண்ணை நிர்வாகம்
## பொதுநல உணர்ச்சி அவசியம்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பாற்பண்ணை நிர்வாகம் சம்பந்தமாக எழுந்துள்ள புகார்களை ஆராய்வதற்காக கூட்டுறவு அபிவிருத்தி உதவி அதிகாரி திரு. வி. நடராஜா சபையின் விசேஷ பொதுக் கூட்டமொன்றை ஏற்படுத்தியிருந்தார். இக் கூட்டம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. திரு. நடராஜா தமது தலைமையுரையிற் பேசியதாவது: 1941ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இச் சபை அன்று தொட்டு வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. சமீப காலத்தில் இதன் நிர்வாகம் திருப்திகரமாக இல்லை. மோசமான பாலை அனுப்பிவைக்கும் அங்கத்தினரைச் சபையினின்றும் விலக்கியிருந்திருக்கவேண்டும். போட்டி உணர்ச்சியை அகற்றிப் பொதுநல நோக்குடன் உழைக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன். டக்டர் கே. சிவஞானரத்தினம், டக்டர் வி. இராஜலிங்கம் ஆகியோரும் பேசினர். தலைவர் டபிள்யு. எம். குமாரசுவாமி பேசும்போது சுத்தமான பால் கொடுப்பதே அங்கத்தவரின் இலட்சியமாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

### கொழும்பில் இசைவிழா

சைவமங்கையர் கழகத்தினதும் இலங்கை சங்கீத நாட்டிய சங்கத்தினதும் ஆதரவில் இம்மாதம் 5ஆம் 6ஆம 7ஆம் திகதிகளில்வெள்ளவத்தை சைவமங்கையர் கழகமண்டபத்தில் இசைவிழா நடைபெறும். இவ் விழாவில் சென்னை கலாக்ஷேத்திர சங்கீத வித்துவான் திரு. டி. பசுபதியும் பங்குபற்றுவார். விழா பிரதிதினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் நிகழ்ச்சிகள் உள.

### ஆசிரியர் சங்கங்கள் ஒன்ருக இணைய வேண்டும்

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் நிருவாக சபைக் கூட்டத்தில் பேசிய காரியதரிசி திரு. பி. கணபதிப்பிள்ளை இப்போது வெவ்வேருக இயங்கி வரும் ஆங்கில, தமிழ், சிங்கள ஆசிரியர் சங்கங்கள் ஒன்ருக இணைவது, கடமையாற்றுவதின் நற்பேறுகளை எடுத்துக் கூறினர்.

ஜுன் மாதம் 10ம் திகதி சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெறவேண்டுமென்று சபையோர் தீர்மானித்தனர். கூட்டத் தலைவர் திரு. ஏ. ஸீ. செல்வராசா ஆசிரியர் சங்கங்களின் அங்கத்தவர்கள் தொகையை அதிகரிப்பதின் அவசியத்தை வற்புறுத்தினர்.

### தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை

தெல்லிப்பளை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவிய பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரின் நினைவுநாள் சமீபத்திற் கொண்டாடப்பட்டது. பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசுவாமி தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் தமது அறிக்கையை வாசித்தார். மனேஜர் திரு. தெ. து. ஜெயரத்தினம் பாடசாலையின் வளர்ச்சியைப்பற்றிப் பேசும்போது சைவத்தையும் தமிழையும் இக்காலத்தில் வளர்க்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். மாணவர்களின் ஆடல் பாடல்களும் நடைபெற்றன.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 12 திரைகளில்

★ எம். ஜி. ராமச்சந்திரன்
★ எம். என். நம்பியார்
★ பி. எஸ். வீரப்பா
★ ஜே. பி. சந்திரபாபு
★ பி. பானுமதி
★ எம். என். ராஜம்
★ பி. சரோஜாதேவி

மற்றும் பலர் நடித்த



நாடோடி மன்னன்

எம். ஜீ. ஆர். பிக்சர்ஸ்


டைரக்ஷன்: எம். ஜீ. ராமச்சந்திரன்

ஸ்ருடியோ: வாகினி & விஜயா

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் திரைகளில்

அன்புக் கணவன் முன் பிஞ்சுக் குரலில் பேசும்போது கொழுந்தனைக் கண்டித்து அறையும் கட்டத்தில் வெளுத்துக் கட்டுகிருள் அமுதா.........



சமுதாய சீர்திருத்தம் அங்கங்கே காணப் படுகிறது அத்தனையும் அமையப் பெற்றது.

எஸ். எஸ். ராஜேந்திரன்
பண்டரிபாய்
டி. ஆர். ராமச்சந்திரன்
மைனுவதி
தேவிகா
பாலாஜி
ரங்கராவ்

நடித்த

அன்பு எங்கே

**சிலோன் என்றறெயின்மென்ற்ஸ் ஸ்தாபனத்தார்**
**வெகுவிரைவில் வெளியிட விருக்கும் படம்!**

★ இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன்
★ எஸ். வரலெட்சுமி
★ எம். என். ராஜம்

முதலிய சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்

# சிவகெங்கைச் சீமை

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் வீறுகொண்ட வீர ஏடுகளின்
வரலாற்றைச் சித்திரிக்கும் படம்!

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

**சென்ரல்** *தினசரி பிற்பகல் 3-மணி — மாலை 6-15 இரவு 9-30 மணி*
(மருதானை)

பம்பாயில் நான்கு மாதங்களுக்கு மேல் ஓடிப் பெருமை பெற்ற நகைச்சுவை நிறைந்த

# சால்டி - கா - நாம் - காடி

(ஹிந்தி)

ஓர் அற்புதக்காதல் சித்திரமாகும்!

நடிகர்கள்:– அசோக்குமார், மதுபாலா, கிஷோர்குமார், ஹெலன் முதலியோர்.

**சிரித்து மகிழுங்கள்!** **பார்த்து இன்புறுங்கள்!**


## ஜூன் மாதம் 11-ம் தேதி வியாழக்கிழமை தொடக்கம்

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) அசோகமாலா (நீர்கொழும்பு) வேல்ஸ் (கண்டி) கிங்ஸ் (பதுளை)

இப்பொழுது திரையிடப்படுகிறது — வின்ஸர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன்
பத்மினி
எம். என். ராஜம்
டி. ஆர். ராஜகுமாரி
லலிதா
டி. பி. முத்துலெட்சுமி
ஈ. வி. சரோஜா
எம். என். நம்பியார்
வி. ஆர். ராஜகோபால்
(லேட்) என்.எஸ். கிருஷ்ணன்

முதலிய சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்



பின்னணி:–
டி. எம். சௌந்தரராஜன்
பி. சுசீலா, சிதம்பரம் ஜெயராமன்
ஏ. பி. கோமளா
சீர்காழி கோவிந்தராஜன்
எஸ். சி. கிருஷ்ணன்
ரத்னமாலா, ஜமுனாராணி
எம். எல். வசந்தகுமாரி
பி. லீலா, பகவதி
ராஜலெட்சுமி

இப்படம் 1958ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த தமிழ்ப்படம் என இந்திய அரசாங்கத்தினரால் பரிசளிக்கப்பட்டது

# தங்கப் பதுமை


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதி வெளியிடப்பெற்றது.